
கல்கி
KALKI 28.1.96 ரூ. 3.00
ஷைனி :
சினிமா வாய்ப்பை மறுத்து ஓடுகிறார்!


மலரின் இதழ்களென
உடலுடன் உறவாடிடும்
மிருதுவான உணர்வு...
பார்த்திடும்
கண்களுக்கும்
ஈர்த்திடும் மகிழ்வு.
பெல்காம்
Sharda®
SAREES
பட்டு - பாலியெஸ்டர் புடவைகள்,
பாவடைகள்
எல்லா பிரபல ஜவுளி கடைகளிலும் கிடைக்கும்

அருணா (ஆனந்த்) ஓர் அறிமுகம்!



"எனக்கு விளம்பரம் பிடிக்காது" என்று அருணா சொல்ல முடியாது. அருணா? சர்வதேசப் புகழ் 'செஸ்' ஆனந்தை மணக்க இருப்பவர் என்றால் மீடியாவின் பார்வை அவர் மீது படத்தானே செய்யும். அது மட்டுமல்ல. மேற்படிப்புக்கு இவர் தேர்ந்தெடுத்த சப்ஜெக்டே 'விளம்பரம் மற்றும் மக்கள் தொடர்பு' தான். இப்போது பணியாற்றுவதும் ஒரு விளம்பர நிறுவனத்தில்.

ஆனந்த் எப்போதிலிருந்து பரிச்சயம்? எத்திராஜ் கல்லூரியில் அருணா பி.காம் படித்தபோதா? அல்லது மேற்படிப்புக்காக டில்லி சென்றிருந்தபோதா?



• பெற்றோருடன். அருணா...

அதெல்லாம் இல்லையாம். "இது மிகவும் சம்பிரதாயமாகப் பெரியோர்களால் பார்த்து நிச்சயிக்கப்பட்ட திருமணம்" என்றார் ஆனந்தின் அம்மா. "ஜாதகம் போன்ற விஷயங்களில் ஆனந்துக்கு நம்பிக்கை உண்டா?" என்றோம். "அவனுக்கு இருக்கோ இல்லையோ, எங்களுக்கு நிறைய இருக்கு."


"இரண்டு குடும்பங்களுக்கும் அறிமுகமான நண்பர் ஒருவர் மூலமாக ஜாதகப் பரிமாற்றம் செய்து கொண்டோம். கார்த்திகைக்குக் கொஞ்சம் முன்னேதான் இது நடந்தது. விருவிருன்னு முடிவாயிடுத்து. கல்யாணத்தைப் பற்றிய டீடெய்ல்லையெல்லாம் மார்கழிக்குப் பிறகுதான் ஒர்க் அவுட் பண்ணணும்" என்றார் ராணி ஆனந்த் - ஆனந்தின் வருங்கால மாமியார். கல்யாணத் தேதி மட்டும் நிச்சயமாகி விட்டது. ஜூன் 27.

'ஆனந்தின் மனைவி' என்றே இனி அறியப்படும் வாய்ப்பு அதிகம் என்றாலும் அருணாவுக்கென்று தனிமுகம் உண்டு. பரத நாட்டியம் தெரியும். அரங்கேற்றம் கூட ஆகியிருக்கிறது. ("கலாக்ஷேத்ராவைச்



" 'எதிரொலி' நிகழ்ச்சி முடிஞ்சுடுத் தும்மா. இளிச்சது போதும்...! நார்மலா இருங்க!"

- லெ. நா. சிவகுமார்



போலீஸ் இன்ஸ்பெக்டர் : ஏன்யா பஸ் டிரைவர்... எதுக்கு யானை மேலே பஸ்ஸை இடிச்சே?"

பஸ் டிரைவர் : முன்னால போன சைக்கிள்காரரு யானையை மறிச்சிட் டாருங்க...!"

- கே. அனிதா

• • • • •

ரயில் சிநேகம்தான் இது!

● பம்பாய் நகரத்தில் காய்கறி விற்பவர்கள், முளை கட்டிய பயறு, பட்டாணி, கொத்துக்கடலை, மொச்சை ஆகியவையும் விற்பார்கள். நாம் ஊற வைத்து முளைக்கட்ட வேண்டாம். இதனைச் சுண்டல் போலச் செய்து மசாலா போட்டு "உசல்" என்று சப்பாத்திக்குத் தொட்டுக் கொள்வார்கள். நல்ல சத்துணவு.

● அலுவலகம் செல்பவரில் பலர் தினந்தோறும் மின்சார ரயிலில் குறிப்பிட்ட பெட்டியில் அருகருகே அமர்ந்து பயணிப்பதால் சிநேகிதம் வளரும். என் சிநேகிதி ஒருத்தி ஃப்ளாட் வாங்க இரு ரயில் சிநேகிதிகள் தலா ரூ. 10,000/- வட்டியில்லாக் கடன் கொடுத்தார்கள். இத்தனைக்கும் அவர்களுக்கு இவளின் வீட்டு விலாசம் கூடத் தெரியாது! ரயில் சிநேகம் இந்த அளவுக்கு நெருக்கமாவது பம்பாயில் தான்.

- சுமதி மோகன்

சேர்ந்த . வெங்கடாசலபதின்றவர் கிட்டே கத்துண்டேன்"). ஓவியம் வரைவதில் வெகு ஆர்வம் ("முன்னேயெல்லாம் இயற்கைக் காட்சிகளைத்தான் வரைவேன். இப்போ அப்ஸ்ட்ராக்ட ஓவியங்களையும் வெற்றிகரமாக ட்ரை செய்யறேன்") வீணை வாசிக்கத் தெரியும். லோக்கல் பத்திரிகைகள் மற்றும் கல்லூரி மேகஸின் என்கிற அளவில் இவரது கதைகளும் வெளியாகி உள்ளன.

"ஒரு ஸ்போர்ட்மேன்தான என் கணவரா வரணும்னெல்லாம் நான் யோசித்த தில்லே. திடீர்னு வேகமா இந்த டெவலப்மெண்ட்ஸ் ஆயிடுச்சு" என்றார் இருபத்திரண்டு வயது அருணா.

ஒரு 'சர்வதேசப் புகழ்' கணவராகப் போகிறார் என்றதும் நடுக்கமா? வானத்தில் மிதக்கும் உற்சாகமா?

"நிச்சயம் நடுக்கமில்லே. ஒரு நல்ல மனிதரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம் என்கிற மகிழ்ச்சிதான்."

பெரியவர்கள் ஒத்துப் போன பிறகு ஆனந்த்தும் அருணாவும் ஒரு ஒன்-டு-ஒன் பேச்சுவார்த்தை நடத்தினார்களாம். "எங்களாலே அனுசரிக்க ஒத்துப் போக முடியும் கிறதை அந்த சந்திப்பில் தெரிஞ்சுக் கிட்டேன். எங்க ரெண்டு பேரையுமே 'ரொம்ப சோஷியல்'னோ, 'ஆனாலும் கூச்ச சுபாவம்'னோ வர்ணிக்க முடியாது. அடிப்படை விஷயங்களிலே எங்களுக்குள் கருத்து வேறுபாடு இல்லேங்கிறதை நிச்சயம் செய்துக்கிட்டோம்" என்றார் அருணா.

அருணாவுக்கு ஒரே உடன்பிறப்பு. அண்ணா அர்ஜுன். சி.ஏ. முடித்து விட்டு பம்பாயில் வேலை செய்கிறார்.


"சமீபத்தில் காஸ்பரோவிடம் இறுதிச் சுற்றில் ஆனந்த் தோற்றபோது எப்படி இருந்தது?"

"அப்போ நான் பம்பாயிலே இருந்தேன். நான் வேலை செய்யும் நிறுவனம் என்னை அங்கே பயிற்சிக்கு அனுப்பியிருந்தது. ஒரு இந்தியப் பிரஜைன்ற முறையிலே எனக்கு அந்த நியூஸ் வருத்தமாகத்தான் இருந்தது" என்ற அருணாவிடம் "நீங்கள் நன்றாக செஸ் ஆடுவீர்களா?" என்றோம்.

"இதுவரை செஸ் ஆடியதேயில்லை" என்றார்.

— ஜி.எஸ்.எஸ்.

சுஜாதா பக்கம்



டெலிவிஷனில் இசைக் கச்சேரிகளைக் கேட்கும்போது அவ்வப்போது பாட்டில் ஈடுபாடு இல்லாமல் போய் விடும். காரணம் காமிராக்காரர். மகா டைட் க்ளோசப்பில் பாடகரின் தொண்டைக்குள் உள்நாக்கு வரை கொண்டுபோய் விடுவார் அல்லது தம்புரா மீட்டும் இளம் பெண்மேல் நிறுத்தி நிதானமாக மேலிருந்து கீழ் உலவுவார். கவனம் கலைக்கப்பட்டு விடும். மேலும் பாடகியின் காதோர லோலாக்கு, புடைவை என்ன விலை இருக்கும், பாடகர் அவ்வப்போது வாயில் போட்டுக் கொள்வது என்ன சமாசாரம், போன்ற கவனக் கலைப்புக்களும் உண்டு.

சபாவில் சீசன் டிக்கெட் வாங்கி வரிசை தேடும் கிரிசைகள் என்பது ஒரு தனிப்பட்ட மைலாப்பூர் உப கலாசாரம். அதில் சங்கீதம் என்பது பின் சீட்டு. சங்கீத கச்சேரி கேட்க ரேடியோதான் உகப்பானது அதுவும் பண்பலையில்.

கர்நாடக சங்கீதம் பாடுபவர்களின் ஏ, பி வரிசையை உக்கிரமாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏகப்பட்ட அபசுரம், நடுங்கு குரல் கேஸ்கள் எல்லாம் பழைய ஞாபகத்தில் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

சென்னை ரேடியோவின் டைரக்டர் திருவேங்கடம் அவர்களையும் திரு ஆவுடையப்பனையும் சந்தித்துப் பொதுவாக ரேடியோ பற்றி சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தோம். ரேடியோ நன்றாக இருக்கிறது இல்லை என்று பொதுக் கருத்து தெரிவித்து விட்டு. பொறுப்பில்லாமல் இருப்பதற்குப் பதிலாக, கீழ்க் காணும் யோசனைகளைச் சொன்னேன்!

அறிவிப்பாளர்களுக்குத் தமிழ் உச்சரிப்பு பயிற்சி வேண்டும்; குறிப்பாக 'ல', 'ள', 'ன', 'ண'.

தூய கர்நாடக சங்கீதம் கொடுத்துவிட்டு உடனே பேட்டை ராப் அல்லது மைக்கெல் ஜாக்சன் கொடுத்தால் சில முதியவர்கள் ஆடிப் போய்விடுவார்கள். மூடு மாற்றம் மிருதுவாக இருக்க வேண்டும். இடைவேளையில் எதாவது பேச்சு அல்லது தகவல் அல்லது செய்தித் தலைப்புக்கள் சொல்லலாம். எந்தப் பேச்சும் ஐந்து நிமிஷத்துக்கு மேல் கூடாது; மிஞ்சிப் போனால் பத்து நிமிஷம்.

'வழிபாடு' என்று குணங்குடி முஸ்தான் சாகிபு, ரட்சணிய யாத்ரிகம் எல்லாவற்றையும் ஒரே ராகத்தில் மாமிகளை வைத்துப் பாடுவதை உடன் நிறுத்தி, ஒரு நாளைக்கு ஒரு மதம் என்று அர்த்தம் தெரிந்தவர்களைப் பாட வைக்க வேண்டும்.

கர்நாடக சங்கீதம் பாடுபவர்களின் ஏ, பி வரிசையை உக்கிரமாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏகப்பட்ட அபசுரம், நடுங்கு குரல் கேஸ்கள் எல்லாம் பழைய ஞாபகத்தில் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஸிடி, டாட் போன்ற டிஜிட்டல் முறை ரிக்கார்டுகளிலிருந்து நேரடி ஒலிபரப்பு வசதி செய்ய வேண்டும். ஸ்டீரியோ ஒலிபரப்புக்களை முன்னறிவிப்புச் செய்ய வேண்டும். விளம்பரதாரர் நிகழ்ச்சியில் பதினைந்து விளம்பரங்களுக்கு ஒரு முறையாவது பாட்டு போட வேண்டும். ஆனால் மௌன இடைவெளியே கூடாது. இடைவெளிகளில் துடிப்பான சின்ன சின்ன 'ட்யூன்'களைப் பயன்படுத்த வேண்டும். மெல்லிசை என்று சொல்கிறார்களே அவர்களை ஒரு சேர நீக்க வேண்டும். ரேடியோ தானே என்ற அலட்சியம் அவர்களுக்கு.

சும்மா இருக்கும் எஃப். எம் ட்ரான்ஸ்மிட்டரின் உதவியுடன் அடுத்த இசை விழாவிலாவது நேரடி ஒலிபரப்புச் செய்ய வேண்டும். செய்கிறாரா பார்க்கலாம்.

தீவிர கர்நாடக இசைப்பிரியர்களும் நம் இளம் வித்வான்களும் கொஞ்சம் கொஞ்சம் மேற்கத்திய இசையையும் கேட்டுப் பழகினால் நம் இசையில் இல்லாத கவுண்டர் பாயிண்ட்டிங், ஹார்மொனி போன்ற விஷயங்களையும் கொண்டு வர முடியும். ஒரு ஆரம்பத்துக்கு பாக் (BACH)ன் WELL TEMPERED CLAVIER, பீத்தோவனின் ஒன்பதாவது சிம்ஃபனியைக் கேட்டுப் பாருங்களேன்.

(மீண்டும் அடுத்த வாரம்...)

ஆளுக்கொரு விருது!

இந்தியாவின் தலைசிறந்த தொழிலதிபராகக் கணவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதே சமயம் பெண் தொழிலதிபருக்கான 'மஹிளா சிரோமணி' விருதை மனைவி பெறுகிறார்! இவர்களைச் சந்தித்தபோது....

உஷா கிருஷ்ணாவுக்கு முதலில் கொஞ்சம் தர்மசங்கடமாகத்தான் இருந்தது. ஜனவரி முதல் தேதி அன்று தம் கணவருக்குப் பாராட்டு விழா ஏற்பாடு செய்வதாக இருந்தார். 'கணவனுக்கு மனைவியே பாராட்டு விழா நடத்துவதா...?' என்று யோசித்துக் கொண்டிருக்கையில், மகள் அருந்ததி வேறு உசுப்பி விட்டு விட்டார் : "என்ன அம்மா இது! அப்பாவை நீயே பாராட்டிப் பேசப் போகிறாயா?"

ரொம்ப தீவிரமாக யோசித்தார் உஷா கிருஷ்ணா. 'எங்கள் கம்பெனிகளின் (சுந்தரம் ஃபாஸனர்ஸ்) எம். டி. நான். என் கணவர் சேர்மன். எனக்குத் தொழில்ரீதியான பிரச்னைகள் வரும் போது அவரை அணுகினால் நேரடியாக உதவ மாட்டார். 'இன்னின்னாரிடம் பேசிப் பார்; இப்படி இப்படிச் செய்...' என்று அறிவுரை கூறுவதோடு சரி. மனைவியே ஆனாலும் நான் சுதந்திரமாக தனிநபராகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்றுதான் அவர் ஊக்குவிப்பார்; விரும்புவார். எனவே அவருக்கு ஒரு கௌரவம் தரப்பட்டுள்ளது என்னும் போது, அவர் நிறுவன எம்.டி. என்கிற தகுதியில் 'நான் அவருக்குப் பாராட்டு விழா ஏற்பாடு செய்வது சரிதான்' என்று முடிவெடுத்தார் உஷா கிருஷ்ணா.

ஊழியர்கள் பங்கேற்ற அந்த விழாவில் பேசினார் உஷா கிருஷ்ணா : -

"ஒரு வேலையைச் செய்து முடிக்கும்படி ஒருவரைப் பணிப்பதோடு நின்று விடாமல், அதற்கான முழு அதிகாரத்தையும் அந்த நபருக்கு அளித்து விடுவார் சுரேஷ் கிருஷ்ணா. அவருடைய தனித்தன்மை வாய்ந்த நிர்வாக ஸ்டைல் இது. வேலையில் முழு ஈடுபாடு கொண்டவர். அசைக்க முடியாத நேர்மையாளர், ஊழியர்களும் அதே போல் நடந்து கொள்ள ஊக்குவிப்பவர்."

சுரேஷ் கிருஷ்ணாவுக்கு, 'இந்தியாவின் தலைசிறந்த தொழிலதிபர்' என்ற விருது வழங்கப்பட்டதையொட்டி நடத்தப்பட்டது தான் மேற்படி பாராட்டு விழா. ஆண்டுதோறும் பிஸினஸ் இந்தியா இதழ் இவ்விருதுக்குரிய ஒருவரைத் தேர்ந்தெடுத்து வழங்குகிறது. இதனைப் பெறும் முதல் தமிழர் சுரேஷ் கிருஷ்ணா.

1962இல் இவருடைய சுந்தரம் ஃபாஸனர்ஸ் நிறுவனம் தொடங்கிய போது இரண்டே இயந்திரங்கள்தான் இருந்தன. மொத்த முதலீடே எட்டு லட்சம் ரூபாய்தான். இன்று நாற்பது கோடி ரூபாய் மதிப்புள்ள பாகங்களை ஃபாஸனர்ஸ் நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது. ISO 9000 என்கிற சர்வதேசச் சான்றிதழைப் பெற்ற முதல் இந்திய நிறுவனம் என்கிற பெருமை அதற்கு உண்டு. சிறந்த தரக்கட்டுப்பாடு நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதற்காக வழங்கப்படுவது இச் சான்



நிதம்.

தொழிலாளர்களுடன் நல்லுறவு காத்தமைக்காக வழங்கப்படும் சர் ஜெஹாங்கீர் காந்தி பதக்கமும் ஏற்கெனவே பெற்றுள்ளார் சுரேஷ்கிருஷ்ணா.

இத்தனைக்கும் சுரேஷ் கிருஷ்ணா அதிரடி பிஸினஸ் மேன் இல்லை.

"வீட்டில் பார்ட்டியெல்லாம் பெரிய அளவில் நாங்கள் வைப்பதில்லை; அவர் 'கலகல'ன்னு பேச மாட்டார். ஆனால் 'moody type' உம் இல்லை. நிறையப் படிப்பார்; பிசினஸைப் பற்றி நிறைய யோசிப்பார்; எதிர்காலத்துக்குத் திட்டமிடுவார். யாரிடமும் பெரிதாகக் கோபித்து சப்தம் போட மாட்டார். கோபம் வந்தால் கூட தமக்குள்ளேயே அடக்கிக் கொண்டு விடுவார்..." என்று விவரிக்கிறார் உஷா கிருஷ்ணா.

விற்பனை அதிகாரிகள் டூர் போகும் போது அவர்கள் கூடவே தாமும் போவது; ஊழியர்கள் நலனில் கூர்ந்து கவனம் செலுத்துவது என பல வகைகளில் சுரேஷ் கிருஷ்ணா தமது தனி முத்திரையைப் பதித்துள்ளார்.

மூன்றாவது தலைமுறையாக ஒரு குடும்பத் தொழிலை வெற்றிகரமாக நடத்துவது என்பது தனியொரு சவால். பிறர் எப்போதும் முந்தைய தலைமுறையினருடன் ஒப்புநோக்கி மதிப்பிடுவார்கள்; மாற்றங்கள் புகுத்தினால் புருவங்கள் உயரும்; முன்னேற்றமில்லாவிட்டால் விமர்சனம் கடுமையாக இருக்கும்.... இதையெல்லாம் அற்புதமாகச் சமாளித்திருக்கிறார் சுரேஷ் கிருஷ்ணா. 'உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன?' என்று கேட்டால்,

"ஒரே துறையைச் சேர்ந்த பொருட்களின் உற்பத்தியில் கவனம் செலுத்தினோம்; சிறிதாகத் தொடங்கி, படிப்படியாக உறுதியான அடிகள் எடுத்து வைத்து முன்னேறினோம். அயல்நாட்டுத் தொழில்நுட்பக் கூட்டுறவை நாடாமல் நாங்களே சிறந்த உற்பத்தி முறைகளைப் புதிதாகக் கண்டுபிடித்தும் கற்றுக் கொண்டும் செயல்பட்டோம். இதனால் தனித்தன்மை மட்டுமின்றி சாதனை உணர்வும் கைகூடியது. எனக்குள் இருந்த தேடல் உணர்வும் என் ஊழியர்களின் உழைப்பும் இணைந்து வெற்றிக்கு வடிவம் கொடுத்தன"



- அகில்

அது ஒரு காலம் ; இது ஒரு கோலம்!



தலைவர்கள் -
காட்சிக்கு எளியவர் அன்று;
'கட்அவுட்' ஆடம்பரம் இன்று!

நடிகைகள் -
நடிப்பை வெளிக்காட்டியது அன்று;
இடுப்பை வெளிக்காட்டுவது இன்று!

அமைச்சர்கள் -
கடமைகள் புரிந்தது அன்று;
அடிமைகள் ஆனது இன்று!

தொண்டர்கள் -
தொண்டுகள் புரிந்தது அன்று;
குண்டுகள் எறிவது இன்று!

- குமரி அமுதன்

என்கிறார் சுரேஷ் கிருஷ்ணா.


தோட்டக் கலையிலும் இசையிலும் சுரேஷ் கிருஷ்ணாவுக்கு நிறைய ஆர்வம். பாடியில் உள்ள தொழிற்சாலை வளாகத்தின் தோட்டத்தை மிகவும் கவனமாகத் திட்டமிட்டு அமைத்திருக்கிறார் அவர். அதற்கென பல புத்தகங்கள் படித்துத் தம்மைத் தயார்படுத்திக் கொண்டு அப்புறம் செயல்பட்டிருக்கிறார்.

ஜெர்மன் மொழிப் புலமையுடன் வீணை வாசிப்பிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். அம்மா அம்புஜம் கிருஷ்ணாவிடம் இசையும் பின்னர் வீணை பிச்சுமணியிடமும் கற்றுக் கொண்டவர்.


"பெங்களூரில் எங்கள் முதல் மகள் பிறந்த சமயத்தில் இவர் இங்கே வீணையில் வசந்தா ராகம் வாசித்துக் கொண்டிருந்தார். அதனால் அவளுக்கு வசந்தா என்றே பெயர் வைத்திருக்கிறோம்..." என்று கூறும் உஷா கிருஷ்ணா, கணவருக்குத் தலைசிறந்த தொழிலதிபர் விருது தரப்பட்ட அதே ஆண்டில் பெண் தொழிலதிபருக்கான 'மஹிளா சிரோமணி' விருதைப் பெற்றுள்ளார்! விருதுகள் பெற்றாலும் இந்த தம்பதியின் இலக்குகள் விரிந்து கொண்டே போகின்றன.

"சோனி (Sony) நிறுவனம் போல்... ஜிப் துறையில் YKK போல்... உலகப் புகழ் நிறுவனமாக எங்கள் கம்பெனி உயர வேண்டும். 'உங்கள் தொழிற்சாலையை வந்து பார்க்க வேண்டுமே...?' என்று வெளிநாட்டவரும் கேட்க வேண்டும்..." சுரேஷ் கிருஷ்ணா, இலட்சியங்களை வரிசைப்படுத்திக் கொண்டே போகிறார்!

பேட்டி, கட்டுரை : **சாருகேசி**
வண்ணப்படம் : **கிருஷ்ணமூர்த்தி**




புதியதோர்





உலகம்



செய்வோம்

பசுமையாக, செழுமையாக,
வளமையாக, முழுமையாக.

ஆம்! பாரதியின் கனவை நனவாக்குவோம்!

புதியதோர் உலகிலே, மதுரைக்கு மிக அருகிலே, பசுமையான நிலம் மற்றும் வீட்டுமனையையும் (10,000 ச.அடி) செழுமையான தேக்கு பண்ணையையும், வளமையான காய்கறி பழ தோட்டங்களையும், முழுமையான பண்ணை இல்லத்தையும் உங்களுக்கே சொந்தம் ஆக்கிடுவீர்!

உங்கள் முதலீடு	நீங்கள் பெறுவது	20 ஆண்டுகளில் மதிப்பு
ரூ.25,000/- அல்லது ரூ.250/- வீதம் 100 கலப தவணைகள்	10,000 ச.அடி நிலம் 24 தேக்கு மரங்கள் 2 ஒட்டு மா 2 வீரிய தென்னை காய்கறி தோட்டம்	ரூ.10 லட்சம் ரூ.24 லட்சம் ரூ.50,000 ரூ.50,000
20 ஆண்டுகளில் ரூ.35 லட்சம் மதிப்பு சொத்துக்கள்		

• 10,000 ச.அடி நிலம் உடன் உங்கள் பெயரில் பதிவு செய்யப்படுகிறது • அற்புத தொழில் நுட்ப விந்தை • சிறந்த நீர்வளம், மண்வளம், பயிர் வளம் • சில ஆண்டுகளில் உங்கள் நிலம் மதுரை நகரின் மையமாகி விடும்.

ரூ.100/- வீதம் 15 மாதங்கள் செலுத்தி லட்சம் பெறும் திட்டங்களும் உள்ளன

ESWAR

Eswar Grow-Tek Ltd.

287, West Masi Street, Madurai 625 001.
Ph: 37305, 35843 Fax: 0452-37305 Tlx: 0445-478-AGRI-IN

The Agri People


PROFAD:ESWAR:167:95:TAM



முடிதிருத்த நிலையங்களில் எய்ட்ஸ் அபாயமா?

உக்ரெய்ன் நாட்டிலுள்ள ஒடெசா என்ற நகரிலிருக்கும் 34 சிகையலங்கார நிறுவனங்களை அந்த நாட்டின் அரசு மூட வைத்திருக்கிறது. காரணம் அவற்றில் காணப்பட்ட சுகாதாரக் கேடான நிலையினால் வாடிக்கையாளர்களுக்கு எய்ட்ஸ் நோய் பரவ வாய்ப்பு உள்ளது என்பதுதான்! செய்தியைப் படித்ததும் நமக்கு பகீரென்றது. நம் நாட்டு முடிதிருத்தும் நிலையங்களின் மூலமாகவும் எய்ட்ஸ் பரவ வாய்ப்பு உண்டா? எந்த அளவுக்கு?

சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள டாக்டர் கே.எம். ராதாகிருஷ்ணனைச் சந்தித்தோம். தமிழ்நாடு எய்ட்ஸ் மையத்தின் முன்னாள் தலைவராக விளங்கிய இவர், இப்போது அகில இந்திய ரத்தம் செலுத்தும் வல்லுனர்கள் அமைப்பின் (Indian Society of Blood Transfusion and Immuno-Haematology) தலைவராக விளங்குபவர்.



• டாக்டர் ராதாகிருஷ்ணன்

"நான்கு வருடங்களுக்கு முன் உலக அளவில் ஓர் ஆராய்ச்சி நடைபெற்றது. எய்ட்ஸ் நோயாளிகளுக்கு ஆபரேஷன் செய்யும் மருத்துவர்களுக்கும் அந்த நோய் பரவ வாய்ப்பு உண்டா என்ற பரபரப்பான கேள்வியைத் தொடர்ந்து நடந்தது அந்த ஆய்வு. இருபத்தைந்தாயிரம் மருத்துவர்கள் பரிசோதிக்கப்பட்டதில் அவர்களில் இருபத்தி ஐந்து பேருக்கு மட்டுமே



-எஸ். மீனலோசனி

ஹெச். ஐ.வி. கிருமிகள் இருந்தது தெரியவந்தது. அதிலும் இருபத்தி மூன்று பேர் தங்களுக்கு 'வேறு' வழிகளில் இந்தக் கிருமிகள் உட்புகுந்திருக்க வாய்ப்பு உண்டு என்று ஒப்புக் கொண்டனர். ஆக இருவருக்கு மட்டுமே (அதுவும் அவர்கள் எந்த விஷயத்தையும் மறைக்கவில்லை என்பது உறுதியாக இருந்தால் மட்டும்) 'தொழில்முறை அபாயத்தால்' **(professional hazard)** எய்ட்ஸ் கிருமிகள் பரவியிருக்கின்றன.

"இதே போல், நம் ஊர் முடிதிருத்தும் நிலையங்களின் மூலமாக எய்ட்ஸ் நோய் பரவும் வாய்ப்பும் மிகக் குறைவு. இப்போதெல்லாம் சலூன்களில் பெரும்பாலும் கத்தியைப் பயன்படுத்துவதில்லை. பாதி பிளேடைப் பயன்படுத்தி விட்டு அதைத் தூக்கி எறிந்து விடுகின்றனர். அப்படியே ஷேவிங்கிற்குக் கத்தியைப் பயன்படுத்தினாலும் அந்தக் கத்தியைக் கழுவி விடுகிறார்கள் அல்லது குறைந்தது பேப்பரில் நன்றாகத் தடவிப் போட்டு விடுகிறார்கள். சாணையிலோ அல்லது தங்கள் கைகளிலோ ஓரிரு முறையாவது தீட்டிவிட்டுதான் அடுத்தவருக்குப் பயன்படுத்துகிறார்கள். இதனாலெல்லாம் எய்ட்ஸ் கிருமிகள் பரவும் வாய்ப்பு மிகவும் குறைகிறது.

"எலும்புருக்கிநோய்க் கிருமிகள் எச்சில் மூலம் மண்ணில் விழுந்து புதைந்த பிறகும் கூட காற்றின் மூலம் அந்த நோயைப் பிறருக்குப் பரப்ப வாய்ப்பு உண்டு. ஆனால் எய்ட்ஸ் கிருமிகளுக்கு உடலுக்கு வெளியே அவ்வளவு நீடித்த வாழ்க்கை கிடையாது. அவற்றின் மேல்-ஓடு மிக மென்மையானதாக இருக்கிறது. ஆதலால், வெப்பம் ஏற்றினாலோ, ஏன் சோப்பு போட்டுக் கழுவினாலோ கூட அவை இறந்து விடுகின்றன.


"ஒருவருக்கு ஷேவிங் செய்யும்போது வெட்டுக்காயம் ஏற்பட்டு, அவர் உடலில் ஹெச்.ஐ.வி. கிருமிகள் இருந்து, கத்தியில் அந்த ரத்தம் பட்டு, கத்தியைச் சுத்தம் செய்யாமல் உடனடியாக இன்னொருவருக்கு ஷேவிங் செய்து, அந்த இரண்டாமவருக்கும் வெட்டுக்காயம் ஏற்பட்டு, கத்தியிலிருந்து இரண்டாமவரின் ரத்த நாளங்களில் அந்த ரத்தம் நுழைந்து – இப்படி இவ்வளவும் நடந்தால்தான் எய்ட்ஸ் நோய்க் கிருமிகள் முடிதிருத்தும் நிலையங்கள் மூலமாகப் பரவ முடியும். இவ்வாறு நடக்கக்கூடிய வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. உடலிலிருந்து ரத்தம் வெளிப்பட்டுக் கத்தியில் வேண்டுமானால் படலாமேயொழிய, கத்தியிலிருந்து மீண்டும் அது உடலுக்குள் புகுவதற்கான சாத்தியக்கூறே இல்லை.

"அப்படியும் அதீத எச்சரிக்கை உணர்வு கொண்டவர்கள் புது பிளேடைப் பயன்படுத்தும்படியோ, கத்தியைச் சுத்தம் செய்துவிட்டு உபயோகிக்கும்படியோ வற்புறுத்தலாம்.

"முடிதிருத்தும் கலைஞர்களும் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கருத்தரங்கில் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு முறைகளைப் பற்றி விளக்கியதும், அவர்களில் ஒருவர் எழுந்து 'எங்க கடைகள் மூலமாக எய்ட்ஸ் கிருமிங்க பரவாம நாங்க பார்த்துக்கறோம். நீங்க பயன்படுத்தற ஊசிகள் மூலம் அவை பரவாம கவனிச்சுக்குங்க'என்று பேசினார். இதுவே ஆரோக்கியமான அறிகுறியாக எனக்குத் தோன்றியது."

- குல்லூ

அதிக உற்பத்தியா, கட்டு அபராதம்!



கிரீஸ் (ஏதென்ஸ்) நாடு ஐரோப்பிய சங்கத்தின் விதிமுறைகளை மீறி அதிகமாய் பால் உற்பத்தி செய்ததற்காக 5.2 மில்லியன் டாலர்கள் அபராதம் கட்ட வேண்டிய நிலையில் உள்ளது. வழக்கத்திற்கு அதிகமாக பதினாலாயிரம் டன் பால் உற்பத்தி செய்தது கிரீஸ். இப்படி அபரிமித உற்பத்தியால் பால் விலை சரியும் என்பதால் உற்பத்தி அளவை ஒவ்வொரு நாட்டுக்கும் இவ்வளவு என்று கட்டுப்படுத்துகிறார்கள்.

ஐரோப்பாவில் : ஆர்.எஸ். கிருஷ்ணன்

தனபிரியா

வழங்கும்

சேமிப்பு திட்டங்கள்

◆ தனயோக ஃபிக்செட் டெபாசிட் திட்டம் ◆

டெபாசிட்களுக்கு
1 கிராம் தங்க
காசு
வழங்கப்படும்

க்யூமுலேடிவ் டெபாசிட்

வருடம்	டெபாசிட் தொகை	முதிர்வு தொகை	வருடாந்திர வட்டி	ஊக்கத் தொகை
12 மாதங்கள்	10,000	13,000	30.00%	2%
26 மாதங்கள்	10,000	16,000	27.69%	2%
36 மாதங்கள்	15,000	30,000	33.33%	3%

ஃபிக்செட் டெபாசிட்

வருடம்	வட்டி	குறைந்தபட்ச டெபாசிட் தொகை	ஊக்கத் தொகை
12 மாதங்கள்	25%	ரூ. 5,000/-	5%

பென்ஷனர் மற்றும் முதியோர்

வருடம்	வட்டி	குறைந்தபட்ச டெபாசிட் தொகை	ஊக்கத் தொகை
12 மாதங்கள்	30%	ரூ. 5,000/-	2%

தனபிரியா பாண்ட்

குறைந்தபட்ச முதலீடு ரூ. 25,000/- இரு மடங்காகிறது. 36 மாதங்களில் ரூ. 50,000/- ஊக்கப் பரிசு : 5 கிராம் தங்க காசு

தனயோக பாண்ட்

குறைந்தபட்ச முதலீடு ரூ. 50,000/- மும் மடங்காகிறது. 57 மாதங்களில் ரூ.1,50,000/- ஊக்கப் பரிசு : 9 கிராம் தங்க காசு

திருமகள் திருமண திட்டம் ரிக்கரிங் டெபாசிட் திட்டம்

ரூ.1000 x 25 மாதங்கள் அல்லது
ரூ. 500 x 25 மாதங்கள்

26ம் மாத துவக்கத்தில் ரூ. 50,000/- அல்லது ரூ. 25,000/- பெற்று 27ம் மாதம் முதல் மாதம் ரூ.1000/- அல்லது ரூ.500/- வீதம் 25 மாதத்திற்கு எந்தவிதமான வட்டி இல்லாமல் திரும்ப செலுத்தலாம் அல்லது ரூ. 25,000/-ஐ மறுமுதலீடு 10 வருட காலத்திற்கு செய்து ரூ.2,32,835 பெறுங்கள்

ஓய்வுதாரர் நலத் திட்டம்

குறைந்தபட்ச முதலீடு	ரூ. 1 லட்சம் அல்லது அதற்கு மேல்
காலம்	6 வருடங்கள் அல்லது அதற்கு மேல்
வட்டி விகிதம்	26 சதவிகிதம் வருடத்திற்கு மற்றும் 1800 சதுர அடியில் வீட்டு மனை திருமுல்லை வாயில் நகரில் இலவசமாக பத்திர பதிவு செய்து வழங்கப்படும் அல்லது ரூ. 15,000/- ரொக்கம்

வட்டி தொகைக்கு முன் கூட்டின காசோலைகள்
பின் தேதியிட்டு வழங்கப்படும்

● ஞாயிற்றுக் கிழமையும் அலுவலகம் இயங்கும் ●

DHANAPRIYA INVESTMENTS (INDIA) LIMITED

தனபிரியா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (இந்தியா) லிமிடெட

காம்தார் பில்டிங் (2வது மாடி) 143/3. பிராட்வே; சென்னை – 600 108 போன் : 565668

கார்பரேட் அலுவலகம் : எண்.34 துரைசாமி சாலை, தி. நகர்,
சென்னை -17. போன் : 8281116.

"விரைந்து சேருங்கள் மகிழ்ச்சியாக வாழுங்கள்"

இந்திர தனுசு

4. கள்ளன் மீது கடைக்கண்!

யுவானின் பார்வை வழியே புகுந்து அந்தக் கடல் நாகம் அவன் சித்தத்தை உறைய வைத்து விட்டது! எதிரிருந்தவர்களையும் இருக்குமிடத்தையும் கூட உணர இயலாதபடி அவன் புலன்கள் செயலிழந்து கிடந்தன. எதிரில் நின்ற பாண்டிய இளவல் அவன் பார்வையில் எழுந்து மறைந்தான். அருகிலிருந்த ரதமும் அதிலிருந்த இளவரசியும் மறைந்தனர். சீறிப்பாயும் சீனத்துக் கடல் அவன் கண்ணெதிரே எழுந்தது. சிறிய அலைகளைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் பெரிதாக எழுந்து நின்ற மரக்கலம் எழுந்தது. சுற்றிலும் சீனத்து அரச குடும்பத்துப் பிரதானிகள் நிற்க, கழுத்தில் அந்தக் கடல் நாகம் பதித்த ஆரத்துடன் அவன் தந்தை யாங்சின் நின்றார். அருகில் தமிழகத்திலிருந்து வந்த அந்தத் துறவி மாறன் அமுதனார் பன்னிரு திருமண்ணையும் சார்த்தியபடி நெடுநெடுவென்று நின்றார். யாங்சின் இறுதியாகக் கூறிய வார்த்தைகளும் அவன் செவிகளில் மீண்டும் ஒலித்தன. "யுவான், என் வாழ்நாளுக்குள் பாதியில் கட்டி முடிக்கப்படாமல் நிற்கும் நமது ஆலயம் கட்டி முடிக்கப்பட வேண்டும். நான் அறிந்த சிற்பக்கலை போருக்கு மட்டுமே பயன்படும். மாறன் அமுதனாருடன் தமிழகம் சென்று ஆலயத்துச் சிற்பக் கலை பற்றிய அறிவுடனும், தமிழகத்துச் சிற்பிகளுடனும் திரும்புகிறேன். உன் தாயைக் கவனமாகப் பார்த்துக் கொள்."

அடித்து வைத்த சிலையாகவே நின்று விட்ட யுவானையும் அவன் பிரமித்த பார்வையையும் கண்டான் ஆதித்யன். அவன் முகத்திலிருந்த விஷமம் முறுவலாக மலர்ந்தது. லேசாக யுவானின் தோளைத் தட்டியவன் "யுவான், பிரமித்து நிற்க இது சமயமல்ல. காடவர்கள் எந்த நேரத்திலும் அதிக வீரர்களுடன் திரும்பி வரலாம். நாம் இங்கிருந்து விரைவில் புறப்படுவது நல்லது" என்றான்.

பிரமையிலிருந்து விடுபட்ட யுவான், "மன்னிக்க வேண்டும் இளவரசே, இதோ இப்பொழுதே புறப்படலாம்," என்றபடியே ரதத்தின் சாரதி ஸ்தானத்தில் தாவி ஏறியமர்ந்தான்.

காடவர்களைக் கானகத்திற்கு விரட்டியிருந்த ஆதித்யனின் வீரர்கள் அணிவகுத்து நின்றிருக்க, அவர்களுக்குச் சைகையாக உத்தரவு பிறப்பித்து விட்டு, தன் சாம்பல் நிறப் புரவியை நெருங்கி ஒரே தாவலில் அதன் மீது ஏறியமர்ந்தான். ரதத்தின் முன்புறத்தில் சாம்பல் நிறப் புரவியின் மீது ஆதித்யன் செல்ல, ரதம் தொடர்ந்தது. வீரர்களும் பின்தொடர்ந்தனர்.


நேர் தெற்கு நோக்கி நீண்ட அவர்களின் பயணம், சோழ நாட்டின் மேற்கு எல்லை வழியே தொடர்ந்தது. இரண்டு தினங்களாகத் தொடர்ந்த பயணத்தாலும், இடையே நேர்ந்த சங்கடங்களாலும் இளவரசியின் முகத்தில் தெரிந்த அலுப்பையும் களைப்பையும் கவனித்த ஆதித்யன், இரவு கவியத் தொடங்கிய பொழுதுக்குப் பின்னும் பயணத்தைத் தொடர்வது உசிதமல்ல என்று தீர்மானித்தான். சற்றுத் தொலைவில் தெரிந்த ஊரை அடுத்த சத்திரமொன்றில் இளவரசி தங்குவதற்கு ஏற்பாடு செய்தான்.



இரவைக் கழிக்கவும், இளைப்பாறவும் இளவல் தேர்ந்தெடுத்த இடம் அலாதியாயிருந்தது. சத்திரத்தின் முன்பகுதி மட்டுமே வழிப்போக்கர்களுக்குப் பயன்படுவதாக அமைந்திருந்தது. பின்பகுதி ஒரு காலத்தில் பெரும் மாளிகையாக இருந்திருக்க வேண்டும் என்பது புரிந்தது. விசாலமான உட்புறத்து அறையொன்றில் தானும் தோழியரும் தங்க ஏற்பாடு செய்ததையும், சிறு

விஷ்வக்சேனன்

சிறு தேவைகளையும் கவனித்து. கூடுமான வரையில் எல்லா ஏற்பாடுகளையும் பாண்டிய இளவலே நேரிடையாகச் செய்ததையும் கவனித்த இளவரசி



யின் மனதில் 'பார்வைக்கு விளையாட்டுப் பிள்ளை போலிருக்கும் இந்த மனிதருக்குப் போர்க்கலை மட்டுமின்றி, பெண்களின் தேவைகளை உணர்ந்து. தகுந்த வசதிகள் செய்யவும் தெரிந்திருக்கிறதே!" என்ற வியப்பு ஏற்பட்டது.

அந்த இரவில் அவள் நீராட பதமான சூட்டுடன் நீரும் மஞ்சள், ஸ்நானப் பொடிகளும் வாசனைப் பொடிகளும் மட்டுமின்றி எங்கிருந்தோ மாற்று ஆடைகளும் கூடத் தயாராயின. போதாக்குறைக்கு ஈரமான நீண்ட குழலை உலர்த்த தணலுடன் சாம்பிராணியும் வந்தது. இதமான நீராட்டமும், நீராட்டத்திற்குப் பின் வந்த உணவும், கனி வகைகளும்' பயண அலுப்பை அறவே நீக்கி விட்டதால், புத்துணர்ச்சியுடன் வெளிப்புறத்து நீண்ட தாழ்வரையை அடைந்தாள். இளவலுடைய ஏற்பாடுகளின் நேர்த்தியும், அதை நிறைவேற்றிய விதமும் அவளை வியப்பில் ஆழ்த்தியிருந்தது. அவள் வியப்பையும் பிரமிப்பையும் இன்னும் உயர்த்தியது அற்புதமான இயற்கைச்

சூழ்நிலை.

தாழ்வரையை அடுத்து, சற்றுக் கீழிறங்கிய படிகளைத் தொடர்ந்து, சிறுபாதையொன்று நீண்டு சட்டென்று முடிந்தது. பாதை முடிந்த இடத்தில் மேற்பரப்பு வெள்ளித் தகடுகளாக நிலவொளியில் மின்ன, சிறு சிறு சுழல்களுடன் சுழித்துச் சுழித்து அன்னநடை பயின்று கொண்டிருந்தது ஒரு நதி. நதிக் கரையை ஒட்டி பக்கவாட்டில் நீண்டிருந்த மாளிகை, பாதி வரையில் மட்டுமே நன்றாயிருப்பதையும், பாதிக்கு மேலிருந்த பகுதி இடிந்தும், சில இடங்களில் தீயினால் கருகியது போலவும் தெரிந்தது. எதிர்க் கரையில் மரங்கள் அடர்ந்து கிடப்பதையும், மரக்கிளைகள் சில தாழ்ந்து நீர்ப்பரப்பைத் தொட முயற்சி செய்வதையும் கவனித்தாள். அந்த மாளிகையை நிர்மாணித்தவன் பெரும் ரசிகனாயிருக்க வேண்டும் என்றும் என்ன காரணத்தாலோ பாதிக்கும் மேல் சிதிலமடைந்த மாளிகையின் பின்பகுதியைச் செப்பனிடாமல் விட்டிருக்க வேண்டும் என்றும் தீர்மானித்தாள் இளவரசி.

மாளிகையின் மதில்களில் சில சிற்பங்கள் தெரிந்தன. அவையும் சிதிலமடைந்து காணப்பட்டன. சிற்பங்கள் வடிக்கப்பட்ட விதத்தில் சேரநாட்டு முறையை இனம்காண முடிந்தது.

'அப்படியானால் இது சேரர்களுக்குச் சொந்தமான மாளிகையா? நான் இருப்பது சேர நாட்டு எல்லையா?' என்ற கேள்வியும் அவள் சித்தத்தில் எழுந்தது.

மெல்ல படிகளில் இறங்கியவள், நதியை நோக்கிச் சென்ற பாதையில் நடந்தாள். நீர்ப் பரப்பின் மீது நீந்தி விளையாடிக் கொண்டிருந்த இரவு நேரத்துக் குளிர்ந்த காற்று சில்லென்ற கரங்களால் அவள் முகத்தைத் தழுவி வரவேற்றது. வெள்ளித் தகடாக ஒளிர்ந்த நதியில், பாதி தேய்ந்திருந்தாலும் நிலவு மனோகரமாகப் பிரதிபலித்தது. 'தான் முழுதாக வளர்ந்தாலும் அவள் முகத்தின் அழகுக்கு ஈடாக இயலாது' என்பதை உணர்ந்ததால் சங்கடப்பட்டு மெல்ல அசைந்து கொண்டிருந்தது!

கரையிலிருந்த சிறு பாறையொன்றில் அமர்ந்த இளவரசி, கால்களை, சில்லிட்டுக் கிடந்த நதியில் துழைய விட்டாள். தந்தத்தில் கடையப்பட்டு சந்தனத்தின் நிறம் பூசப்பட்ட அவள் பாதங்களைத் தழுவியதால் நதியின் அலைகளுக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். பாறையின் விளிம்பில் மோதிய அலைகள் நகைத்த விதம் அப்படித்தானிருந்தது.


இரவின் அந்த அமைதியிலும் இயற்கையின் அழகிலும் ஆழ்ந்து விட்ட கொங்கு நாட்டு இளவரசி, பின்னால் ஒலித்த காலடிச் சப்தத்தை கவனித்ததாகத் தெரியவில்லை. திடீரென்று அவள் தோள்களில் பலமான இரு கரங்கள் பதிந்து ஏதோ சிறு குழந்தையைத் தூக்குவது போலத் தூக்கி, பாறையின் மீது நிறுத்தின. திடுக்கிட்டுத் திரும்பியவளின் கால்கள் சற்றுத் தடுமாறவே நீர்ப்பரப்பை நோக்கிச் சாய முற்பட்டவளை அந்த வலுவான கரங்கள் உறுதியாகப் பற்றி நிறுத்தவும் செய்தன.

அவள் எதிரே அந்த விளையாட்டுப் பிள்ளை முகத்தில் லேசான சினம் தெரிய, அவள் இடையைப் பற்றியபடி நின்றிருந்தான். "இளவரசியார் இரவு நேரத்தில் இப்படித் தனித்து வருவது முறையல்ல" என்ற சொற்களும் வெகு வேகத்துடன் வந்தன பாண்டிய இளவலிடமிருந்து.

இடையில் பதிந்திருந்த அவன் கரத்தைப் பட்டென்று விலக்கிய பூங்கோதையின் முகத்திலும் சினம் தெரிந்தது. பாறையின் மீது ஸ்திரமாக நின்றவள், "இதைப் பாண்டிய இளவல் சற்று எட்ட இருந்தே அழைத்துக் கூறியிருக்கலாம்" என்றாள் குரலிலும் கோபத்தைக் காட்டி.

ஆதித்யனின் பதில் அதே வேகத்தில் வந்தது. "நான் எட்டவே நின்றிருந்தால் தங்களை அழைக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காது. சந்தேகமிருந்தால் திரும்பி நதியைப் பாருங்கள்."

திரும்பி நதியைப் பார்த்தவளின் விழிகளில் எல்லையற்ற திகில் பரவியது. அவள் அமர்ந்திருந்த பாறைக்கு நேர் எதிரில் நீர்ப் பரப்பின் மீது வாயை பயங்கரமாகத் திறந்து கோரைப் பற்களைக் காட்டி நகைத்துக் கொண்டிருந்தது



"கூட்டத்துக்கு வந்ததும் தலைவருக்கு சோடா கொடுக்க வேண்டாம்னு சொன்னேன், கேட்டீங்களா?"

"இப்ப என்னாச்சு?"

"தான் வந்த வேலை முடிஞ்சு போச்சுன்னு உடனே கிளம்பிட்டாரு"

- எஸ்.எஸ். பூங்கதிர்

அருள்வாக்கு



படித்ததன் பிரயோஜனம் நல்ல குணம்; அடக்கம். இப்போது நாட்டில் முன்னை விட நிறையப் படிப்பு இருக்கிறது; ஹைஸ்கூலில் இடம் இல்லாமல், 'ஷிப்டு' வைத்து வகுப்பு நடத்துகிறார்கள். இவ்வளவு இருந்தும் படிப்பின் பிரயோஜனமான விநயம் ஏற்படவில்லை. அதற்கு நேர் விரோதமான குணம் அல்லவா வளர்கிறது? படிக்கிற பையன்கள் இருக்கிற இடத்துக்குத்தான் போலீஸ், மிலிடெரி எல்லாம் அடிக்கடி வர வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் என்ன? முன்பு நம் மாணவர்களுக்கு இருந்த குரு பக்தி என்பதே இப்போது அடியோடு போய் விட்டது. பையன் வாத்தியாரைப் பார்த்து, 'கேள்வித்தாளையே கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அடிக்கிறேன்' என்று சொல்லக்கூடிய நிலைமை வந்துவிட்டது.

முன்பு இருந்த பாடங்கள் இப்போதும் இருக்கின்றன. ஆனால் முறை மாறிவிட்டது. மருந்து ஒன்றாகவே இருந்தாலும், பத்தியம் மாறி விட்டால் மருந்தே விஷமாகி விடும் என்பது போல ஆகிவிட்டது இது. குரு பக்தி போனதும் பத்தியம் போய் விட்டது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

ஒரு முதலை. அச்சத்தில் தடுமாறியவள் மீண்டும் பாறையின் மீதிருந்த பின்புறமாகச் சரிந்தாள். அவளை அப்படியே மீண்டும் தாங்கிய ஆதித்யனின் கரங்கள் அவளை மாளிகையின் படிகள் இருந்த இடம்வரையில் கீழே இறக்க மறுத்து படிகளை அடைந்ததும் மெல்ல இறக்கி அமர வைத்தன.

கொங்கு நாட்டு இளவரசியின் நிலை சொல்லத் தரமற்றதாயிருந்தது. அச்சமும், அச்சத்தைத் தொடர்ந்த நாணமும், நாணம் விளைவித்த சங்கடமும், அந்த விளையாட்டுப் பிள்ளையின் கரங்களின் ஸ்பரிசமும், ஸ்பரிசம் ஏற்படுத்திய இனம்புரியாத உணர்வும் அவள் சித்தத்தைத் தாக்கி, அந்த சேரநாட்டு மாளிகையின் படிகளில் அவளை ஒரு சிற்பமாகவே அடித்திருந்தது.

ஆதித்யனின் நிலையும் சங்கடத்தில் தானிருந்தது என்பது சலனப்பட்ட அவன் குரலில் தெரிந்தது. "மன்னிக்க வேண்டும் இளவரசி. உணவருந்தியபின் தங்களைக் காணவில்லை என்று பணிப்பெண்கள் முறையிட்டதால் தேடி வந்தேன். இங்கு வந்தபின் நீங்கள் அமர்ந்திருந்த பாறைக்கு நேர் எதிரில் அந்த முதலை வருவதும் தெரிந்தது. அதனால் தான்..." அவன் சொற்களை முடிக்காமல் பாதியில் நிறுத்தினான்.

மாளிகையின் தாழ்வரையில் காலடிச் சப்தங்கள் ஒலித்தன. பணிப்பெண்கள் பின் தொடர யுவான் வந்து கொண்டிருந்தான்.

"இதோ இருக்கிறார் இளவரசி" என்று கூவியபடியே வந்த பணிப்பெண்களைத் தொடர்ந்து வந்த யுவானின் சிறு விழிகளில் விஷமம் மின்னியது.

"உங்கள் தனிமையில் குறுக்கிட்டதற்கு மன்னிக்க வேண்டும்" என்றவன் குரலிலும் விஷமம் சொட்டியது.

"இல்லை யுவான். நான் இப்பொழுதுதான் இளவரசியாரைத் தேடிக் கொண்டு இங்கு வந்தேன். இளவரசி இந்த நதிக்கரையின் அழகில் ஆழ்ந்து நெடுநேரமாக இங்கு அமர்ந்திருக்கிறார்" என்றான் ஆதித்யன்.

ஆதித்யனின் சங்கடத்தையும், இளவரசி உணர்ச்சிக் குவியல்களிலிருந்து இன்னும் விடுபடாது அமர்ந்திருந்த நிலையையும் கவனித்த யுவானுக்கு ஏதோ நிகழ்ந்திருக்கிறது என்பது தெளிவாகப் புரிந்தது. பார்வையை நதியின் மீதும் நதிக்கரையை ஒட்டி நீண்டிருந்த அந்த மாளிகையின் மீதும் ஓட்டியவன், "உண்மைதான் இளவரசே. இந்த மாளிகையும், நதிக்கரையும் அழகாய்த்தானிருக்கின்றன. ஆனால் இத்தனை பெரும் மாளிகை எப்படி வழிப்போக்கர் தங்கும் சத்திரமாயிற்று?" என்றான்.

"இது வெறும் சத்திரமல்ல யுவான்" என்றான் ஆதித்யன். "ஆம்பிராவதி நதிக்கரையி

விருக்கும் இந்த வஞ்சி நகருக்கும் இந்த அழகிய மாளிகைக்கும் தனி சரித்திரமே உண்டு. இந்த நகரம் ஒரு காலத்தில் சேரர் தலைநகரமாகவும், இந்த மாளிகை சேரமானின் அரண்மனையாக வும் இருந்தது. அதோ இடிந்து கருகிக் கிடக்கும் பகுதியில்தான் மாமன்னன் சோழ கரிகாலன், சேரனால் சிறைவைக்கப்பட்டான். மாளிகை யோடு அவன் ஒருகாலும் எரிந்ததால் அந்தப் பட்டப் பெயரையும் பெற்றான். பின்னாளில் வந்த சோழ மன்னர்கள் இதை நினைவுச் சின்னமாகவே வைத்திருந்தார்கள். வஞ்சி நகர் பிறகு கொங்கு நாட்டுடன் இணைந்தது. கவ னிப்பாரின்றி பிறகு இது சத்திரமாகவும் பயன்படத் தொடங்கியது."

ஆதித்யன் கூறி நிறுத்தியதும் தற்போது சோழ வம்சம் சீர்குலைந்து கிடக்கும் நிலை ஒரு கனத்த மௌனத்தை சற்று நேரம் நிலவ விட்டது. சம்பாஷணை வேறு திசையில் திரும்பி விட்டதால் இளவரசியின் சங்கட நிலையும் மாறியிருந்தது. படிகளை விட்டு எழுந்தவள் தோழியருடன் மாளிகையின் உட்புறத்தை நோக்கி நடந்தாள். ஆதித்யனும் யுவானை அழைத்துக் கொண்டு முன்புறத்தை நோக்கிச் சென்றான்.

மறுதினம் உதயகாலத்தில் தொடங்கிய பயணம், உச்சிப் பொழுதில் பாண்டியர் தலை நகரை அடைந்தது.

மேகங்கள் உலவும் உயர்ந்த மதில் என்று கவிகளின் அதீத வர்ணனைக்கு ஆளானதும், "நெய்படக் கரிந்த திண்போர்க் கதவு" என்றும் "வையையன்ன வழக்குடை வாயில்" என்றும் மதுரைக் காஞ்சி வர்ணிக்கும் மதுரையின் கோட்டை வாயில் வெகு கம்பீரமாக எழுந்தது. இளவரசியின் கண்ணெதிரே. மதில்களின் அகலத்தையும், உள்ளே தெரிந்த மாளிகை களையும், கோபுரங்களையும் கண்ட யுவான் பிரமிப்பு படர்ந்த விழிகளுடன் புரவியைச் செலுத்தினான். ஆதித்யனைக் கண்டதும் வீரர்களும் மக்களும் எழுப்பிய உற்சாகக் கூச்சல்களையும், மாளிகைகளின் சாளரங்கள் திறந்து, அவனையும் ரதத்தையும் உற்று நோக் கிய மலர்முகங்களையும் கவனித்த இளவரசி யின் மனத்தில் இத்தனை இளவயதில் மக்க ளின் இத்தனை அன்பையும், ஆதரவையும் ஆதித்யன் எப்படிப் பெற்றான் என்ற வியப்பு மேலோங்கியது.

சென்று கொண்டிருந்த ஊர்வலம் சட் டென்று நின்றது. அரண்மனையை ரதம் அடைந்து விட்டதை வீரர்களின் கோஷங்கள் உணர்த்தின. வீரர்கள் ஓடிவந்து ரதத்தின் புரவிகளைப் பிடித்து நிற்க, அரண்மனையின் படிகளில் மங்கையர், கரங்களில் ஆரத்தியுடன் இளவரசியை வரவேற்கச் சித்தமாக நின்றனர்.

அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு சிற்றரசின் இளவரசிக்கு, பாண்டியர் அரண்மனையில் கிடைத்த வரவேற்பு சங்கடத்தையே ஏற்படுத்தி யது. ஆரத்தியையும் மங்கலத் திலகத்தையும் வெட்கத்துடன் ஏற்ற இளவரசி, அரண்மனை வாயிலை அடைந்ததும் நின்றாள். உள்ளிருந்து பரல்கள் ஒலிக்க யாரோ நடந்து வரும் ஒலி கேட்டது. சற்றே வயதில் மூத்த, அழகிய மங்கையொருத்தி வாயிலில் வந்து நின்றாள். அவள் கழுத்தில் மங்கல நாணும் ஒரு பெரும் முத்தாரமும் புரண்டன. அந்த ஒரு ஆரத்தைக் கொண்டு ஒரு அரசையே விலைக்கு வாங்க லாம் என்று தீர்மானித்தாள் இளவரசி. அந்த மங்கையின் விழிகளில் அபரிமிதமான அழகும் அசாத்திய கூர்மையும் பளிச்சிட்டன. இளவர சியை ஏற இறங்க ஒருமுறை அளவெடுத்த அந்த மங்கை, பின்னால் நின்ற ஆதித்யனைக் கண்டதும் குறும்பாகச் சிரித்தாள். அடுத்து அவளிடமிருந்து உதிர்ந்த சொற்களிலும் விஷமம் சொட்டியது. "சூளாமணித் தலைவ ரின் ஓலை கிடைத்ததும் ஆதித்யன் அப்படி விரைந்து சென்றதன் காரணம் இப்பொழுதல் லவா புரிகிறது!" என்றாள் அவள்.

அவள் வார்த்தைகள் இளவரசியின் முகத் தைச் சிவக்கச் செய்து தாழ வைத்தாலும் கடைக்கண்ணால் ஆதித்யனைக் கவனிக்கவும் செய்தாள் அவள்.

ஆதித்யன் முகத்தில் சதா உலவும் முறுவல் மறைந்து, ஏதோ கள்ளத்தனம் செய்து விட்டு அகப்பட்டுக் கொண்டவன் போல் விழித் தான்!

(தொடரும்)



ஒரு கின்னஸ் ஹோட்டல்!

பாங்காக் நகரத்திற்கு வெளியே 'ராயல் டிராகன்' என்ற மிகப் பெரிய சிற்றுண்டிச் சாலை இருக்கிறது. எட்டு கால்பந்தாட்ட மைதானங்களை ஒன்று சேர்த்தால் எவ்வளவு இருக்குமோ அவ்வளவு பெரியது. உலகிலேயே மிகப் பெரிய சிற்றுண்டிச் சாலை என்று கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது. இதில் ஆயிரம் வெயிட்டர்களும் 322 சமையல்காரர்களும் பணிபுரிகின்றனர். சமையலறையிலிருந்து சாப்பிடும் இடத்திற்கு வெயிட்டர்கள் செல்ல காலில் சக்கரம் (skates) அணிந்து செல்கின்றனர்.

- எஸ். கே. மூர்த்தி



1996 ஜனவரி 28
யுவ தை 14
மலர் : 54
இதழ் : 26

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஊழல் கூட்டணி!

அறுபத்தைந்து கோடி ரூபாய், 'ஹவாலா' மோசடியில் கை மாறியிருக்கிறது. அரசியல் வாதிகள், அதிகாரிகள், தொழிலதிபர்கள் என்று ஏராளமான முக்கியஸ்தர்கள் கையூட்டு பெற் றிருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள்,-லஞ்சம் கொடுத்த ஜெயின் என்பவரின் டைரிக் குறிப்பில் இருக்கின்றன. ஜெயினும் அவரது சகோதாரும் சி.பி.ஐ.யால் கைது செய்யப்பட்டு பெயிலில் வெளிவந்து விட்டார்கள். வழக்கு, கிணற்றில் போட்ட கல்லாகி விட்டது!

'பல பெருந்தலைகளின் சாயம் வெளுத்து விடாமலிருக்க, விஷயம் பூசி மெழுகப் படுகிறது! அவ்வாறின்றி உடனடி நடவடிக்கைக்கு உத்தரவிட வேண்டும்' என்று பொதுநல நோக்கு மனு ஒன்றை, பத்திரிகையாளர் வினீத் நாராயண், கார்டூனிஸ்ட் ராஜிந்தர் பூரி முதலானோர், உச்சநீதி மன்றத்தில் சமர்ப்பித்தனர். உச்சநீதிமன்றமும் உடனடி நடவடிக்கைக்கு உத்தரவிட்டு விட்டது.

சி.பி.ஐ. இந்த வழக்கை ஆராய ஆரம்பித்தது மே, 1991 இல். பொதுநல நோக்கு மனு உச்சநீதி மன்றத்துக்குக் கொடுக்கப்பட்டதோ அக்டோபர் 1993 இல். அந்த மனு மீது நடவடிக்கை வற்புறுத்தி உத்தரவு பிறந்திருப்பதோ ஜனவரி 1996 இல்!

காலதாமதம் ஒருபுறமிருக்க, அரசு அமைப்பான சி.பி.ஐ.யின் நியாயமான நடவடிக் கையைக் கூட, உச்சநீதிமன்றம் மூலம் சாட்டை சொடுக்கித்தான் பெற வேண்டியுள்ளது



என்பதே இழிநிலை.

கடந்த 1992 இல் தமிழ்நாட்டில், சிதம்பரனார் மாவட்டத்தில் காவல் துறையினரின் அத்துமீறல்களால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு, உடனடியாக நஷ்டஈடு வழங்க வேண்டும் என்ற சமீபத்திய உத்தரவையும் உச்சநீதிமன்றம்தான் பிறப்பித்திருக்கிறது.

காஷ்மீரில் தேர்தல் நடத்துவதற்கான சூழல் நிலவுகிறதா என்று மறுபரிசீலனை செய்யுமாறு தேர்தல் கமிஷனுக்கும் உச்சநீதி மன்றமே உத்தரவிட வேண்டியிருக்கிறது.


நதி நீர் பங்கீடானாலும் சரி, நஷ்டஈடு வழங்குதலானாலும் சரி, ஊழல் விசாரணை வழக்கென்றாலும் சரி, உச்சநீதி மன்றம் தலையிட்டு உத்தரவு பிறப்பித்தாலன்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்கிற அளவுக்கு நாட்டு நிர்வாகத்தில் மெத்தனம்; தேக்க நிலை!

பிரதமரைப் பொறுத்தவரையில் அரசியல் நோக்கில் தம்மை பாதிக்கக்கூடிய முடிவுகளையெல்லாம் தவிர்ப்பதும் ஒத்திப் போடுவதும், உச்சநீதி மன்ற ஆணை பிறப்பிக்கப்பட்ட பின், அதையே தமக்குக் கவசமாக்கிக் கொண்டு செயல்படுவதும் ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது.

'இந்த ஹவாலா மோசடி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் காங்கிரசுக்கு வேண்டப் படாதவர்கள். கண்துடைப்பாக மத்திய அமைச்சர்கள் மூவரையும் பலிகடா ஆக்கியிருக் கிறார்கள். தேர்தல் நெருங்கும் நேரத்தில் இப்படி ஒரு விவகாரத்தைக் கிளப்பி விட்டு, பிரதமர் ஆதாயம் தேட முயன்று வருகிறார்...' என்றெல்லாம் முதல் பார்வையில் நினைக்கத் தோன்றுகிறது.

ஆனால், சற்று கூர்ந்து ஆராய்ந்தால், தமது எதிர்காலத்தையே பணயம் வைக்கும் ஒரு செயலில் அவர் ஈடுபட்டிருக்கிறார் என்பது புரியும்.

அத்வானியும் வேறு சிலரும் வலியுறுத்துவது போல், இந்த வழக்கை ஆராய



அமைக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றம், வரவிருக்கும் தேர்தல் கருதி விசாரணையை துரிதப்படுத்தினால் உண்மை வெளிச்சமாகி விடும்.

அந்நிலையில் அத்வானி, அர்ஜுன் சிங் போன்றோர் நிரபராதிகள் என்று முடிவானால், தங்கள் பேரில் அபாண்டமான குற்றம் சாட்டப்பட்டதாகத் தமுக்கடித்தே தேர்தலில் ஜெயித்து விடுவார்கள்.

'வெறும் டைரிக் குறிப்புகளின் அடிப்படையில் விசாரணையைத் தொடர இயலாது' என்று உச்சநீதி மன்றத்துக்குப் பதில் கூறிவிடாமல், சி.பி.ஐ.யின் நடவடிக்கைக்குப் பிரதமர் பச்சைக் கொடி காட்டியிருப்பதைப் பார்க்கும் போது, வேறு சில வலுவான ஆதாரங்களின் அடிப்படையிலேயே அவர் செயல்படுவதாக நம்புதற்கு இடமிருக்கிறது.

குற்றம் சுமத்தப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கு பாதகமாகத் தீர்ப்பு அமைந்தாலும், சொந்த கட்சிக்காரர்களையும் எதிர்த்து நடவடிக்கை எடுத்த நேர்மையாளர் என்ற நற்பெயர் பிரதமருக்குக் கிடைத்துப் போகும்.

எந்த நோக்கில் பிரதமர் காய்களை நகர்த்தியிருந்தாலும் சரி, அவரது செய்கையானது லஞ்ச ஊழல் இருளில் மூழ்கிக் கிடக்கும் அரசியல் வானில் தெரியும் இலேசான நம்பிக்கை ஒளிக் கீற்று எனலாம்.

ஆனால், இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலைப் பார்க்கும் போதுதான் மனம் சோர்ந்து போகிறது. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, பல்வேறு அணிகள் கிளைகள் என்று பாகுபாடே இன்றி அனைத்துத் தரப்பினரும் பட்டியலில் இடம்பெற்றிருக்கிறார்கள்.

'நான் நிரபராதி' என்று உணர்ச்சிவசப்படும் அத்வானி கூட, தேர்தலுக்காக ஏழு விமானங்களை வாங்கியிருக்கும் ஒரு கட்சியின் தலைவர்தான்!

இந்த நிலையில், அடுத்த தேர்தலின் போது வாக்காளர் யாரை நம்பி வோட்டுப் போட முடியும்!

நாடகப் பிரவேசம்

கவி சாம்ராஜ் விஸ்வநாத சத்யநாராயணா என்பவர் விஜயவாடா எஸ்.ஆர்.ஆர். கல்லூரியில் தெலுங்குத் துறைத் தலைவராயிருந்தமையால் ராமராவுக்கு அவர் மூலம் நல்ல போதனா வசதிகள் கிடைத்தன. மாணவர்களுக்கு அவர் ஆர்வமூட்டிப் பாடம் போதிப்பார். சிரிப்பும் வேடிக்கையுமாய்ப் பாடத்தை அவர் நடத்துவதால் மாணவர்களுக்கு அவர் வகுப்பு என்றால் மிக உற்சாகம் கரைபுரளும். ராம ராவின் வாழ்க்கைக்கே இக் கல்லூரி வாழ்க்கை ஒரு திருப்பமாய் அமைந்ததென்றால் மிகையாகாது.



ஒரு முதல்வரின் கதை!

கல்லூரி ஆண்டு விழாவில் நாடகம் போடத் திட்டமிட்டனர். அவ்வமயம் 'விஸ்வநாத சத்யநாராயணா' எழுதிய 'ராசமல்லு சௌந்யம்' என்ற நாடகத்தைப் போடத் திட்டமிட்டார்கள் மாணவர்கள். அந்நாடக மேற்பார்வை முதலியவைகளை விஸ்வநாத் அவர்களே சுயமாய் மேற் கொண்டார். அதில் கதாநாயகியின் பாத்திரமே முக்கியமானது.

எந்த மாணவருமே 'ஸ்திரீ' வேடம் போட முன்வரவில்லை. அது நாடகம் போடுவதற்கே ஒரு தடையாய் அமைந்தது.

மிக அழகாய், ஆப்பிள் கன்னங்களுடன் பார்ப்போரைக் கவரும் விதத்தில் விளங்கிய ராமராவிடம் விசுவநாத் அவர்களின் பார்வை விழுந்தது. அருகில் அழைத்தார்.

"நீ இந்த வேஷத்தை போடணும்" என்றார்.

அவ்வளவுதான்! ராமராவுக்குத் தொடை நடுக்கம் ஏற்பட்டது. காலுக்குக் கீழே பூமி நழுவுவது போல் உணர்ந்தார். பயத்தால் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

"மறுக்கலாகாது. நாடகத்தைப் போட்டே தீரணும்" என்று வேண்டிக் கொண்டார்கள் மற்ற மாணவர்கள்.

தான் பெண் வேஷம் தரிப்பதா?

நாடகத்தில் நடிப்பதே தனக்குக் கை வராதது. அத்துடன் பெண் வேஷம் வேறா? "உனக்குப் பெண் வேஷம் ஜோராயிருக்கும்" - மாணவர்கள் உற்சாகமூட்டினார்கள். அவ்வேடத்தை ஏற்காமலிருக்க முடியவில்லை ராமராவால்.

அன்றுதான் நாடகம் மேடை ஏறும் தினம். வெளி ஹாலில் ஜனங்கள் கலகலத்து வழிந்து கொண்டிருந்தார்கள். மேக்கப் அறையில் வீற்றிருந்தார் ராமராவ். எதிரே இருந்த ஆளுயர நிலைக் கண்ணாடியில் தம் உருவத்தைப் பார்த்துக் கொண்டார். அரும்பு மீசை அம்முகத்திற்கு எடுப்பாய் விளங்கிற்று.

"மீசையை எடுத்துவிடு" என்றார் விஸ்வநாத் ஒரு பிளேடுடன் எதிரே வந்து நின்று.

'மீசை கோபத்தின் அடையாளம். ஆண்களுக்கு அழகு மீசையில்தான் உள்ளது. அதை எடுத்துவிடச் சொல்கிறாரே?' என்ற யோசனையில் ஆழ்ந்தார். 'என்னவானாலும் சரி, மீசையை எடுக்கவே கூடாது' என்று உறுதி பூண்டார். மேக்கப் தரித்து விக் அணிந்து புடைவை ஜாக்கெட் தரித்து எல்லாம் முடிந்து விட்டது. வெளியே பார்வையாளர்கள் நிறைந்து வழிந்து கொண்டிருந்தனர். பிரார்த்தனை முடிந்து விட்டது.

ஆர்மோனியமும் தபேலாவும் முழங்கிய ஓசை, தன்னைப் பலர் சூழ்ந்து கொண்டு கை கொட்டிக் கேலி பண்ணுவது போலுணர்ந்தார்.

ஸ்டேஜின் மேல் போக வேண்டிய சமயம் வந்துவிட்டது. தன்னுள் எழும்பிய இப்போராட்டத்தை மறைத்துக் கொண்டு ஸ்டேஜின் மேல் போய் நின்றார் ராமராவ். - இல்லை கதாநாயகி! அவ்வளவுதான்!

ஒரே குழப்பமடைந்து கலவரமடைந்து விட்ட ராமராவ் திரைக்குப் பின்னாலேயே நின்று விட்டார். கதாநாயகி மட்டுமே மேடையில் தோன்றினாள். பார்வையாளர்கள் அனைவரும் கதாநாயகி வேடம் சபாஷ் என்று மெச்சினார்கள். விஸ்வநாத் அவர்கள் மெச்சி ஆசியளித்தார். 'மீசை நாகம்மா' என்று மாணவர்கள் பட்டமளித்து விட்டார்கள் ராமராவுக்கு.

இதுவே இவரின் முதல் அனுபவம்!

சினிமா பிரவேசம்

பி.ஏ. படித்து முடித்து விட்டு வெறுமே

வீட்டில் இருப்பதை விரும்பாமல் சில தாற்காலிக வேலைகளைப் பார்த்து வந்தார் ராமராவ். சில நாட்கள் சப் கோர்ட்டில் கூட வேலை பண்ணி வந்தார்.

பி.ஏ. படித்துக் கொண்டிருந்த பொழுதே பொழுதை வீணாக்காமல் ஐ.ஏ.டி.சி. காலேஜில் சேர்ந்து பயிற்சி பெற்றார் இவர். பயிற்சி முடிந்து கன்னவரம் விமான நிலையத்தில் ப்ளையிங் ப்ராக்டிஸ் கூட நடந்தேறி விட்டது.

ரெகுலர் ஏர் ஆபீஸராய் ஆந்திராவிலிருந்து ரெகமண்ட் பண்ணைப்பட்ட இருவருள் ராமராவ் ஒருவராய் இருந்தார்.

டேராடூனில் இண்டர்வியூவுக்கு அழைப்பு வந்தது. இன்னும் சில பயிற்சிகள் முடிவடைந்தால் விமானப் படையில் சேர்ந்து விட்டிருப்பார்.

ஆனால் அவர் அப்பொழுதே திருமணமானவராயிருந்தார். பிரம்மச்சாரியாய் இருந்த சுதந்தரம் பறிபோய்விட்டிருந்தது அவருக்கு. அதனால் கிடைத்த வாய்ப்பை வீட்டாரின் பிடிவாதத்தால் கைவிட்டு விட்டார்.

சென்னை சர்வீஸ் கமிஷன் மூலமாய் சப் ரிஜிஸ்திரார் பதவிக்கு மனுப் போட்டார். சுமார் 937 மனுக்கள் வந்தன. அதில் 7 பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில் ராமராவ் ஒருவர்.

ப்ரோபேஷன் ரிஜிஸ்திராராய்க் குண்டூரில் வேலை கிடைத்தது. விஜயவாடாவில் குடும்பம்; குண்டூரில் வேலை... படிப்பைப் போலவே இதுவும் தொடர்ந்து செல்லும் என்றெண்ணினார் அவர்.



சென்னையிலிருந்து எல்.வி. பிரசாத் கடிதம் போட்டு, தான் "நம்நாடு" என்ற படத்தை எடுக்கப் போவதாகவும் அதில் கதாநாயகன் வேடம் இல்லாவிட்டாலும் ஒரு நல்ல வேடத்தை அவருக்குத் தருவதாகவும் வரச் சொல்லியும் எழுதியிருந்தார்.

ராமராவுக்கு அது பிடிக்காததால் பதில் எழுதவேயில்லை. கொஞ்ச நாளில் இன்னொரு கடிதம் வந்தது. இம்முறை ஒரே கவரில் இரண்டு கடிதங்கள் வைக்கப்படிருந்தன. ஒன்று எல்.வி. பிரசாத்தும் இன்னொன்று சுப்பாராவும் எழுதியிருந்தார்கள்.

பிரசாத் அவர்கள் செய்த சினி டெஸ்ட்டில் திருப்திகரமாய் அமைந்திருந்தது என்றும் சுப்பாராவ் அவர்கள் எடுக்கப் போகும் "பட்டிக்காட்டுப் பெண்" என்ற படத்தில் ஜெயந்த் என்ற முக்கிய வேடத்தை ஏற்று நடிக்க வேண்டும் என்றும். இது நல்ல சந்தர்ப்பம் என்றும் "புது முகங்களுக்கு இப்படிப்பட்ட சந்தர்ப்பம் கிடைப்பது கஷ்டம், உன் நலனைக் கருதுபவனாதலால் உடனே வந்து ஒப்புக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்" என்றும் எழுதியிருந்தார் பிரசாத்.

இக்கடிதம் ராமராவின் வாழ்க்கையில் ஒரு புயலாய் வந்து சேர்ந்தது. சிநேகிதர்களிடையேயும், ஆபீசிலும் இதைப் பற்றிய தர்க்கங்களும் வாதங்களும் பெருகலாயின. அனைவரும் ஏகமனதாய் சினிமாவில் சேர்ந்துவிடச் சொல்லி வற்புறுத்தினார்கள்.

ஆனால் ராமராவுக்கு விருப்பமே இல்லை. அரசாங்க வேலையை உதறிவிட்டு நாயாய் அலையும் இந்தப் பிழைப்பு எதற்கு என்றும் இதனால் என்ன நேருமோ என்றும் குழப்பமாயிருந்தது. கூட வேலை பண்ணிய இளம் உத்தியோகஸ்தர்கள் சினிமாவில் சேர்ந்து புகழ் சம்பாதித்துக் கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். வயதான சில உத்தியோகஸ்தர்களோ "அரசாங்க வேலை போனால் பிற்பாடு வயது வரம்பு கடந்தால் திரும்பக் கிடைக்காது; வேண்டாம்" என்று பயமுறுத்தினார்கள்.

ஜாயிண்ட் ரிஜிஸ்திரார் சலபதி மட்டும் ராமராவின் எதிர் காலத்தைப் பற்றி நல்ல நம்பிக்கை வைத்திருந்தார். ராமராவ் இந்தச் சந்தர்ப்பத்தை விட்டுவிடுவதை அவர் விரும்பவில்லை. "வாப்பா கொண்டபள்ளிக்கு பிக்னிக் போய்விட்டு வருவோம்" என்று ராமராவை அழைத்துக் கொண்டு கொண்டபள்ளிக்குப் போய்விட்டார்.

சலபதி அவர்கள் நல்லது கெட்டது தெரிந்தவர். அவர் மீது ராமராவுக்கு நல்ல மதிப்பு உண்டு. அதனால் சலபதி, "பாருப்பா, இந்த

உத்தியோகத்தை எத்தனை நாள் பண்ணி னாலும் இப்படியேதான் இருக்கணும். சந்தர்ப் பம் கூடி வரும் போது அதிர்ஷ்டமும் சேர்ந்து தான் வரும். உனக்குக் கடவுள் நல்ல தோற் றத்தை அருளியிருக்கிறார். படிப்பு, குணம் இவற்றையும் வழங்கியிருக்கிறார். நடிப்புக் கலையிலும் பயிற்சி இருக்கிறது. பிரசாத்தின் மனத்துக்கு உன்னைப் பிடித்து விட்டது. உடனே போ, உன்னை அதிர்ஷ்டம் வரவேற் காமல் போகாது" என்று மணிக் கணக்காய் உருவேற்றினார்.

"திருப்தி என்பது வாழ்க்கைக்குக் கிரீடம் போன்றது. என் வாழ்க்கைக்கு உத்தியோகம் போதுமானது. இப்பொழுது நான் சந்தோஷ மாய்க் கவலையின்றி இருக்கிறேன். இந்த உத்தி யோகமும் போய்விட்டால் பிறகு வயது வரம்பு



"எவ்வளவு சம்பாதிச்சாலும் திருப்தி யேயில்லை என் மனைவிக்கு..."

"என்னதான் சொல்றாங்க!?"

"அமுலாக்கப்பிரிவு வந்து 'அரெஸ்ட்' பண்ற அளவுக்கு ஏன் இன்னும் சம்பாதிக்கலேன்னு திட்றா...!"

— நெய்வேலி ஜீவி

கடந்து விடும்.. அப்புறம் சர்க்கார் வேலை கிடைக்காது. நமக்கெதற்கு இந்தச் சினிமாத் தொல்லைகள் எல்லாம்?" என்று வாதாடலா னார் ராமராவ்.

"போ. ஆனால் திரும்பி வராதே" என்றார் சலபதி. சிநேகிதர்கள் உற்சாகத்துடன் கை தட்டி ஆரவாரித்தனர். நல்ல நாள் பார்த்துச் சென்னைக்குப் பயணமானார் ராமராவ்.

அரசியல் பிரவேசம்

என்.டி.ஆர். தமக்குத் தாமே நியமித் துக் கொண்ட கட்டுப்பாடும், கடின நியம முமே அவர் வெற்றிக்குக் காரணமாய் அமைந்ததெனலாம்.

இவர் பஞ்ச நிவாரண நிதிக்காக, நிதியுதவி வேண்டி நிகழ்ச்சிகள் நடத்தித் தந்த பிறகு. செய்த அடுத்த காரியம் தேச பாதுகாப்பு நிதிக் காக நிதி திரட்டி உதவியதைக் குறிப்பிடலாம்.

அன்று ஆந்திர தேசத்து முதல் மந்திரியா யிருந்த நீலம் சஞ்சீவ ரெட்டியின் விருப்பத்தை உணர்ந்து, திரைப்பட நிகழ்ச்சிகளைத் தர முன் வந்து; விஜயவாடா, கர்நூல், ஹைதராபாத் ஆகிய மூன்று இடங்களிலும் நிகழ்ச்சிகளை ஏற்படுத்தித் தந்து சுமார் பத்து லட்சம் மதிப் புள்ள நிதியைத் திரட்டித் தந்து உதவியது குறிப்பிடத் தக்கது.

நாட்டுப் பற்றுக்குத் தன்னலமின்றி இவர் தொண்டாற்ற மற்றொரு சந்தர்ப்பமும் கிட்டி யது.

விஜயவாடாவில் ஏற்பட்ட பயங்கர நெருப்பு விபத்தில் சிக்குண்டு பாதிக்கப்பட் டோரின் உதவிக்காகத் தம் சொந்தக்கரத்தி னால் செக்கின் மீது ஒன்று என்ற இலக்கத்தை எழுதி லட்ச ரூபாய்க்குரிய சைபர்களைப் போட்டு 1964 ம் ஆண்டு ஜூன் 7ம் தேதி ஆந்திர முதன் மந்திரி காசு பிரம்மானந்த ரெட்டியின் பெயருக்கு வழங்கியருளினார்.

என்.டி. ராமராவ் அவர்கள் தினசரி வேலை பண்ணுவது 20-21 மணி நேரங்கள். இடையே 2 அல்லது 3 மணி நேரமே ஓய்வு கிடைக்கும். வீட்டு நிர்வாகத்தைக் கவனிப்ப தெல்லாம் தம்பி த்ரிவிக்ரம ராவ்தான்.

ஆந்திர நாட்டில் குழப்பமும், அநீதியும் நேர்மையற்ற ஆட்சியும் இருப்பதைக் கண்டு வருந்திய இவர், - ஜனங்கள் என்னை ஆதரித்து 'சூப்பர் ஸ்டார்' ஆக்கிப் புகழ் ஏணியில் ஏற்றி வைத்துள்ளார்கள். அந்த ஜனங்களின் நன்மைக்காக நாம் என்ன பண்ணலாம்? தம் நாட்டிற்குத் தாம் ஆற்ற வேண்டிய கடமை யாது? என்ற யோசனையில் ஆழ்ந்தார்.

அதனால்தான் தமக்கு ஜனங்கள் ஏற் படுத்தித் தந்த புகழைக் கொண்டு அந்த ஜனங் களுக்கே சேவை செய்யத் தீர்மானித்துக் கொண்டார். இதனால் 'தெலுங்கு தேசம்' உரு வாயிற்று. என்.டி.ஆரின் அறைகூவல் ஜனங் களைத் தட்டி எழுப்பியது. ஸ்ரீ கிருஷ்ணரின் பாஞ்ச ஜன்யத்தைப் போல அவர்களின் செவி களில் அது விழுந்தது. லட்சக்கணக்கான ரசிகர்கள் அவருக்குப் பக்கபலமாக நின்றார் கள். என்.டி.ஆர். அவர்களுக்குப் பேராதரவு தந்து முதல் மந்திரியாக அரியணையில் அமர்த்தி மகிழ்ந்தார்கள்.

(17.4.83 கல்கி இதழுடன் இலவச இணைப் பாக வெளிவந்த சுசீலா கனகதுர்க்கா எழுதிய 'ஒரு முதல்வரின் கதை'யிலிருந்து.)



எங்களுடன் என்.டி.ஆர்.

- பத்திரிகையாளர்கள் நினைவு கூர்கிறார்கள்

ப்ரியன் : என்.டி.ஆர். கட்சி துவங்கிய புதிதில் (ஏப்ரல் 1982) முதல் முறையாக அவரைச் சந்தித்த போது, முதலில் பேட்டிக்கு பிகு பண்ணிக் கொண்டாலும் பிறகு ஒப்புக் கொண்டு உணர்ச்சிமயமாகப் பேச ஆரம்பித்து விட்டார். வன்முறை அரசியலுக்கு முடிவு கட்டும்விதமாக, 'நான் ஆட்சிக்கு வந்தால் குண்டர்களைச் சுட்டுக் கொல்லவும் தயங்க மாட்டேன்' என்று அவர் கூறிய போது, 'ஜனநாயகத்தில்...' என்று நான் இடைமறித்தேன்; அவ்வளவுதான்! எழுந்து நின்று கொண்டு ஆவேசமாகப் பேச ஆரம்பித்து விட்டார்!

தொடர்ந்து ஆந்திர பிரதேச சட்டமன்றத் தேர்தலில் என்.டி.ஆர். பிரசாரம் செய்து கொண்டிருந்த நேரம். தமிழக எல்லையை ஒட்டியுள்ள சத்தியவேடு என்னும் நகருக்குத் தமது சைதன்ய ரதத்தில் மாலை ஐந்து மணிக்கு அவர் வருவதாக இருந்தது. பத்திரிகையாளர்களெல்லாம் காத்திருந்தோம். இரவு பதினொரு மணியாகியும் அவர் வராததால் நாங்களெல்லாம் அருகிலிருந்த டீக்கடை பெஞ்சுகளில் போய் அமர்ந்து விட்டோம். பதினொன்றரை மணிக்கு அவர் வந்ததும் முதலில் எங்களைத்தான் தேடி வந்தார். "ரொம்ப சாரி. ஒவ்வோர் ஊரிலும் ஏகக் கூட்டம். அதனால்தான் குறித்த நேரத்தில் வர முடியவில்லை. நீங்களெல்லாம் பசியோடு இருப்பீர்கள்; முதலில் வந்து சாப்பிடுங்கள்" என்று எங்களை விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் சென்று அனைவரையும் சாப்பிடச் செய்த பிறகுதான் பொதுக் கூட்டத்திற்கு வந்தார்!

பின்பு, சரியாகப் பதினொரு வருடங்கள் கழித்து 1994-ல் மீண்டும் அவரைச் சந்திக்க வேண்டி வந்தது. பல்வேறு அரசியல் மற்றும் குடும்ப அனுபவங்கள் காரணமாகப் பேச்சில் பழைய ஆவேசம் குறைந்திருந்தாலும் அவரது தன்னம்பிக்கை மட்டும் குறையவேயில்லை.

கல்கியின் சார்பாகச் சந்தித்த ஒவ்வொரு முறையும் ராஜாஜி பற்றிப் பேசாமல், எம்.எஸ். - சதாசிவம் தம்பதி பற்றி விசாரிக்காமல் அவர் பேச்சைத் துவங்கியதேயில்லை!

இளங்கோவன் : என்.டி.ஆர். முதல்வரான புதிது. ஹைதராபாத் தலைமைச் செயலகமே ஓர் இராணுவ ஒழுங்குடன் செயல்பட ஆரம்பித்திருந்த நேரம்!

மாலை சுமார் ஆறு மணிக்கு தலைமைச் செயலகம் சென்றேன். யாருமே இல்லை. முதல்வர் என்.டி.ஆர். அறைக்கு வெளியே பியூன் மட்டுமே இருந்தார். முன்னறிவிப்பு, அப்பாயின்மெண்ட் என்று எதுவுமே இல்லை என்றாலும் நம்பிக்கையோடு பியூனிடம் சொல்லியனுப்பினேன். உடனே வரச் சொன்னார். தன்னந்தனியாக உட்கார்ந்து ஃபைல் பார்த்துக் கொண்டிருந்தவர், நான் உள்ளே சென்றதும் ஃபைல்களையெல்லாம் மூடி வைத்தார். சென்னை நகரில் பல காலம் வசித்தும் கூட தமது எண்ண ஓட்டங்களை முழுமையாகத் தமிழில் வெளியிட முடியாததற்கு வருத்தம் தெரிவித்து விட்டு ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார்.

பேட்டி முடிந்ததும் தமது வீட்டிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த ஃப்ளாஸ்க்கிலிருந்து தாமே டீ ஊற்றிக் கொடுத்தார். நான் குடித்து முடிக்கும் வரை எதுவும் பேசாமல் என்

னையே பார்த்துக் கொண்டிருந்தார். நான் பேச முற்பட்ட போது, 'சாப்பிடும் போது பேசாமலிருப்பதுதான் நல்லது' என்று தடுத்து விட்டார்.

பேட்டி முடிந்ததும் அவருடைய சம்பத்திய போட்டோ ஒன்று தேவை என்கிற நிலை எனக்கு. அங்கு வேறு யாருமே இல்லாத சூழ் நிலையில் அவரிடமே எப்படிக் கேட்பது என்று தயங்கியபடியே விடைபெற எழுந்தேன்.

எனக்குள் இருந்த எண்ணத்தை எப்படித் தான் புரிந்து கொண்டாரோ, "ஃபோட்டோ ஏதும் வேண்டுமா? நீங்கள் தங்கியிருக்கும் ஹோட்டல் முகவரியைக் கொடுங்கள்" என்று அவராகவே தமது பேடில் முகவரியைக் கேட்டு எழுதிக் கொண்டார். அடுத்த நாள் காலை சொன்னபடியே போட்டோக்கள் வந்து சேர்ந்தன.

பிறகு சில மாதங்கள் கழித்து, தெலுங்கு தேச கட்சியின் மாநில மாநாடு நடைபெற்ற போது சென்றிருந்தேன். அவரது ராம கிருஷ்ணா ஸ்டுடியோவில் மாநாடு. எனக்குத் தெலுங்கு சுத்தமாகத் தெரியாதென்பதால் அங் குள்ளோரிடம் என்னைச் சரியாக அறிமுகப் படுத்திக் கொள்ள முடியவில்லை. அவர்களும் என்னை உள்ளே விடவில்லை. வாசலிலேயே காத்திருந்தேன். சிறிது நேரத்தில் என்.டி.ஆரின் கார் வந்தது. கையைக் காட்டி நிறுத்தினேன். என்னைப் பார்த்த அவர், "Oh you! சாரி.. பெயரை மறந்து விட்டேன்..." என்று ஒருமுறை மட்டுமே சந்தித்திருந்த என்னை ஞாபகம் வைத் துக் கொண்டு உள்ளே அழைத்துச் சென்றார். அவரது நினைவாற்றல் பிரமிப்பாக இருந்தது!

டி. ஆர். ரமேஷ் : கல்கியில் ஆந்திர மாநிலச் சிறப்பிதழ் என்.டி.ஆர். முதல்வராக இருந்த போதுதான் வந்தது. அந்தச் சமயத்தில் என்.டி.ஆருடனான எங்களுடைய அனுபவம் இன்னும் பசுமையாக மனத்தில் இருக்கிறது. கல்கியிலிருந்து வரப் போகிறோம் என்று கடி தம் எழுதியவுடனே ஓர் அரசாணையே (ஜி.ஓ) பிறப்பித்து விட்டார் அவர். 'நம் மாநிலத்திற் குச் செய்தி சேகரிக்க வரும் கல்கி பத்திரிகை யாளர்களுக்குத் தேவையான உதவிகள் செய்ய வேண்டும்' என்ற அந்த அரசாணையை நாங் கள் செல்வதாகக் குறிப்பிட்டிருந்த அத்தனை மாவட்டங்களின் கலெக்டர்களுக்கும் அனுப்பி யிருந்தார்.

நாங்கள் ஹைதராபாத்தில் போய் இறங்கி யதிலிருந்து எங்களுடனே மூத்த அரசு அதி காரி ஒருவர், மற்றும் ஓர் அரசாங்க வேன், கையில் ஜி.ஓ. நகல்...! அந்த ஜி.ஓ.வை வைத்துக் கொண்டு நாங்கள் எங்கும் செல்ல முடிந்தது. செய்தி சேகரிக்க எந்தத் தடங்கலும் இல்லை. அன்றைய அரசை விமர்சிக்கும் பல செய்தி களையும் கூட சேகரித்தோம்.

அத்தனையையும் முடித்துக் கொண்டு முதல்வரைப் பேட்டி காணத் தலைநகர் திரும் பினோம். பேட்டிக்காக அவர் எங்களுக்குக் கொடுத்திருந்த நேரம் அதிகாலை நான்கு மணி! எங்கே காலம் கடந்து தூங்கி விடப் போகிறோமோ எனப் பயந்து கொண்டு ராத் திரியெல்லாம் விழித்திருந்து இரண்டு மணிக்கு எழுந்து, குளித்து ரெடியாகி விட்டோம்.

முதல்வரின் அலுவலகம் இருந்த அபிட்ஸ் பகுதிக்குப் போனால், இருள்பிரியாத அந்த நேரத்தில் எங்களுக்கு ஆச்சர்யம் காத்திருந்தது. அந்த நேரத்தில் என்.டி.ஆரின் வீட்டில் தலை மைச் செயலாளரும், பல ஐ.ஏ.எஸ். அதிகாரி களும் காத்திருந்தார்கள். என்.டி.ஆர். கண்டி பேட்டிலிருந்த தமது இல்லத்திலிருந்து பூஜை, உடற்பயிற்சியெல்லாம் முடித்துக் கொண்டு அபிட்ஸுக்கு வந்து எங்களுக்காக 'பிரெஷ்'ஷா கக் காத்திருந்தார். பேட்டி ஆரம்பமானது.

என்.டி.ஆர். எனும் கலைஞரின் உணர்ச்சி கரமான பேச்சுக்களையும், ஆவேசமான பதில் களையும் கேட்டு வியந்தோம். அவருடைய முகத்தில் நவரச பாவமும் ததும்பியது என்று தான் சொல்ல வேண்டும். 'தெலுகுதல்லி' (தெலுங்குத் தாய்) எனும் ஒரு மொழி உணர் வின் அடிப்படையில் உணர்வுபூர்வமான ஒற் றுமையை ஆந்திரர்களிடையே ஏற்படுத்த வேண்டும், அதே சமயம் பாரத நாட்டின் தேசிய நீரோட்டத்தோடு ஆந்திரம் கலந்தே செல்ல வேண்டும் என்றார். மாநிலமும், நாடும் எப்படி ஒன்றிலிருந்து ஒன்று பிறழாமல் இருக்க வேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்தார். எந்தக் கேள்விக்கும் அவரிடமிருந்து தயக்கமில் லாத உணர்ச்சிபூர்வமான பதில்தான் கிடைத் தது. தேவையான குறிப்புக்களும், அரசுத் திட் டங்களுக்கான புள்ளி விவரங்களும் கூடவே இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தந்தார்கள்.

இத்தனைக்கும் நடுவிலே புகைப்பட நண் பர் யோகா ஃபோட்டோக்களை எடுத்துத் தள் ளிக் கொண்டிருந்தார். அவருக்கும் 'டக்' 'டக்' கென்று என்.டி.ஆர். போஸ் கொடுத்ததுதான் ஆச்சர்யமான விஷயம்! யோகா எப்பொழுது 'கிளிக்' செய்யப் போகிறார் என்று முன்கூட் டியே உணர்ந்து, அந்த கணத்திலான தமது உணர்ச்சிக் கலவை முகத்தில் பொங்க, ஒரு செகண்ட் ஃப்ரீஸ் செய்து போஸ் கொடுத்து விட்டுத் தம் பேச்சைத் தொடருவார். கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குப் பரிசாக வழங்கு வதில் அவர் மிகுந்த ஆர்வமாக இருந்தார்.

தந்திரங்கள் நிறைந்த அரசியல்வாதிகளுக்கு நடுவில், குதூகலம், ஆவேசம் எதையும் மறைக் காத அரசியல்வாதியாக வாழ்ந்த என்.டி.ஆர். எனும் கலைஞனைப் பற்றி நாங்கள் வியந்து கொண்டே தமிழகம் திரும்பினோம்.

தி.மு.க. மாநாடும் மிஸ்டர் பதினொரு லட்சமும்!

"மிஸ்டர் பதினொரு லட்சம்" என்றார் அண்ணா, 1966-ல் சென்னை விருகம்பாக்கத்தில் நடந்த தி.மு.க.வின் நான்காவது மாநில மாநாட்டில். தொண்டர்களுக்கு அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்பது புரிந்து விட்டது. ஏக கரகோஷம். முகத்தில் தாங்க மாட்டாத பெருமிதத்துடன் கூட்டத்தினரைப் பார்த்து வணங்கினார் கருணாநிதி. ஆம்! அவர்தான் மிஸ்டர் பதினொரு லட்சம். அப்போது தி.மு.க.வின் பொருளாளராக இருந்த கருணாநிதி பதினொரு லட்சம் வசூலித்தது பெரிய சாதனையாகக் கருதப்பட்டது!

இன்று காலம் மாறி விட்டது. தேர்தல் களத்தில் லட்சியங்களுக்கு மட்டுமல்ல, லட்சங்களுக்கும் மதிப்புக் கிடையாது. முன்பெல்லாம் தன்னலம் கருதாது வெறும் டீ குடித்து வேலை செய்த தொண்டர்கள் இப்போது மிஸ்ஸிங். தோரணம் கட்டுவதிலிருந்து ஆர்ச் போடுவது, கட்அவுட் வைப்பது போன்ற எல்லாமே 'காண்ட்ராக்ட்'தான். தி.மு.க.வுக்கே இந்த நிலை என்றால் மற்ற கட்சிகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! இதை உணர்ந்து தானோ என்னவோ தமிழகமெங்கும் பம்பரமாகச் சுற்றி நிதி வசூலித்துக் கொண்டிருக்கிறார் கலைஞர்.

எப்படியும் ஏப்ரல், மே-யில் சட்டமன்றத் தேர்தல் வந்தாக வேண்டிய நிலையில், பத்துக் கோடி வசூல் செய்ய வேண்டும் என்று குறிக்கோள் வைத்திருக்கிறார்களாம். இதற்கிடையில் திருச்சியில் நடக்க இருக்கும் எட்டாவது மாநில மாநாடு, தொண்டர்களிடையே பெரிய எதிர்பார்ப்பைத் தோற்றுவித்திருக்கிறது. மாநாட்டுக்குப் பிறகு நிதி வசூல் இன்னமும் தீவிரமாகுமாம்!

கட்சிப் பத்திரிகையான முரசொலியில் சமீபத்தில் வந்த விவரப்படி இதுவரை 4,83,64,981 ரூபாய் வசூலாகி இருக்கிறது. இதில் கோவை மாவட்டத்தின் பங்கு மட்டும் ஒரு கோடியே மூன்று லட்சம். 'எந்த மாவட்டம் அதிக நிதி கொடுக்கிறதோ அங்கே எனது பிறந்த நாள்* பொதுக் கூட்டத்தை வைத்துக் கொள்கிறேன்' என்று கலைஞர் சொல்லி விட்டதால் மாவட்டங்கள் போட்டி போடுகின்றன. செயலாளர்களும் குட்டித் தலைவர்களும், நன்கொடைப் புத்தகங்களும் கையுமாக அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

வரும் தேர்தல் காரணமாக இப்போது பெரும்பாலும் எல்லா கட்சிகளுமே நிதி வசூல் செய்வதால், வியாபாரப் பிரமுகர்களும், தொழிலதிபர்களும் 'மிரண்டு' போயிருக்கிறார்கள். தி.மு.க.வைப் பொறுத்தவரை, தேர்தல் நிதி தவிர, மாநாட்டு நிதி வேறு வசூலிக்க வேண்டியிருக்கிறது.

இப்போது திருச்சியில் மூன்றாவது முறையாக தி.மு.க.வின் மாநாடு நடக்கிறது. ஒவ்வொரு மாநாட்டின் போதும் தீர்மானங்கள்






"நீங்க ரஜினி ரசிகரா இருக்கலாம். அதுக்காக ஆபீசுக்கு லேட்டா வந்துட்டு, "நான் எப்ப வருவேன் எப்படி வருவேன்னு யாருக்குமே தெரியாது. ஆனா கொஞ்சம் லேட்டா தான் வருவேன்'னு வசனம் பேசறது கொஞ்சமும் நல்லால்லே!"

— அகத்தை எஸ். விநாயகமூர்த்தி



தேர்தல் நெருங்க நெருங்க திருச்சியில் அடுத்தடுத்து பல்வேறு கட்சிகளும் மாநாடுகள் நடத்துகின்றன. பகுஜன் சமாஜ் கட்சியினர் அவர்களது மாநாட்டிற்கு எழுதிய வரிகளைத் தான் எங்களால் இன்றும் ஜீரணிக்க முடியவில்லை. மாயாவதி தமிழர் தலைவியாம். தேவநாதன் என்பவர் அடுத்த முதல்வராம்! அட கடவுளே!



"ஏம்பா! திருச்சி போனா மலைக்கோட்டை காட்டுறேன்னியே! எங்கேப்பா?"

"ம்! அதோ தெரியுதே ஒரு கட் அவுட்! அதுக்குப் பின்னாடி இருக்கு. இப்ப தெரியாது!"

— பி. கிரி

நிறைவேற்றப்படும். நாட்டு நடப்புகளில் கட்சியின் நிலை என்ன என்று தீர்மானங்களின் மூலம் தெரியவரும். அண்ணா காலத்தில் நடந்த நான்கு மாநாடுகளில், முதல் நாள் பொதுக் குழுவில், பரஸ்பரம் கலந்து விவாதித்து எதைப் பற்றி தீர்மானம் கொண்டு வருவது என்று முடிவு செய்வார்கள். பின்பு அதை முன்மொழிந்து பேச, வழிமொழிந்து பேச ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்தப் பேச்சுக்களையெல்லாம் வகுப்பறை மாணவர்கள் போல தொண்டர்கள் அமர்ந்து கேட்பார்கள்.

ஆனால் இப்போது நிலைமையில் மாற்றம்! தீர்மானக் குழு என்று ஒன்று போடப்பட்டு இருந்தாலும் கலைஞர்தான் தீர்மானங்களை வடிவமைப்பவர் என்பது கழகத்தில் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். தீர்மானங்களெல்லாம் இப்போது மாநாட்டில் ஜெராக்ஸ் காப்பிகளாக வழங்கப்பட்டு விடுகிறது. தீர்மானக் குழு செயலாளர் அவற்றை வரிசையாகப் படிப்பதோடு சரி, முன்மொழிவதும் வழிமொழிவதும், ஓட்டிப் பேசுவதும், வெட்டிப் பேசுவதும், வரலாற்றுக் குறிப்புகளாகி விட்டன.


அதுசரி, இப்போது திருச்சியில் நடக்க இருக்கும் மாநாட்டில் என்ன தீர்மானங்கள் வரும்? மாநாடு காவிரிக் கரையோரம் நடைபெறுவதால் காவிரி பற்றித் தீர்மானம் கண்டிப்பாக உண்டு. நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பைக் கர்நாடகம் மதிக்க வேண்டும்; நடுவர் மன்றம் விரைவாக இறுதித் தீர்ப்பை வழங்க வேண்டும்; நடுவர் மன்றத்தின் தீர்ப்பைச் செல்லாக் காசாக்கும் முயற்சியில் மத்திய-மாநில அரசுகள் ஈடுபடக் கூடாது என்று தீர்மானம் வலியுறுத்தும். வன்முறை அரசியலுக்கு எதிரான தீர்மானமும் உண்டு. 'அந்நியச் செலாவணி மோசடி' பற்றி சசிகலா குடும்பத்தினர் மீதான விசாரணை தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜெயலலிதாவின் ஊழல்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்படும்.


மத்திய அரசின் டெலிகாம் ஊழல்; ஹவாலா ஊழல் ஆகியவற்றையும் குறிப்பிட்டு நரசிம்ம ராவ் ஆட்சிக்குக் கண்டனம் தெரிவிக்கப்படுமாம்; காங்கிரஸோடு தேர்தலில் உடன்பாடு கிடையாது எனவும் அறிவிக்கப்படும்! இதைத் தவிர இந்தி எதிர்ப்பு, ஈழ விவகாரம், 69 சதவீத இடஒதுக்கீடு பற்றிய தீர்மானங்களும் இருக்கிறதாம்.

இப்போது தமிழகத்தில் அணிகள் பிரிந்துள்ள சூழலில், தி.மு.க. கூட்டணிக்கே ரஜினி ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் தீர்மானமும் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் வரும் தேர்தலில் தி.மு.க. வென்றால் என்ன செய்யும் என்பதையும் அறிவிக்க வேண்டும் என்றும் இளைய தலைமுறையினர் விரும்புகிறார்கள். ஆனாலும் மூத்த தலைவர்கள் ஏனோ யோசிக்கிறார்களாம்!

— ப்ரியன்

பெப்ஸி vs கோககோலா





அதிகாரபூர்வமான சண்டை

கிரிக்கெட் போட்டிகள் இரு நாடுகளுக்கு இடையேயான ஆரோக்கியமான விளையாட்டு என்கிற நிலை மாறிப் போய்விட்டது! விளையாடும் அணிகளுக்குள் மட்டுமின்றி கிரிக்கெட் மைதானத்துக்கு வெளியேயும் போட்டி ஜுரம் பரவுகிறது. இப்போது டெம்ப்ரேச்சர் ஏறிக் கொண்டிருப்பது இரண்டு குளிர்பான கம்பெனிகளுக்கு; பெப்ஸி மற்றும் கோககோலா!

கோககோலா நிறுவனம் எக்கச்சக்கமாகச் செலவழித்து, வருகிற உலகக் கோப்பை பந்தயத்துக்கான 'அதிகாரபூர்வ' ஸாஃப்ட் ட்ரிங்க், என்ற முத்திரையைப் பெற்றுள்ளது. அதையே பெரிய சாதனையாக்கி விளம்பரப்படுத்தியும் வருகிறது!

இன்னும் பல 'அதிகாரபூர்வ'ங்கள் இந்த ஆண்டு உலகக் கோப்பை பந்தயத்தின் போது கேலோச்சகம்.

சென்டர்ஃப்ரெஷ் — அதிகாரபூர்வ சூயிங்கம்! (இதற்கென நாற்பது லட்ச ரூபாய் செலவழித் துள்ளதாம் இந்த நிறுவனம்)

இந்தியன் ஏர்லைன்ஸ் — அதிகாரபூர்வ விமான கம்பெனி! (இந்திய பயணங்களுக்கு)

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி — அதிகாரபூர்வ வங்கி.

விஸா கார்ட்-(கிரெடிட் கார்ட்) — அதிகார்பூர்வ கிரெடிட் கார்டு.

சுனில் காவஸ்கரின் ப்ரோஃபஷனல் மானேஜ்மன்ட் குழு —அதிகாரபூர்வ விளம்பரப் பலகை கான்டிராக்ட் உரிமையாளர்கள்.

பன்காம் நிறுவனம் — அதிகாரபூர்வ கம்ப்யூட்டர் தகவல் நெட்வொர்க்!

தனது அதிகாரபூர்வத்தைப் பறைசாற்றிக் கொள்ளும் வகையில், சுமார் ஐம்பது கோடி ரூபாயை விளம்பரங்களுக்குச் செலவழிக்கவிருக்கிறது கோககோலா நிறுவனம்.

பெப்ஸி சும்மா இருக்குமா? 'ரோலிங் ஸ்டோன்ஸ்' என்ற பாப் மியூசிக் குழுவை அமெரிக்காவிலிருந்து வரவழைத்து, தில்லி மற்றும் பம்பாயில் நிகழ்ச்சிகள் நடத்த முற்பட்டது.

கோக் விளம்பரங்கள் மிகுதியாகும் நேரத்தில் இப்படிச் செய்ய வேண்டும் என்ற திட்டத்தில் மண் விழுந்து விட்டது. காரணம், ரோலிங் ஸ்டோன்ஸ் இசைக் குழு வருவதே சந்தேகம் என்ற நிலை. அதற்கு பதில், அதே அளவு கவர்ச்சிகரமான குழுவை வரவழைக்க இயலுமா என்று முயற்சி செய்து வருகிறார்கள்.

அந்த இடைக்காலத்தில் பெப்ஸி விளம்பரங்கள் மற்ற 'அதிகாரபூர்வ' நிறுவனங்களை ஏகமாக கிண்டலடிக்கின்றன. (காண்க cartoon) 'பெப்ஸி' இதில் அதிகாரபூர்வமாக எதுவும் கிடையாது (There is nothing official about it) என்பதே இப்போதைக்கு பெப்ஸியின் விளம்பர வாசகம்!


— **சித்தார்த்**

உள்ளே — வெளியே

சமீபத்தில் ஒரு தனியார் தொலைக்காட்சியில், பி.ஜே.பியின் உமாபாரதி, "அயோத்தியில் செய்தது போலவே மதுரா - கிருஷ்ண ஜென்ம பூமியிலும் உள்ள மசூதியை இடித்து, கோவில் கட்டுவோம்" என்று தீவிரமாகப் பேசி இருக்கிறார்.


அரசியல்வாதிகள் இப்படி அபாயகரமான ஸ்டேட்மென்ட்கள் விடுத்துக் கொண்டிருக்க, கிருஷ்ணஜென்ம பூமியின் நிஜ நிலவரம் பார்த்து வரப் போன போது...

வெளியே :



• மசூதி

மெட்டல் டிடெக்டரை வைத்துக் கொண்டு மூலைக்கு மூலை போலீஸ்காரர்கள். ஏ.கே. நாற்பத்தேழுடன் உப்பரிகையில் நின்று உற்றுப் பார்க்கும் ஸ்பெஷல் செக்யூரிட்டி. உரக்கப் பேசினால் உதைப்பார்களாக்கும் என்று யாரும் பேசுகிற இல்லை. கடைக்காரர்கள் கூட கீழ் ஸ்தாயியில்தான் வியாபாரம் நடத்துகிறார்கள். சூழ்நிலையில் ஒருவித அமானுஷ்யம் நிலவுகிறது.



• பளிங்குக் கிருஷ்ணர்

மெட்டல் டிடெக்டருக்கும் ஏ.கே. நாற்பத்தேழுக்கும் என்ன காரணம் என்றால், கோவிலும் மசூதியும் 'L' ஷேப்பில் ஒட்டிக் கொண்டு ஒரே இடத்தில் - திருவல்லிக்கேணி ஒண்டுக் குடித்தனங்கள் போல! தவிர, கிருஷ்ணர் பிறந்ததாகச் சொல்லப்படும் இருட்டு சிறைச்சாலை அறை - மிகச் சரியாக மசூதிக்குள் இருக்கிறது.

"எலக்ஷனை எதிர்நோக்கி, பி.ஜே.பி. சும்மா இருக்கிறது. இல்லையேல் எப்போதோ இன்னொரு 'டிசம்பர் 6' நடந்திருக்கும்" என்கிறார்கள் சுற்றுப்புறக் கடைக்காரர்கள்.

சமீப காலத்தில் மசூதிப் பக்கம் வருகிற முஸ்லிம்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டதாகச் சொன்னார் ஒரு 'பண்டிட்ஜி'. காரணம், பி.ஜே.பியினர் ஒருபுறம் இருக்க, உள்ளூர் மக்களே, கிருஷ்ணரை 'தலித் கடவுள்' என்று அழைத்து, ஓர் இயக்கமாக ஆரம்பிக்க ஆயத்தங்கள் செய்து வருகிறார்களாம்.

"அசம்பாவிதங்களுக்கு அஞ்சி, மசூதிக்கு மட்டுமல்ல; கோவிலுக்கு வருபவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்து விட்டது!" என்று வருத்தப்பட்டார் பிரசாதக் கடைக் காரர். (பிரசாதம் என்ன தெரியுமா இங்கே?

• கோயில்



கிருஷ்ணஜென்ம பூமியிலும் புகைச்சல் ஏற்படுத்தும் பி.ஜே.பி!

பால்கோவா!

உள்ளே :

முற்றிலும் பளிங்கு. தரை, சுவர் எல்லாம் துடைத்துத் துடைத்து பளபளப்பாக வைத் திருக்கிறார்கள் அந்த நீள ஹாலை. மூலைக் கொருவர் உட்கார்ந்து தியானத்தில் லயித் திருக்க, ஆட்டோமாட்டிக் எலக்ட்ரானிக் மணி டங் டங் என்று கொஞ்ச நேரம் தானே அடித்து, ஓய்கிறது.

நிறைய சன்னிதி. பிராகாரமெல்லாம் கிடையாது. அந்த ஒரு ஹால்... ஓரத்தில் சன்னிதி.

பளிங்கு கிருஷ்ணருக்குப் பின்னால் போட்டோ ஸ்டுடியோக்களில் இருப்பது மாதிரி இயற்கைக் காட்சிகள் வரைந்து வைத் திருக்கிறார்கள்.

சர்ட், ஸ்வெட்டர் எல்லாம் போட்டுக் கொண்டு மந்திரம் சொல்லும் அர்ச்சகர் நமக்கு வித்தி யாசம். (குளிரான குளிர் ஐயா!)

மெயின் கோவிலிலிருந்து கிருஷ்ணர் பிறந்த அறை - சன்னிதிக்குச் செல்ல ஒரு இருட்டுப் பாதை. நுழைந்து திரும்பினால் சின்ன ஹால். பலர் உட்கார்ந்து பஜனையில் லயித்திருக்க, திரைக்குப் பின்னால் அந்தச் சிறு பூமி.


அடிக்கடி மூடி வைத்து, காக்க வைத்து, திறந்து காட்டி, கலர் கலர் பூக்களைப் பிரசாத மாகத் தருகிறார்கள்.

சுற்றுலா வருபவர்களை, வேண்டாம் என்றாலும் விடாமல் துரத்தி, புராணம் - சரித்திரம் - பூகோளம் சொல்லி, அட்லீஸ்ட் ஐந்து ரூபாயாவது கறந்து விடும் ஒரு கோஷ்டி இருக்கிறது இங்கே. மாட்டிக் கொண்டால், அறுத்தே அழித்து விடுகிறார்கள்!

- கிச்சா


பூக்களினால்


நாம் அடையும் நன்மைகள்



பூக்கள் மனிதனுக்கு நல்ல மனத்தெளிவும், அழகும், நறுமணமும், ஒளியும், ஒளி நிறங்களும், உள்ளத்திற்கு உற்சாகமும், அன்பு, இரக்கம் போன்ற உணர்ச்சிகளும், உடலுக்கு உறுதியும், தைரியமும், இன்னும் தியானசக்தியும், ஆன்மீக உணர்வும், மலர்ச்சியும், தீய குணங்களை மாற்றும் சக்தியும் இவற்றையெல்லாம் நமக்கு அளித்து உதவும்.

பூக்களின் பெயர்கள்	பலன்கள்
1. மல்லிகையும், முல்லையும்	புனிதத்தன்மை தந்து சம நிலையும் அளிக்கும் நறுமணத்தை முகர்வது அவசியம். இதனால் பூமியில் மறைந்து உள்ள அதன் சாரம் இரகசிய உண்மை நாம் ரசித்துக் கொள்ள முடிகிறது.
2. நாட்டு ரோஜாப்பூ	சரணாகதி பாவனை தந்து ஆண்டவர்பால் இனிய எண்ணமும் தந்து தியானம் வளர்க்கும்.
3. ரோஸ்கலந்த சிவப்பு ரோஜா	ஆண்டவரின் பேரன்பையே வெளிப்படுத்தும்.
4. துளசி - பூவும் இலையும்	பக்தி தரும்.
5. அரளிப்பூ	மன அமைதியும் சரணாகதியும் ஆண்டவர்பால் இனிய எண்ணமும் தந்து தியானம் வளர்க்கும்.
6. கருஞ்சிவப்பு (கிரிம்சன்) அரளிப்பூ	தவறான போக்கினைத் தடுத்து நல்வழிக்கு மாற்றிச் செலுத்தும்.
7. அல்லிப்பூ	இலட்சுமியின் பொருள்வளம் தரும்.
8. வெள்ளைத் தாமரைப்பூ	தெய்வீகப் பேருணர்வை சைத்திய சக்தியைத் தரும்.
9. மணமுள்ள கதிர் பச்சை அல்லது திருநீற்றுப் பச்சை என்னும் பூவும்	ஆண்டவருடன் இணைந்து இன்பம் தரும்.
10. சண்பகப்பூ	மனோ உள்ளப்பாடுகளை சீர்ப்படுத்தி அமைக்கும்.
11. மணமுள்ள மருவு இலை	ஆண்டவரின் சாந்நித்யத்தையும் உணர்வையும் தரும். வைகறை ஸ்ரீ அரவிந்த ஆசிரமம் 1986-4
12. நாகலிங்கப்பூ	அன்றாடம் கடவுளுக்கு அர்பணித்தால் பொருள் பற்றாக் குறையை நீக்கிச் செல்வத்தை கொடுக்கக்கூடிய ஒரு ஆற்றல் உண்டு.







Sarathy

13. மருக்கொழுந்து	வேண்டாதவற்றை விட்டுவிட்டு வேண்டியவற்றை பெற்றுக் கொள்ளலாம். இது புதிய வாழ்வை அளிக்கவல்லது.
14. விருட்சிப்பூ	வெண்மை நிறமுள்ள பூ குளுமை நிறைந்த அமைதியை உடலில் உள்ள அணுக்களில் பாய்ச்சுகின்றச் சக்திப் படைத்தது. அந்த அமைதி நோய்களை குணப்படுத்துகின்ற வல்லமை வாய்ந்தது.
15. எருக்கம்பூ	பயத்தை ஒழித்து தைரியத்தை வளர்த்துக் கொள்ளலாம்.
16. மகிழம்பூ	பொறுமையைக் கொடுக்கும்.
17. பவளமல்லி	சிறந்த விருப்பங்களை வளர்க்கலாம் சிவபுராணம் கூறுதல்.


பெருஞ்செல்வம் விரும்புவோர்: தாமரை மலர், வில்வம், சதபத்திரம், ஸங்கபஷ்பம் ஆகியவற்றால் பூஜித்தால் சந்தேகமில்லாமல் பெருஞ்செல்வம் கிடைக்கும்.



அக்கினிப் புராணம் கூறுதல்: மலர்களில் மிகச் சிறந்ததாக சொல்லப்படுவது மாலதி புஷ்மாகி



புஷ்பத்தின் பெயர்	பலன்
1. மருக்கொழுந்தினால் அர்ச்சனை செய்தால்	ஆனந்தகரமான வாழ்வை அடைவர்
2. மல்லிகைப் பூவினால் அர்ச்சனை செய்தால்	எல்லா பாவங்களிலிருந்து விடுபடுவான்
3. ஜாதி புஷ்பத்தால் அர்ச்சித்தால்	வைகுந்தப் பதவி
4. அலரிமுட் செவ்வந்தி மலர்களால் அர்ச்சித்தால்	தெய்வப்பக்தி நிறைந்தவனாய் விளங்கி வைகுண்டத்தை அடைவர்.



மலர்களை மாலைகளாக தொடுத்து பகவானுக்கு அர்ப்பணம் செய்வது மலர்களால் அர்ச்சிப்பதைவிட எண்ணற்றமடங்கு பலன் தரும். ஒருவன் தன் சொந்த தோட்டத்திலிருந்து மலர்களைச் சேகரித்து வந்து பகவானுக்கு அர்ப்பணித்தால் அடையும் பலன்களைவிட மும்மடங்கு பலனைக் காட்டும். பிரதேசத்தில் மலரும் மலர்களை பறித்துவந்து அர்ச்சிப்பதால் அடையலாம்.



• THE ADULTS' GAME



வருஷா வருஷம் நடைபெறும் திரைப்பட விழாக்களால் பொதுவாக ஏதேனும் நன்மை இருக்கிறதா என்று பார்த்தால் கண் டாக்டர்கள், ஸ்வெட்டர் விற்பனையாளர்கள், ஆஸ்துமா டாக்டர்கள் - இவர்கள் அதிக லாபம் பெறுவதில் முன்னணியில் இருக்கிறார்கள்.

இரண்டாமிடத்தில், கொஞ்சம் புத்திசாலித்தனம் மிக்க தொழில் முறை சினிமாக்காரர்கள். ஒருநாளைக்கு ஆறு, ஏழு படம் என்று யாகம் மாதிரி உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாமல் இருபது நாட்கள் பார்த்து, குறிப்புகள் எடுத்துக் கொண்டால், அடுத்த ஒரு வருஷத்துக்கு 'முற்றிலும் மாறுபட்ட' படங்களாகத் தந்து கொண்டே இருக்கலாம்.

இந்தச் சிலரைத் தவிர, இதரர்களுக்கு எந்தப் பயனும் இதனால் இருப்பதாகத் தெரியவில்லை. "பிலிம் இன்ஸ்டிடியூட் பையன்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமல்லவா?" என்று அரசுத் தரப்பில் உக்கிரமாகக் கேட்கிறார்கள்.

புதுதில்லி திரைப்பட விழாவில் நாம் பார்த்தமட்டில், முதல் நாலைந்து காட்சிகளுக்குள் ஒரு உதட்டு முத்தமாவது வராத பட்சத்தில், தாடி வைத்த இன்ஸ்டிடியூட் பையன்கள் கோபித்துக் கொண்டு எழுந்து போய் விடுகிறார்கள்.

பொது மக்கள் இந்தத் திரைப்பட விழாப் படங்களைப் பார்க்கிறார்களா என்றால், 'நம் ஊர் சனி, ஞாயிறு காலைக் காட்சிப் படம் மாதிரி இருக்குமா?' என்று விசாரித்து, உறுதி செய்து கொண்ட பின்பே போகிறார்கள்.

அந்த வகையில், இந்த வருஷம், படங்கள் திரையிடப்பட்ட ஆறு தியேட்டர்களில் அநேக காட்சிகள் மிக காலியாகவே ஓடின.

தவிர, உலகம் முழுவதிலுமிருந்து பிராய்ந்து எடுத்து வரும் இருநூறுக்கும் மேற்பட்ட படங்களை, எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதும் புரியாத புதிர்.

மிகத் தரமான, கலை அம்சத்துடன் ஒரு ஜப்பான் படம் ('SHARAKU' - ஒரு ஓவியனின் தனி - பொது வாழ்வின் வீழ்ச்சியைச் சித்திரிக்கிறது) பார்த்து விட்டு, படு திருப்தியாக நாம் வெளியே வந்த போது, எதிர்ப்பட்ட ஸ்ரீலங்காவின் முன்னணி திரை விமர்

சகர் சிவகுமாரன், கிட்டத்தட்ட அழுதபடிக்கு வந்தார்.

"என்ன சார்? விஸா ரத்தாகி விட்டதா?" என்ற போது,

"அதை ஏன் சார் கேட்கறீங்கள்? வெகு மட்டமான ஒரு ஹாங்காங் படம் கண்டு வாறேன். சீப் சென்டிமென்ட் பார்ஸல். வெறுத்தே போனேன்."

இது ஒரு சாம்பிள்தான். முதல்தர மசாலா, சென்ட்டிமென்ட், தமாஷ், மூன்றாம்தர மசா, சென்ட், தமா. சட்சட்டென்று ஒரு உத்தமமான படம், போனால் போகிறது ரகம், கதற வைக்கிற ரகம், கண்ணீர்ப் புகை குண்டுக்கு மாற்று ரகம் என்று கலந்து கட்டி, உடுப்பி ஓட்டல் பார்ஸல் போலப் படங்களைக் கொண்டு வந்து விடுவார்கள் போலிருக்கிறது. அவரவருக்குப் பார்க்கக் கிடைப்பது அவரவர் அதிர்ஷ்டம்.

உலகப்பட விழாவும் உடுப்பி ஓட்டல் பார்சலும்!



"அதுல பாருங்க. அந்த ஆளு கையில வீடியோ கேமரா வெச்சிட்டு அலையறானில்லை? ஆக, அவன் ஒரு டாக்குமென்ட்ரி எடுக்கற ஆளு."

"இல்லைங்க. கொஞ்சம் கவனிங்க. திருட்டுத்தனமா எடுக்கறான்! நொண்டிக் காலுக்கு சாய்மானக் கட்டை மாதிரி வெச்சிட்டு, அதுலயே வீடியோ கேமராவை ஒளிச்சி வெச்சி எடுக்கறானில்லை? ஏதோ ஃபிராடு ஆசாமி."

"கரெக்டு. முதல் சீன்லயே பாரு. எதுக்காக அவ்னோ ஸ்பீடா கார்ல போர்ச்சுகலுக்கு வரான்? எதுக்காக இறந்து கிடக்கற வீட்டுக்குள்ள பூந்துக்கறான்? ஒரே இருட்டு வேற! மர்மப் படம்னு நினைக்கறேன்."

சப்டைட்டில் போட்டும், ஹை-கால்டு அறிவு ஜீவிகளைக் கூட சிண்டைப் பிய்த்துக் கொள்ள வைத்த இந்த LESBON STORY போன்ற படங்களுக்கும் பஞ்சமில்லை! (இயக்குநர் Wim Wenders பிரான்ஸின் உன்னத டைரக்டர்களுள் ஒருவராம். உலகம் என்பது வெறும் ஒலிகளாலும் அசைவுகளாலும் மட்டுமே ஆனது என்ற சித்தாந்த நிருபணம்தான் அந்த ஆசாமியின் வீடியோ கேமரா விஷயம் என்று கொஞ்சம் தத்துவமும் தெரிந்த சினி ரசிகர்கள் விளக்கினார்கள். ஒருவேளை சரியாகவும் இருக்கக்கூடும். விளக்குவதற்கு Wim Wenders நேரில் வந்திருக்கவில்லை.)

சில இயக்குநர்கள் நேரிலும் வந்திருந்தார்கள். நம் ஊர் சுகாசினி உட்பட, தினசரி பிற்பகல் ஒரு மணியிலிருந்து இரு

● கோவை விவசாய பல்கலைக் கழக வளாகத்திலுள்ள ஒரு பிரம்மாண்ட புளிய மரத்தின் பெயரே 'ஸ்ட்ரைக் ட்ரீ'! மாண வர்களோ, ஊழியர்களோ வேலை நிறுத் தம், உண்ணாவிரதம் முதலியவற்றின் போது அம்மர நிழலில்தான் இருப்பார் கள் என்பதால் அப் பெயர்! அண்மை யில் உண்ணாவிரதமிருந்த மாணவர்கள் கோரிக்கைகள் வெற்றியடைந்ததும், அப் புளியமரத்திற்கு மாலையிட்டு, புளியமரம் வாழ்க என்று கோஷமிட்டனர்!

– வடவள்ளி ராமசுப்பிரமணியன்

பது, இருபத்தைந்து நிமிஷங்கள் பத்திரிகை யாளர்களைச் சந்தித்த அந்த உலக' இயக்குநர் கள், தத்தம் படங்களைப் பற்றிய சந்தேகங்கள், கேள்விகளுக்கு விளக்கப் பதில் சொன்னது உபயோகமான சமாசாரம்.

ஒரு சீன இயக்குநருடன், (ZHANG YIMOU தொடக்க நாள் படமான, கிட்டத்தட்ட God Father, நாயகனை ஞாபகப்படுத்திய 'Shangai Triad' என்ற, ஒரு மாஃபியாக் கூட்டம் பற்றிய படத்தை இயக்கியவர்) கும்பல் சந்திப்பு உற்ச வம் முடிந்து வெளியே வந்து தனியாகப் பேசிய போது,

"உங்கள் நாட்டில் ஏன் பெரும்பாலும் கராத்தே, ஜூடோ படங்களே எடுக்கிறீர்கள்? அல்லது குருமார்களின் உயர்வு பற்றி?"

"எங்கள் நாட்டில் படம் எடுக்கச் சில எல் லைகள் இருக்கின்றன. அரசை விமர்சிக்கவோ, குறைகூறவோ முடியாது. அரசின் கொள்கை களுக்கு மாறாக எதையும் சொல்ல முடியாது; கூடாது. அப்படிச் செய்தால், ஒன்று - படத் தைத் தடை பண்ணி விடுவார்கள். அல்லது படம் எடுத்தவரை உள்ளே தள்ளி விடுவார் கள். என் முந்தைய படங்களுள் ஒன்றான 'Judou' ஏற்கெனவே இதுபோல் 'தடை' வாங்கி இருக்கிறது. இப்போது புரிந்திருக்குமே? கராத்தே படங்கள் வருவதற்கான காரணம்?"

இன்னொரு ஆச்சர்யம், அடுத்து உடனே கிடைத்தது HAMMER AND SICKLE என்ற ரஷ்யப் படம் பார்த்த போது... பொதுவாக ரஷ்யப் படங்கள் வயலும் வாழ்வும் போல இருக்க வேண்டும் என்பது அந்நாட்டு சாஸ் திரம். கூட்டுப் பண்ணைத் திட்டம், டிராக் டர்கள், மகசூல் இவை இல்லாத ரஷ்யப் படங் கள் காண்பது அரிது.

கூட்டு ரஷ்யா உடைந்ததும் இதற்கெல்லாம் டாட்டா சொல்லி விட்டு ஹாலிவுட் பாணி யில் எடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

மேற்சொன்ன H&S படம், ஓர் அழகிய காதல் சமாசாரம்.

உடம்பு சரியில்லாமல் ஆஸ்பத்திரியில் சேரும் ஒருவனுக்கு, நர்ஸ் மேல் காதல் வந்து, உடம்பு சரியாகப் போய் விடுகிறது. ஆனால், இவனை அந்த நர்ஸ் பெண் ஏற்க மறுத்து விடுகிறாள்.

வருஷங்கள் ஆகி, இவனுக்கு ஒரு கல்யாண மும் ஆகி, குழந்தையும் ஆகிவிட்ட பின் மீண் டும் அந்த நர்ஸ் காதலியைச் சந்திக்க – மறைந் திருந்த ஞாபகங்கள் பற்றிக் கொண்டு விடுகின் றன.

உடன் படம் பார்த்த டைரக்டர் பார்த்தி பனிடம் படம் பற்றி அபிப்ராயம் கேட்ட போது, சில டைரக்டோரியல் டச்சஸைக் குறிப்பிட்டு சிலாகித்தார்.

"ஆனா சில இடங்கள் ரொம்ப வேகமா போறதால, புரிய மாட்டேங்குது. சினாப்ஸிஸ் படிச்சிட்டு, படம் பார்க்க வரணும் இனிமே!"

கிட்டத்தட்ட எல்லா ஃபெஸ்டிவல் படங்களுக்கும் ஒரேவித மணம், குணம் இருக் கிறது. பெரும்பாலான படங்களில் ஹீரோக் களுக்கு, மனைவி – காதலி என்று இரண்டு பேர் இருக்கிறார்கள். காதல் தொடர்பாக எழும் குற்றங்களே பல படங்களில் காண்பிக் கப்படுகின்றன. பெண்கள், குற்றங்களுக்குத் தயங்குவதில்லை.

மிக மென்மையான அமெரிக்கப் படமான 'A walk on the clouds' ல் காணாமல் போகிற புருஷன் பற்றிக் கவலைப்படாமல் (of course, அவனுக்கு வேறு காதலி கிடைத்து இருக்க,) மனைவியாகப் பட்டவள், இன்னொருத்த னைத் தேடிக் கொண்டு விடுகிறாள்.

இதே, 'Fools die fast' என்ற கனடா படத்தில் தன் காதலுக்குக் குறுக்கே நிற்கும் எஜமா னனை, காதலனுடன் சேர்ந்து கொன்றே போடுகிறாள் ஹீரோயின்! (அபத்தமாக இறந்து போகும் அந்த ஓட்டல் முதலாளி fool ஆ, அல் லது ஒரு ஃபிராடு ஆசாமியை நம்புகிற அந்த தேவதைப் பெண் fool ஆ என்கிற கேள்வியை 'THE END'லிருந்து யோசிக்க வைக்கிறார் டைரக்டர்.)

இந்த ஃபார்முலா வட்டங்களை மீறிய சில மிக உன்னதப் படங்கள் இல்லாமல் இல்லை. ஆனால் மொத்தப் படத்தில் அவை ஒரு சதவீதம் இருந்தால் ஆச்சர்யம்!

இந்த வருஷ திரைப்பட விழாப் படங்களி லேயே மிகச் சிறந்தது என்று சொல்லத்தக்கது, 'THE ADULTS' GAME' என்ற இரானியப் படம். ஒரு மாதிரியாக அர்த்தம் பண்ணிக் கொண்டு அவரவர் அலறியடித்துக் கொண்டு அரை மணி முன்னதாகவே தியேட்டருக்குள் போய்

விட்டார்கள்.

ஆனால் படம் வேறு ஜாதி. ஈரான் மீது போர் தொடுக்கும் ஈராக், முடிந்த வரை அழித்து, சில பகுதிகளைத் தனதாக்கிக் கொண்டு விடுகிற நோக்கில், ஒரு சிறிய நகரைச் சூழ்ந்து கொள்கிறது. தப்பி ஓடியவர்கள் போக மிச்சம் உள்ளவர்களை விளையாட்டாகச் சுட்டுப் போடுகிறார்கள். கிழவர்கள் முதல் ஒரு வயதுக் குழந்தை வரை, மிருகங்கள் முதல் மலர்கள் வரை எதுவும் அவர்கள் விட்டு வைப்பதாக இல்லை.

நகர் முழுக்க ரத்த நதி. வீடுகள் இடிந்து, கிட்டத்தட்ட மயானமாக இருக்கிறது.

எப்படியோ உயிர் தப்பி இருக்கிறாள் ஒரு 7-8 வயதுப் பெண்! அப்பா, அம்மா, அண்டை வீட்டுக்காரர் என்று ஒருத்தரும் பாக்கி இல்லாத நிலையில் தன்னந்தனியாக இடிபாடுகளினிடையே ராணுவத்தார் கண்ணில் படாமல் சுற்றி வருகிறாள்.

எதிர்பாராவிதமாக ஒரு கைக்குழந்தை அழுது கொண்டிருப்பதைக் காண்கிறாள். விட்டுப் போக மனமில்லை. எடுத்துக் கொள்கிறாள்.

ஆனால் அதுவோ, நேரம் காலம் தெரியாமல் அழுது, அவளைச் சிக்கலில் மாட்டி விடுகிறது. ராணுவம் துரத்த, சந்து சந்தாக அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடி, ஓடி, ஓடி... (நடுவே புட்டிப்பால், விளையாட்டு சாமான், அலம்பி விடுதல், தூளி கட்டுதல் என்று அந்தக் குழந்தையின் அழுகையை நிறுத்த அந்தச் சிறுமி எடுக்கிற சின்னச் சின்ன அவசர முயற்சிகள் கவிதை!)

ஏதடா ஒரு குட்டிப் பெண் இந்த ஆட்டம் காட்டுகிறாள் என்று எரிச்சலடையும் ராணுவம், பீரங்கி கொண்டு வந்து, காலனியையே அழிக்கிறது!

குழந்தையுடன் அவள் நடுரோடில் வந்து விழுகிறாள் – நம் நெஞ்சம் பதைக்க – நல்ல வேளை உயிருடன்!

கண் விழித்துப் பார்த்தால் எதிரே ஒரு மிலிட்டரிக்காரன்! சரிதான். 'சுட்டுக் கொள்' என்று அவள் எழுந்து நிற்க, எதிர்பாராமல் ஒரு இரக்கத் தென்றல் அவனைத் தாக்கி, பிண வண்டியில் அவளையும் அந்தக் குழந்தையையும் மறைத்து ஏற்றிக் கொண்டு போய் நகர் எல்லையில் விட்டுப் போய் விடுகிறான்.

"நம்ம பம்பாயெல்லாம் இதுமாதிரி வந்திருக்க வேண்டியதுங்க! ப்ச்!" என்றார் உடன் படம் பார்த்த ஒளிப்பதிவாளர் பன்னீர் செல்வம்.

அதுக்கென்ன! அடுத்த வருஷம் இதே படம் வேறு மாதிரி இங்கே வராமலா போய் விடும்?

- கிச்சா

'சுருக்-நறுக்' என்று ஒரு சொல்லோவியம்-16

ஓய்வுக் காலம் என்பது....

ஓய்வுக் காலம் என்பது ரிடையர் ஆவது மட்டும் அல்ல; கடுமையான வேலைகளுக்கிடையில் சிறிது நேரம் மனத்தையும் உடலையும் ஓய்வு பெறச் செய்கிறோமே, அதுவும் ஓய்வுக் காலம்தானே!

உங்கள் நோக்கில் இந்த ஓய்வு பற்றி என்ன கருதுகிறீர்கள்? உங்களின் சிந்தனையைக் கீழுள்ள கூப்பனில் ஒரு சொல்லோவியமாக எழுதியனுப்புங்கள். பிரசுரமாகும் ஒவ்வொரு சொல்லோவியத்துக்கும் ஐம்பது ரூபாய் பரிசு.

இன்னும் பத்து வாரங்களுக்குத் தொடர இருக்கும் போட்டியில் அதிக முறை பரிசு பெறும் ஒருவருக்கு ஒரு ஜோடி டைடன் கைக் கடிகாரங்கள் மெகா பரிசு!

முடிவு தேதி : 5.2.96

போட்டி முடிவுகளில் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. (ஆர்)

ஓய்வு என்பது : ....

....

....

....

....

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

பரம்பரை



ஜமீன்தார் குடும்பங்களும் ஜிகினா ஆடைகளும் குலப்பகை விவகாரமும் ரவிகுமார் படங்களின் டிரேட் மார்க் களங்களாகி வெகு நாட்களாகி விட்டன. மனுஷன் அதைவிட்டு அரை சென்டிமீட்டர் கூட நகரமாட்டேன் என்று அடம்பிடிப்பதால் ஒரு படத்துக்கும் இன்னொன்றுக்கும் வித்தியாசமே புலப்பட மாட்டேனென்கிறது.

இந்தப் படத்தில் அப்பா மகன் பகை பற்றிச் சொல்கிறார். இரண்டாம் தாரத்தின் சகுனி செயல்களால், சீனியர் ஜமீன் விஜயகுமார், தமது ஜூனியர் பிரபுவை சின்ன வயதிலேயே ஒதுக்கித் துரத்திவிட, அந்த ஜூனியர் வளர்ந்து, கடாமீசையெல்லாம் வைத்துக் கொண்டு, சந்தர்ப்பம் கிடைக்கிற போதெல்லாம் ரோஜாவுடன் ஆடிவிட்டு, வில்லனை உதைத்து விட்டு, இறுதியில் பரம்பரைப் பெயரை நிலை நாட்டுவதுடன் ஒரு வழியாக சுபம் போடுகிறார்கள்.

சம்பவங்களே இல்லாமல் திணறுகிறது, திரைக்கதை. இடைவேளை வரைக்கும் இரண்டு படம் பார்த்துவிட்ட உணர்வு. (அப்புறம் நடப்பதெல்லாம் அரைத் தூக்க நினைவு)

ரோஜாவை முதல் முதலாக நடிக்க வைத்திருக்கிறதைத் தவிர ரவிகுமார் முத்திரை படத்தில் தெரியவில்லை.

பசும்பொன் பாதிப்பிலிருந்து மீளாத பிரபு. ரஜினி ஸ்டைலில் துண்டை மாற்றிப் போடுவதெல்லாம் நல்ல தமாஷ். உடம்பை மிகமிகக் குறைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

படத்தின் ஆதார விஷயமான அப்பா-மகன் பகைக்கான காரணம் வெகு அற்பம். சின்னப் பையன் விஷம் வைத்துக் கொல்ல முயல்கிறான் என்று நம்பர் 2 மனைவி சொல்வதை நம்பி விடுகிறாராம் சொந்தமாகப் பெற்ற அப்பா! இந்த அபத்தத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கிற விசுவாச ஊழியர்கள் ஒருத்தர் கூடவா வாயைத் திறக்க மாட்டார்கள்?

பெண்கள் மேம்பாடு, உழைப்பாளர்களின் ரத்தம், நரம்பு இன்னபிற சமாசாரங்கள் பற்றியெல்லாம் ஆங்காங்கே 'புரட்சிகர'மான வசனங்கள் சில வைத்திருக்கிறார்கள். கவுண்டமணி - செந்தில் காமெடியையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டு விடுகின்றன இவை! தொடர்ந்து படம் பிடித்துக் கொண்டே இருப்பதால் அலுத்துப் போயிருக்கிறார் அசோக்ராஜன். லைட்டிங், மூவ்மெண்ட் எதிலும் ஒரு சதம் கூடப் புதுமை இல்லை. சமோசாவே கவையில்லாதபோது சட்னி எப்படி இருந்தால் என்ன என்று கருதிவிட்டார் போலும்!



சந்தை

• ஞானமலர்கள்/ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்/வானதி பதிப்பகம், சென்னை – 17/ரூ. 80.

காஞ்சிப் பெரியவர் அவ்வப்போது அளித்த பத்திரிகை பேட்டிகள், ஆற்றிய சொற்பொழிவுகள், அருளுரைகளின் தொகுப்பு. கனமான புத்தகம்.

• சுயராஜ்ஜியம்/எஸ்.எஸ். மாரிசாமி/லட்சுமி பதிப்பகம், சென்னை–30/ரூ. 48.

ராஜாஜியுடன் நெருங்கிப் பழகியவரான ஆசிரியரின் அனுபவத் தொகுப்பு. அக்கால அரசியல் சூழ்நிலையின் பின்னணியில் தம் அனுபவங்களை விறுவிறுப்பாகத் தொகுத்திருக்கிறார். சுவாரஸ்யமான நாவல் படிக்கிற உணர்வை ஆங்காங்கே கெடுப்பது – அச்சுப் பிழைகள்.

• கல்வெட்டுக்களில் திருமால் திருப்பதிகள்/ந. வேங்கடேசன்/திருமுடி பதிப்பகம், புதுவை – 605 110/ரூ. 16.

கல்வெட்டு ஆராய்ச்சியில் ஆர்வம் மிக்க ஆசிரியரின் புதிய முயற்சி. திருமால் திருப்பதிகள் பற்றிய செய்திகள் எந்தெந்த ஊர் கல்வெட்டுகளில் உள்ளன என்று தேடித் தொகுத்திருக்கிறார்.

• திருவருட்பா திரட்டு/வ.த. ராமசுப்ரமணியம்/தமிழ் நிலையம், சென்னை–17/ரூ.100.

வள்ளலாரின் வரிகளுக்கு விளக்கம் தந்திருக்கிறார்.

• ஸ்ரீகாஞ்சி முனிவரின் அமுத மொழிகள்/நாகர்கோவில் கிருஷ்ணன்/குமரன் பதிப்பகம், சென்னை –17/ரூ. 40.

ஆசார்ய சுவாமிகளின் அருளுரைகளின் தொகுப்பு.

• சித்தர்கள் பரிபாஷை அகராதி/டாக்டர் இரா. மாணிக்க வாசகம்/திருமகள் நிலையம், சென்னை – 17/ரூ.60.

விளக்கனி, சினமிளகு, சுசித்துருமம், சுடுகாட்டுப்பூ – இப்படி சித்தர்களின் சங்கேத சொற்களையெல்லாம் தேடித் தொகுத்து அர்த்தம் சொல்லியிருக்கிறார் ஆசிரியர். சுவாரஸ்யமான நூல்.

• ஐந்து விநாடிகள்/ஏ.கே. கோபாலன் பப்ளிஷர், சென்னை–93/ரூ. 25.

காந்தியை ஒரு கேரக்டராக வைத்து ஜெர்மானிய நாடகாசிரியர் வால்டர் ஏரிஷ் ஷேபர் எழுதிய நவீன நாடகத்தின் தமிழாக்கம். அமைப்பு மிக நேர்த்தி.

• கட்டுரை மலர்கள்/இமயப் பதிப்பகம், நகை-1,/ரூ. 35.

தஞ்சை உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்ட கட்டுரைத் தொகுப்பு நூல். டி.கே.சியிலிருந்து சி.என்.ஏ. வரை அறிஞர்களின் கட்டுரைகள் உள்ளன.

• கண்ணியம் மிகு காயிதெ மில்லத்/ஜே.எம். சாலி/அறிவு நிதி பதிப்பகம், சென்னை – 82/ரூ. 40.

காயிதெ மில்லத்தின் வாழ்க்கை வரலாறு – அழகு தமிழில்.

• கடலோரக் குருவிகள்/பாலகுமாரன்/விசா பப்ளிகேஷன்ஸ், சென்னை–17/ரூ. 50.

ஆசிரியரின் விறுவிறுப்பான புதிய நாவல். திரைப்பட இயக்குநர் ஷங்கரின் முன்னுரையுடன்.

• இதுதான் இறைநெறிப் போராட்டம்/அப்துல் வாஹித்கான்/இஸ்லாமிய நிறுவனம் டிரெஸ்ட், சென்னை – 12/ரூ. 18.

நபிகள் நாயகம் அவர்களின் நெருங்கிய தோழராக இருந்த அபூ பக்கர் (ரலி)யின் அறப் போராட்டங்களை விவரிக்கும் ஆங்கில நூலின் தமிழாக்கம்.

• காவிரியின் கதை/சரஸ்வதி ராம்நாத்/கங்கை புத்தக நிலையம், சென்னை – 17/ரூ. 30.

காவிரி நதி தனது வரலாற்றைத் தானே கூறுவதோடு கூடவே பெண்ணாறு, பாலாறு, வைகை கதைகளையும் சொல்கிறது.

16

மாலை மயங்குகின்ற நேரம்

கணவனின் அரவணைப்புக்காக உதயரேகா பெரிதும் ஏங்கிக் கிடந்தவள்தான். ஆனால், அன்று கிருஷ்ணசந்திரனின் மார்பிலேயே புதையுண்டு போவாள் போல் ஒட்டிக் கொண்டு கிடந்தபோது, கணவன் தன்னை அணைத்திருக்கிறான் என்பதை அவள் உணரக்கூட இல்லை.

ஏதோ, பூதாகாரமாக வந்து விட்ட பேராபத்திலிருந்து அவளைக் கொஞ்சமேனும் காக்கக்கூடிய புகலிடத்தில் தஞ்சமடைந்திருப்பதாக ஓர் எண்ணம். அவ்வளவே!

துன்பத்துக்குப் பயந்து அவள் ஒண்டிக் கொள்ள, அவளது வேதனையை விரட்டுவான் போல அவனும் அவளை அணைத்துக் கொள்ள, இருவரும் வெகுநேரம் அப்படியே அமர்ந்திருந்தார்கள்.

எந்தவிதமான சேதி கிடைத்தாலும், உடனே தொடர்பு கொள்வதாக உறுதியளித்த நண்பரிடமிருந்து தகவலே இல்லை.

சற்று நேரம் ஓய்ந்து போய்ப் பேசாமல் கிடப்பதும், ஏதாவது பயங்கரக் கற்பனையில் திடுமென உடல் நடுங்குவதும், அதற்கு மாற்றாகச் 'சித்தி, அப்பா' என்று எதையாவது பேசுவதுமாக, உதயரேகா பொழுதை விரட்டினாள்.

நிலைமைக்கேற்றபடி, மனைவியின் நெற்றியில் விழுந்த கூந்தலை ஒதுக்குவதும், தலையை மென்மையாக வருடுவதும், முதுகைத் தடவுவதும், கூடவே ஏதாவது பேசுவதுமாக மனைவியோடு கிருஷ்ணசந்திரனும் ஒத்துழைத்தான்.

திடீரென்று ஒன்று தோன்றவும், அவசரமாக எழுந்து சென்று ரிமோட்டை எடுத்து டீ.வி.யை ஆன் செய்து 'பிபிசி'யை வைத்து விட்டு, மீண்டும் விரைந்தோடிச் சென்று கணவனிடம் ஒட்டிக் கொண்டாள் உதயரேகா.

ஆனால், பி.பி.சி.யில் இந்த விமானத்தைப் பற்றிக் குறிப்பிடத் தொடங்கியதுமே, இதை ஏன் வைத்தேனோ என்று படபடக்கும் நெஞ்சை அழுத்தி நோவுடன் காத்திருந்தாள்.

இந்த விமானத்தோடான தொடர்பு அறுபட்டுப் போனதைப் பற்றிக் கூறிய செய்தி அறிவிப்பாளர், விமானத்தில் பயணம் செய்த மந்திரியின் பெயரைக் கூறி, பயங்கரவாதிகள் அவரைக் குறிவைத்திருந்ததாகவும், அவர்களது சதி வேலையால் விமானம் வெடித்துக் கடலில் விழுந்து முழுகியிருக்கக்கூடும் என்று நம்பப்படுவதாகவும் சொல்ல உதயரேகாவுக்கு உடம்பு தூக்கித் தூக்கிப் போட்டது.

"இது வெறும் ஊகம்தான், உதி. ஐயம் திரிபற அறியப்பட்ட செய்தியல்ல. இப்படி நடந்திருக்கக் கூடும். என்று சும்மா ஜோஸியம் தான் சொல்கிறார்கள் பார்."

கொஞ்சம் தென்படைந்தவளின் கவலை வேறுபுறம் பாய்ந்தது. தம்பியும் தங்கையும் இப்போது இந்தச் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தால்? "அவர்களுக்கு ஆறுதல் சொல்ல அங்கே யாருமே இல்லையே! பாட்டி சும்மாவே லபோதிபோ! யாராவது கொஞ்சம் சத்தமாகப் பேசினாலே கைகால் நடுங்கத் தொடங்கிவிடும்... சித்தியிடம் அவர்களுக்கு உயிர்! அவர்கள் வேறு பா..வம்..."

"உதயா, யோசிம்மா. கொஞ்சம் யோசித்துப் பார்த்து விட்டு, அப்புறம் தேவைப்பட்டால் கவலைப்படலாம். பார், இந்த அதிகாலை நேரத்தில் யார் உட்கார்ந்து டீவியை– அதுவும் இந்த வெறும் செய்திச் சானலைப் பார்த்துக் கொண்டிருக்கப்போகிறார்கள்?"

கணவன் பேச்சின் உண்மை உணர்ந்து சற்றே ஆறுதலாய்ப் பெருமூச்சு விட்டாள் உதயரேகா. ஆனால் முழு நிம்மதி கிடைக்கவில்லை. அந்த நேரத்தில் யாரும் டீ.வி.முன் உட்காருவது வழமை இல்லைதான். ஆனால் அப்படி உட்காரவே கூடாது என்று சட்டம் ஒன்றும் இல்லையே!

இப்படி வெகுநேரம் அல்லாடி அவதிப்பட்டுக் கலங்கி, "என்னால் தாங்க முடியவில்லையே..." என்று உதயரேகா முனகிய போது, டெலிஃபோன் மணி அடித்து, நல்ல சேதி கிடைத்தது.

'கண்டேன் சீதையை' என்று தேவையானதை முதலில் சொன்ன அனுமானைப் போல, "எல்லோரும் நலம்" என்று தொடங்கினார், கிருஷ்ணசந்திரனுடைய நண்பர்.

பெரும்பாலும் கிருஷ்ணசந்திரனின் ஊகம் சரியானதாகவே இருந்தது. ஆனால், விஷயம் ஒரேயடியாக ஒன்றுமே இல்லாததும் அல்ல.

ரமணி சந்திரன்

விமானத்தைக் கடத்திச் செல்ல முயற்சி நடந்திருக்கிறது. மந்திரியின் பாதுகாவலர்கள் அவர்களை முறியடிக்க முயன்றிருக்கிறார்கள். 'காக்பிட்டி'ல் வைத்துத் தகராறு நடக்க, கை கலப்பில் வெடித்த குண்டு ரேடியோவைச் சேதப்படுத்திவிட்டது. சீர் செய்ய முடியாத சேதம். விமானத்தை ஓட்டிய பைலட் கெட்டிக்காரர். இந்த நிலையில் முழுக்க முழுக்கக் கடல் மீது பறப்பது சரியல்ல என்று முடிவு செய்து, இந்தியாவுக்கே திரும்பிவிட்டார். தகவல் கொடுக்கவோ, உத்தரவு பெறவோ முடியாத நிலைமையில், எந்த விமான நிலையத்தை அணுகுவதும் ஆபத்து என்று விமானப் போக்குவரத்து அதிகம் உள்ள இடங்களைத் தவிர்த்து விமானத்தை பரந்த வெறும் பரப்பில் இறக்கி விட்டார். இறங்கிய இடம், ஒரிசாவை ஒட்டிய ஆந்திர எல்லை. ஆனால், இன்னுமோர் இன்னலாக, சில நாட்களுக்கு முன் வீசிய புயலால் அங்கும் டெலிஃபோன் தொடர்புகள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டிருந்தன. அலைந்து திரிந்து ஒருவாறு புவனேஷ்வர் விமான நிலையத்தோடு பேசவே இவ்வளவு நேரமாகி விட்டது!

நண்பர் கூறிய விவரத்தைக் கிருஷ்ணசந்திரன் மனைவியிடம் கூறிமுடிக்கையிலேயே, மீண்டும் டெலிஃபோன் அழைக்க, இப்போது உலகநாதனே பேசினார்.

அவர் குரல் கேட்டதுமே, "உதியிடம் பேசுங்கள்" என்று மனைவியிடம் ரிசீவரைக் கொடுத்து விட்டான் கிருஷ்ணசந்திரன்.

"அப்பா, அப்பா!" என்று விசும்பிவிட்டு, "முதலில் எனக்குச் சித்தியுடன் பேச வேண்டும்ப்பா" என்று தந்தையிடம் கேட்டு, யசோதாவிடம் சற்று நேரம் அழுகையும் சிரிப்புமாகச் செல்லம் கொண்டாடினாள் பெண்.

"உங்களை இனிமேல் பார்க்கவே மாட்டேனா என்று பயந்தே போனேன் சித்தி!" என்று உதயரேகா குரல் தழுதழுக்க, அந்தத் தாயும் அதையே எதிரொலித்தாள்.

"கொஞ்சுவதற்கு இப்போது நேரமில்லை, கொடு" என்று உலகநாதன் மீண்டும் டெலிஃபோனை வாங்கி, "உதி, எங்களுக்கு ஒன்றுமில்லை என்று தாத்தா வீட்டுக்குத் தகவல் கொடுத்துவிடும்மா. அவர்களாக இந்த விவரம் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை என்றாலும், சின்ன மாமா வீட்டிலிருந்து மெனக்கெட்டுக் கிளம்பிப் போய்க் 'காபரா' படுத்திவிடுவார்கள். இங்கே எல்லோரும் அவரவர் வீட்டோடு பேசக் காத்திருக்கும்போது நான் இன்னொரு 'கால்' போடுவது சரியல்ல. அத்தோடு அவர்களுக்குப் 'போஸ்டாபீ'ஸில் சொல்லி, அழைத்து வரும் வரை காத்திருக்க வேண்டும். அதனால் நீயே கூப்பிட்டுச் சொல்லிவிடு. இப்போது மாப்பிள்ளையிடம் கொடு" என்று கூறித் தன்



மருமகளிடமும் இரண்டு வார்த்தை பேசி விட்டு வைத்தார்.

விழிகளில் ஆனந்தக் கண்ணீரும், இதழ்களில் சிரிப்புமாகத், "தாங்க்யூ" என்று கணவன் தாடையில் லேசாக இதழ் ஒற்றினாள் உதயரேகா.

சிலவினாடிநேரம் அசைவற்றிருந்து அதை ஏற்றவன், அவளையும் எழுப்பித் தானும் எழுந்தபடி, "அங்கே ஏதாவது பிரச்னை கிளம்புமுன், அப்பா சொன்னபடி உன் தாத்தாவுக்கு முதலில் தகவல் கொடு. அங்கே உள்ள போஸ்டாஃபீஸ் நம்பர் என்ன?" என்று மனைவிக்கு அவளுடைய தந்தையால் இடப்பட்டிருந்த பணியை நினைவூட்டினான்.

"ஆமாம். சீக்கிரமாய் அதைச் செய்ய வேண்டும். ஏனென்றால் அந்தச் சின்ன மாமா கொஞ்சம் ஒரு மாதிரி" என்றுரைத்தபடி அறைக்குள் ஓடிப்போய், டயரியை எடுத்து வந்தாள் அவள்.

"நீயே சொல்லிக் கொள்வாயில்லையா? இரவு தூங்காதது இப்போது தூக்கம் வருகிறது... நீ கூட டெலிஃபோன் செய்து முடித்த பின் பேசாமல் பகல் முழுவதும் தூங்கிவிடு, உதயா" என்றபடி அவனது அறைக்குள் சென்று மறைந்தான் கிருஷ்ணசந்திரன்.

அதற்குள், 'உதி', 'உதயா'வாகிவிட்டதா?!

ஆயினும் உதயரேகாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

யசோதாவுடைய தந்தையிடம் விஷயத்தைச் சொல்லி, உண்மையாகவே ஒன்றுமில்லை என்று ஒருவாறு நம்பச் செய்து முடித்தபோது அவளுக்கும் அயர்வாகவே இருந்தது.

நாகராஜனை அழைத்து, அய்யாவுக்கு மட்டும் சாப்பிட எடுத்து வைத்து விட்டு எல்லோருக்கும் சாப்பாடு போடும்படிச் சொல்லி விட்டு படுத்தாள்.

பெற்றோர் நலமாக இருக்கவே, கடந்த சில மணி நேரங்களில் அனுபவித்த துன்பம் அடியோடு மறந்து போய்விட, கணவனின் தாடையில் முத்தமிட்டதே நினைவு வந்தது. 'ஷேவ்' பண்ணாத சருமத்தின் சொர சொரப்பு மீண்டும் அவளது உதடுகளில் குறுகுறுக்க, முறுவலித்தபடியே உதயரேகா உறங்கிப்போனாள்.

அன்று மதிய நேரம் உதயரேகா விழித்தெழுந்தபோது, கிருஷ்ணசந்திரன் வெளியே சென்று விட்டிருந்தான்.

"வீடுவரத் தாமதமாகும். இரவு உணவு வேண்டாம்" என்று அவன் தகவல் கொடுத்த போதும் அவளது உற்சாகம் மட்டுப்படவில்லை.

இரவிலும் அவன் வீடு திரும்பியபோது வெகு நேரம் ஆகிவிட்டிருந்தது. அப்போதும் புன்னகையோடு எதிர் கொண்ட மனைவியிடம், "எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது. நீ என்ன சொல்ல வேண்டியிருந்தாலும், அதைக் காலையில் பார்க்கலாம்" என்று நில்லாமலே சொல்லியபடி சென்று அவனது அறைக்குள் புகுந்து கொண்டான்.

"இல்லை இல்லை" என்று மறுத்தது, இல்லை என்றாகி விட்டதே என்று வெட்கமா? வெண்ணெய் திருடிய கண்ணன் வெட்கப்பட்டான் என்றால், அவன் கையில் இருந்தது திருட்டுப் பொருள்! இவனுக்கென்ன வந்தது? உதயாவுக்கு வேடிக்கையாகத்தான் இருந்தது!

வழக்க விரோதமாக உதயரேகாவுக்கு அன்று அதிகாலையிலேயே விழிப்புத் தட்டி விட்டது. பல்துலக்கி முகம் கழுவிக் கொண்டு மொட்டை மாடியில் வந்து நின்று பார்த்தாள்.

காந்திமதி திட்டமிட்ட தோட்டம்; அழகும் மணமுமாகக் கண்களுக்கும் நாசிக்கும் விருந்தளிக்கச் சற்று நேரம் நின்று, அதை ரசித்து விட்டு மீண்டும் படியேறி மாடிக்குப் போனாள்.

கிருஷ்ணசந்திரன் வழக்கமான இடத்தில், பத்திரிகையோடு அமர்ந்திருந்தான்.

மென்னடையாக வந்தவளுக்குப் பத்திரிகைக்கு வெளியே அவனது தாடை தென்பட்டது- முந்தைய நாளின், அதே ஒரு நாள் தாடி வளர்ச்சியோடு.

அணுகிச் சென்று, குனிந்து, கணவனின் தாடையில் முத்தமிட்டாள், எந்த விதத் தயக்கமும் இல்லாமல் 'குட்மார்னிங்!' என்றாள் குதூகலமாக.

பத்திரிகையிலிருந்து பார்வையை அகற்றாமலே, சற்று விலகி, "நேற்று உன் நிலைக்கு இரங்கியதைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டாய் என்று தோன்றுகிறது. அந்த நிலையில் யார் இருந்திருந்தாலும், நான் அதேபோல ஆறுதல் அளித்துத்தான் இருந்திருப்பேன்" என்றான் கிருஷ்ணசந்திரன் நிதானமாக.

"எப்படி எப்படி? அதேபோல ஆறுதலா? அப்படி மார்போடு அணைத்தா?" கலகலவென்று நகைத்து, "கொஞ்சம் வேறு மாதிரிக் கதை யோசியுங்களேன்! ப்ளீஸ்!" என்றாள் அவள் கொஞ்சலும் கேலியுமாய்.

தலையசைத்து, "இல்லாததை இருப்பதாக எண்ணி ஏமாற வேண்டாம், உதயரேகா" என்றான் அவன்.

"உதயரேகா...வா! மீட்டர் அளவுக்கு நீ...ளமாய் அழைப்பதுதான் பிடிக்கிறது என்றால், உங்கள் இஷ்டம். ஆனால் நான் உங்களுக்கு ஒரு குட்டிப் பெயர் வைத்து விட்டேனாக்கும். என்ன தெரியுமா? 'கிருஷ்' கிறுகிறு கிருஷ். கொஞ்...சம் கிறுக்கு கிருஷ்" என்று முத்துப் பல் வரிசை தெரிய மோகனமாய் முறுவலித்தாள் மனைவி.

"சொன்னால் புரிந்து கொள்ள மாட்டாயா?" என்றான் அவன் அலுப்புடன்.

KALKI SHOPPING PAGE



"உனக்குத்தான் நிலம் இல்லையே, நீ எதுக்கு கர்நாடக அரசே, தண்ணீர் கொடுன்னு கோஷம் போடறே?"

"விவசாயம் செய்யாட்ட என்ன? நான் தான் பால் வியாபாரம் செய்யறேனே!"

— சீர்காழி வி. ரேவதி

அவனை ஏறிட்டு, "மனைவியிடம் அன்பு கொள்வது இயற்கைதானே, கிருஷ்? அதை ஏன் மறுதலிக்க முயற்சிக்கிறீர்கள்?" என்று வினவினாள் உதயரேகா.

வேண்டுமென்றே அவள் பேச்சைப் புரிந்து கொள்ள மறுத்து, "எல்லாமே இயற்கை வழியிலா நடக்கிறது? ரத்த சம்பந்தம் உடைய தந்தையைவிட நீயே 'சித்தசித்தி' என்றுதானே உருகுகிறாய்?" என்றான் அவன்.

"இதில் இயற்கைக்கு மாறாக என்ன இருக்கிறது? தாய்க்குப் பிறகு தானே தந்தை? சித்தி என் தாய். அதிலும், அப்பா வேலை வேலை என்று போய் விடுவதால் எங்கள் மூவருக்குமே எல்லாமே சித்திதான்" என்றாள் அவள்.

"எப்படியும் உன்னைப் பொறுத்தவரையில் ரத்தத் தொடர்பு உடையவர் தந்தைதானே?"

"ஆனால்...." என்று விடையறுக்கத் தொடங்கியவள், அவன் முகத்தில் ஒரு கூர் பார்வை செலுத்தி, பேச்சை மாற்ற முயற்சிக்கிறீர்கள்?" என்றாள்.

"புரிந்து கொண்டால் சரி" என்று ஒரு மாதிரிக் குரலில் கூறிவிட்டு எழுந்தான் அவன்.

இறைவனாகப் பார்த்துக் கொடுத்தது என்று அவள் முடிவு கட்டியதால் இந்த வாய்ப்பை வீணாக விட்டுவிட்டுச் சும்மா இருக்க உதயரேகா சற்றும் தயாராக இல்லை.

எனவே மீண்டும் மீண்டும் கணவனை நெருங்கிக் கேட்டாள்.

கவர்ச்சிகரமான போஸ்களும், காதல் சேஷ்டைகளுமாக முயல அவனது தன்மானம் இடம் கொடாத போதும், அவனைக் கைபற்றி, தோள் தொட்டு நிறுத்திப் பேசுவதில் இப்போது அவளுக்குத் தயக்கமோ, கூச்சமோ இருக்க வில்லை.

விடாப்பிடியாக அவள் தொடர்ந்ததன் பயனாகக் கிருஷ்ணசந்திரன் வீட்டில் இருக்கும் நேரம் வெகுவாகக் குறைந்து போயிற்று. அதிகாலையில் கிளம்பிச் சென்றானானால், ஊர் அடங்கும் நேரத்திற்குமுன் திரும்புவது இல்லை.

ஆனால், அந்த நேரத்திலும், அவனைப் பின்பற்றிச் சென்று, அவன் தோளைப் பற்றித் தன்புறம் திருப்பி, "நீங்கள் என்ன ஓட்டம் ஓடினாலும் நான் விடப் போவதாக இல்லை, கிருஷ். உங்கள் மனதில் என்மேல் அன்பே இல்லை என்றால் அது வேறு விஷயம். ஆனால் நெஞ்சு நிறைய அன்பை வைத்துக் கொண்டு, மறைப்பது ஏன்? சொல்லுங்கள்" என்று விடாமல் கேட்டாள் உதயரேகா.

பொறுமை இழந்தாற்போல், "என்ன அன்பு? என்ன மறைப்பு? எல்லாம் இதுதான் என்றால் பெற்றுக் கொள்" என்று உரைத்தவன், சட்டென அவளைப் பற்றி, அழுந்த முத்தமிட்டான்.

உதயரேகா திகைப்பு மாறி நெகிழத் தொடங்குகையிலேயே அவளைத் தள்ளி விடாத குறையாக, விலக்கி நிறுத்தி விட்டுத் தள்ளாடியவாறு அவன் அறையை நோக்கி நடந்தான் அவன்.

தள்ளாட்டம்! என்ன அநியாயம். அவளுடைய கணவனிடமிருந்து கிடைத்த முதல் இதழணைப்பு இப்படியா இருக்க வேண்டும். ஆனால்...

மீண்டும் ஒரு முரண்பாடு உதயரேகாவை உறுத்தியது. குடிமயக்கத்தில் தள்ளாடுகிறவன் வாயில் மதுவாடை இல்லையே! ஒரு வேளை வாயில் நெடி அடிக்காதோ!

குடிபோதையை நிர்ணயிக்க, வாயால் ஊத சொல்வது நினைவு வரலே அவள் மீண்டும் குழம்பினாள்... ஒருவேளை, குடித்து வெகு நேரம் ஆகிவிட்டதா? ஆனால் தள்ளாடுகிறானே! ஒருவேளை முத்தம் வேறு, மூச்சுக் காற்று வேறா?

உதயரேகாவின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. கணவன் குடிகாரனா அல்லது...? இதை எப்படித் தெரிந்து கொள்வது?

ஆனால், ஒரு குடிகாரனின் முத்தத்தில் மதுவாடை அடிக்குமா, இல்லையா என்று எந்த மறுவாழ்வு மையத்தில் போய் விசாரிக்க முடியும்?

உதயரேகா குழம்பித் தவிக்க, அடுத்து இரு தினங்கள் கிருஷ்ணசந்திரன் வீட்டிற்கே வரவில்லை. வேலையிருப்பதாகத் தகவல் மட்டுமே வந்தது. அதிலும், வேறு வகையாய் ஒரு குழப்பமே மிஞ்சியது.

மூன்றாம் நாள் இரவில், அவன் வீடு திரும்பியபோது, அவனோடு ஒட்டிக் கொண்டு ஓர் இளம் பெண்ணும் வந்தாள்.

தோளில் மாட்டிய பெரிய பையும், அதில் சில பத்திரிகைகளுமாக வந்த அந்தப் பெண்ணைத் தோளோடு தழுவியவாறே, அழைத்துச் சென்ற கிருஷ்ணசந்திரன், அவனது அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

(தொடரும்)

"ஓட்டு ஐயா ஓட்டு!"

✉ 'பயிர் காய்கிறது அரசியல் தழைக்கிறது' என்ற தலையங்கம் காவிரி நீரைப் போல் லேட்டாக வந்தாலும் சூடாக வந்துள்ளது. ஆனால் நீர் கடைசியில் சொன்ன மாற்றுத் திட்டம் நிச்சயம் வராது. ஏனென்றால் திட்டத்தை விஞ்ஞான-பொருளாதார நிபுணர்களிடம் ஒப்படைத்து விட்டு அரசுகள் ஒதுங்கிக் கொள்ள வேண்டுமா? தண்ணீருக்காகவா. அரசுகள் சண்டையிட்டுக் கொள்கின்றன, ஓட்டு அய்யா ஓட்டு.

திருநெல்வேலி – 11, ராதா ராமஸ்வாமி.

✉ 'விவசாயத்தைப் பொறுத்தவரை கர்நாடக தமிழக எல்லைக் கோடு என்று ஒன்று இருப்பதையே மறந்து விடலாம்' என்று தலையங்கத்தில் கூறப்பட்ட யோசனை சிறந்த ஒன்று. கூடவே நதிகளை தேசியமயமாக்கும் திட்டம், கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் போன்றவற்றைத் தூசி தட்டி நடைமுறைப்படுத்த முற்பட்டால், இப்பிரச்னையிலிருந்து நிரந்தரத் தீர்வும் ஏற்படும்.

காட்பாடி, அ. சோ. விஸ்வநாதன்.

✉ பாரதியாரின் கொள்ளுப் பேரனின் பேட்டி நன்றாக இருந்தது. ஆனால் அவர் பெயரை வெளியிட மறந்து விட்டீர்களே!

திருச்சி - 5, சரவணபவன்.

✉ 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா!' என்றுதானே பாரதியார் பாடினார்? என்பதைப் பேட்டியில் அழகாகச் சுட்டிக்காட்டியுள்ளார் பாரதியின் கொள்ளுப் பேரன் ராஜ்குமார் பாரதி! பேட்டி 'ஏ' ஒன். "தோழமையோடும் ஏழைமை பேசேல்!" என்பது தமிழ் மரபு அல்லவா?

சென்னை – 15, நெல்லை ஆ. கணபதி.


• ராஜ்குமார் பாரதி

✉ சூதாட்ட விடுதிகளைச் சோதனை செய்யத் துவங்கினால் போலீஸ் அக்கிரமம் என்று சொல்லி விடுவார்கள் என்றும், வேலைப்பளுவால் இவ்விடுதிகளைக் கண்காணிக்க நேரமில்லை என்றும் சென்னை நகர போலீஸ் கமிஷனர் கூறுவது பொறுப்பான பேச்சாகத் தெரியவில்லை.

சென்னை – 39, அ.சு. கிருஷ்ணன்.

ரூ 20 பரிசு பெறும் கடிதம்!

✉ காவல் துறையின் ஒப்புதலோடு சூதாட்டம் நடக்கிறது என்று கூறிவிட்டு நீர் போய் விடுவீர். ஆனால், அதை சீரியஸாக எடுத்துக் கொண்டு இதை ஒழித்துக் கட்டி விட்டால் வரப் போகும் தேர்தல் செலவுக்கெல்லாம் யாருங்க பணம் தருவாங்க? சரியான விஷயம் புரியாத ஆளாக இருக்கின்றீரே!

கொப்பம்பட்டி, செ. அன்புமதி கோபிநாத்.

✉ அட்டைப்பட எஸ்.வி. சேகர் 'கண்டு பிடிச்சுச் சொன்ன' கருத்துக்கள், நாடு போகிற போக்கைப் பார்க்கும் போது நடைமுறைக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

உடுமலைப்பேட்டை, எஸ். பொன்னுசாமி.

✉ பிரச்னைகளைத் தீர்க்கறதுக்கு, எஸ்.வி. சேகர் கூறிய யோசனைகள் சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்தன.

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

✉ "தாய்மை" சிறுகதையில் தாய்ப் பாசத்தின் சிறப்பை அங்குலம் அங்குலமாக விவரித்திருக்கிறார் ஆசிரியர். பாராட்டுக்கள்.

சென்னை – 15, வி. சத்தியப்ரியன்.

✉ 'காதலிக்குக் கல்யாணம்', 'தாய்மை' என்ற இரண்டு சிறுகதைகளுமே மனிதநேயத்தை மேம்படுத்துவதாக அமைந்திருந்தன.

திருவண்ணாமலை, ராதா ராமலிங்கம்.

✉ டி.என்.ஏ. சோதனையைப் பற்றிய டாக்டர் லால்ஜி சிங் பேட்டியில் ராஜீவ் கொலை வழக்கில் டிஎன்.ஏ. ஆராய்ச்சியின் பங்கைப் பற்றி குறிப்பிட்டிருந்தார். அதில் சிவராஜன், நளினி என்று சேர்த்துக் கூறியிருக்கிறார். சிவராஜனுடன் இறந்தது சுபா தான்; நளினி அல்ல. சிவராஜனுக்கு உதவியதற்காக நளினி கைது செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

மதுரை – 10, ஜி. ஜெயலட்சுமி.


✉ 'எந்தக் கட்சி நம்ம கட்சி?' கேள்விக்கான தராசுவின் பதில் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிமனத்திலும் உலாவிக் கொண்டிருக்கும் ஆசை. அந்த ஆசை நிறைவேறும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்று உறுதியாக நம்புவோம்!

தஞ்சாவூர் - 5, வனிதா ரவி.



* மகளுக்கு சைக்கிள் ஓட்டப் பயிற்சி

"800 மீட்டர் தூரத்தை இந்தத் தடவை இரண்டு நிமிடங்களுக்குள்ளே கடந்து சாதனை படைச்சதும் இன்னமும் கொஞ்ச நான் ஓடத் தோணுது."



* கணவர், மகளுடன்....

சென்னையில் குடியேறி ஐந்து வருடங்களாகி விட்டதால் தமிழ் நன்றாகப் புரிகிறது — ஷைனி வில்சனுக்கு அல்ல... அவரது ஐந்து வயது மகள் ஷில்பாவுக்கு! ஷைனி நமது தமிழை கஷ்டப்பட்டு புரிந்து கொள்கிறார். மணிரத்னம் படக் கதாநாயகி போல் சின்னச் சின்ன வார்த்தைகளில் பதில்கள். ஆனாலும், இனிமையான புன்னகையுடன் இயல்பாக வருகின்றன.

"Getting better with age" என்கிறது அவர் வீட்டில் மாட்டப்பட்டிருக்கும் 'ஸ்போர்ட்ஸ்டார்' போஸ்டர். முப்பது வயதை எட்டிய ஒரு தாய், ஓட்டத்தில் ஆசிய ரெகார்டை ஏற்படுத்துவது என்பது சாமானியமா என்ன?

"1988 லே கல்யாணம் ஆச்சு. 1990 லே மகள் பிறந்தாள். டெலிவரிக்குப் பிறகு நிறைய எடை போட்டுட்டேன். பார்த்தவங்க எல்லாம் "இனிமே நீ ஓட முடியாது"ன்னாங்க. மனசிலே சவாலா ஏத்துக்கிட்டேன். இவ பிறந்த நாலே மாதங்களிலே மீண்டும் ஓட்டப் பயிற்சியைத் துவக்கினேன். பன்னிரெண்டு கிலோ எடையைக் குறைச்சேன். 1991 லேயே ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலே கலந்துக்கிட்டேன்..." என்கிறார்.

ஷைனியின் தோழியான அஸ்வினி நாச்சப்பாவைப் பற்றிப் பேச்சு திரும்பியது.

"ஓட்டப் பந்தயங்களிலே கலந்து கொள்வதை எப்பவோ விட்டுட்டா. நடிக்கிறதையும் இப்போ விட்டுட்டா. பெங்களூரிலே வேலைக்குப் போய்க்கிட்டிருக்கா. செட்டில் ஆயிட்டா" என்றார் ஷைனி.

சர்வதேசப் புகழ். இப்போதும் கூடக் கதாநாயகியாக வேடமேற்கலாம். இனிமையான தோற்றம். வசீகரப் புன்னகை. குரல்...? அதை விடுங்கள். 'டப்பிங்'கிற்கு ஆட்களா இல்லை?

ஷைனிக்கும் சினிமா வாய்ப்புகள் வந்திருக்க வேண்டுமே?

"வந்தன. அஸ்வினிக்கு முன்னாலேயே என்னை நடிக்கக் கூப்பிட்டாங்க. மலையாளம், தெலுங்கு, தமிழ் மூணு மொழிப் படங்

களிலுமே நடிக்க வாய்ப்பு வந்தது.. ப்ளீஸ் விவரங்கள் வேணாமே. அதெல்லாம் வேணாம்னு சொல்லிட்டேன். நமக்கு அத்தெலெடிக்ஸும், குடும்ப வாழ்க்கையும் போதும்."

நம்மூர்ப் பெண்கள் போல் பஸ்ஸைப் பிடிப்பதற்காக ஓடிச் சென்ற அனுபவங்களெல்லாம் ஷைனிக்கு உண்டா? "சேச்சே. இடுக்கியிலே எங்க வீட்டுக்கு ரொம்பக் கிட்டேதான் ஸ்கூல்!"

ஆனா தேவாரம் சார் என்கிட்டே வந்து 'எந்தக் கலரிலே உனக்குக் கார் வேணும்? முதலமைச்சர் உனக்குப் பரிசளிப்பதாக இருக்கார்'ன பிறகுதான் நம்பிக்கை வந்தது" என்றார்.

ஷைனி : சினிமா வாய்ப்பு மறுத்து ஓடுகிறார்!

சமைக்கத் தெரியுமா?

"தெரியும். ஆனால் எப்பவாவது தான் கரண்டியை எடுப்பேன். தினமும் சமைக்கிறதில்லே. முடியவும் முடியாதுதான். ஃபுட் கார்ப்பரேஷன் அஃப் இந்தியாவில் டெபுடி மானேஜராக வேலை. காலை ஆறரையிலிருந்து எட்டரை வரை; பிறகு மாலை நாலரையிலிருந்து ஆறரை வரை தினமும் ஓட்டப் பயிற்சி செய்கிறார் ஷைனி ஜவாஹர்லால் நேரு ஸ்டேடியத்தில்.

இன்னமும் பயிற்சியா? சமீபத்திய தெற்காசியப் போட்டிகளுக்குப் பிறகு விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தாரே?

"உண்மைதான். ஆனால் 800 மீட்டர் தூரத்தை இந்தத் தடவை இரண்டு நிமிடங்களுக்குள்ளே கடந்து சாதனை படைச்சதும் இன்னமும் கொஞ்ச நாள் ஓடத் தோணுது. தவிர சி.எம்.மும் இன்னும் கொஞ்ச காலத்துக்கு ஓட்டப் பந்தயங்களிலே கலந்துக்கச் சொல்லி உற்சாகப் படுத்தியிருக்கிறார்."

வெறும் வார்த்தைகளால் மட்டும் டானிக் கொடுக்கவில்லையே முதல்வர்! ஷைனியின் வீட்டு வாசலிலேயே நின்று கொண்டிருந்தது அந்த வெள்ளை நிற மாருதி எஸ்டீம்.

"முதல்லே - நம்பலே.

கார் பரிசைக் கேள்விப்பட்டதும் ஷைனியை அதிர்ஷ்டக்காரர் என்பவர்கள், சியோலில் அவருக்கு நேர்ந்த துரதிர்ஷ்டத்தை மறந்துவிட்டிருக்க வாய்ப்பு உண்டு.

அந்த முறை 800 மீட்டர் பந்தயத்தில் தங்கத்தைப் பறித்து விட்டதாக அவர் ஆனந்தப்பட, டெக்னிகல் காரணத்துக்காக அவர் பரிசு பெறும் தகுதியை இழந்தார்.

"நான் மறக்க விரும்பும் சம்பவம் அது. ஆனால் அதை மறக்கவே முடியாதுன்றதும் எனக்குத் தெரியும். போட்டியில் முதலாவதாக வந்ததும் மகிழ்ச்சியுற்று ஆரவாரம் செய்த மக்களைப் பார்த்துக் கையசைத்து, மைதானத்தில் கிட்டத்தட்ட வெற்றி ஊர்வலமே நடத்தும் போது ஓர் அறிவிப்பு வந்தது."

• முதல்வர் பரிசாகக் கொடுத்தக் கார்....





"தொகுதிப் பக்கம் போகாமலே இருந்தது தப்பா போச்சு."

"என்னாச்சு?"

"நான்தான் இந்தத் தொகுதி எம்எல்ஏ.ன்னு சொல்லி வேற எவனோ ஒருத்தன் நிதி வசூல் பண்ணிக்கிட்டுப் போயிட்டான்!"

— சீர்காழி வி. ரேவதி

ஒரு மெடலை இழந்தது உண்மை. ஆனால் வீட்டின் ஷோகேஸ்களில் பளபளவென்று அணிவகுத்து நிற்கின்றன மெடல்கள். "இவற்றில் எந்த மெடலை மிக விரும்புகிறீர்கள்?" என்று கேட்க "எல்லா மெடலையுமேதான்" என்று அவசரமாக வருகிறது பதில்.

"எனக்கு முதலில் கிடைத்த பரிசு எது தெரியுமா? ஒரு கைக்கடிகாரம். மூன்றாவது வகுப்பு படிக்கும் போது மாவட்ட ஓட்டப் பந்தயத்திலே கலந்துக்கிட்டேன். அதிலே முதலில் வந்தா வாட்ச் வாங்கித் தரேன்னார் எங்க தாத்தா. அப்படியே முதலிலே வந்தேன். பரிசை அப்புறமாத்தான் தந்தாங்க. அதற்குள் எங்க தாத்தா எனக்கு சொன்னபடி வாட்ச் வாங்கித் தந்துவிட்டார்.".

பேசிக் கொண்டிருக்கும் போது நடுவே தொலைபேசி கிணுகிணுக்க, எடுக்கிறார். "வில்ஸா, வில்ஸா" என்று கூப்பிட, அதுவரை நாசூக்காக அடுத்த அறையில் இருந்த அவரது கணவர் வில்ஸன் வருகிறார்.

தென்னிந்தியாவிலேயே அர்ஜுனா விருது பெற்ற ஒரே தம்பதி இவர்கள்தான். வில்சன் சிறந்த நீச்சல் வீரர் மற்றும் கோச். "எனக்குக் கொஞ்சம் நீச்சல் தெரியும். அவருக்குக் கொஞ்சம் ஓட்டம் தெரியும்" என்கிறார் ஷைனி.

ஷைனியின் குழந்தைப் பருவத்திலேயே ஒரு ஜோதிடக்காரப் பெண்மணி அவரது அம்மாவிடம் "உங்க பொண்ணு ஷைனி உலகத்தையே சுற்றி வருவா" என்றாராம்.

காக்கையோ, பனம்பழமோ! சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள கான்பெர்ரா, பார்சிலோனா, ஹவானா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று வந்துவிட்டார் ஷைனி.

எந்த இடம் ரொம்பப் பிடித்தது?

"ஆஸ்திரேலியாதான். அப்பப்பா, எவ்வளவு பசுமை" என்றார் கண்கள் அகல.

— ஜி.எஸ்.எஸ்.

அட்டை வண்ணப்படமும், படங்களும் : **சாரி**

'சுருக்-நறுக்' போட்டி – 12; முடிவு....

ரசிகன் என்பவர்...

(ஒவ்வொரு சொல்லோவியமும் ரூ. 50 பரிசு பெறுகிறது)

●● தன்னகத்து இல்லாத ஒன்றை வேற்றிடத்துக் காணும் போதும் மதிக்கத் தெரிந்த உண்மையான மனிதன்.
– எம். பாக்கியநாதன், செக்காரப்பட்டி காட்டுவளவு.

●● மூளையோடு இதயத்தை சமவிகிதத்தில் இணைக்கத் தெரிந்தவர்.
– எல். சண்முக சுந்தரி, இராமநாதபுரம்.

●● பல படைப்பாளிகளைச் செதுக்கிய சிறிய உளி.
– வி. சுந்தர்ராஜன், ஒசூர்.

●● ஓடுகின்ற சாக்கடையிலும் அதன் சுழற்சி வேகத்தை ரசிக்கத் தெரிந்தவன்.
– கருப்பம்புலம் ஜேவி, வேதாரண்யம்.

●● குட்டாத 'கப்புடு'.
– பி. நாச்சிமுத்து, சூரம்பட்டி வலசு.

●● தன் விமர்சன சாவியால் கலைஞனுக்குப் புதிய வாசல்களைத் திறந்து விடுபவர்.
– ஆர். ஸ்ரீநிவாசன், திருச்சி.

●● குளிக்கும் போது சோப்பின் மணத்தை மட்டுமல்ல, உழைக்கும் போது வியர்க்கும் மணத்தையும் ரசிக்கத் தெரிந்தவர்.
– என். சிவன், நாகர்கோவில் - 1.

●● உலகை நேசிக்கும் பரந்த மனப்பான்மையும், கற்பனை கலந்த உள்ளமும் நிறைந்தவர்.
– பி. வெங்கடேசன், மும்பாய் - 79.

●● கடமை மறந்து கைத்தட்டலே கடமையாய் வாழும் கலியுக சோம்பேறி.
– ஆர். ராஜ்குமார் பாலசுப்பிரமணியன், திருச்சி - 19.

வருகிற தேர்தலுக்கு அம்மாவின் ஆயத்தங்கள்..? ஆயுதங்கள்..?

● மல்லிகை மன்னன், மதுரை - 14.

? 'சாட்டிலைட் டீ.வி. நிகழ்ச்சிகள்தான் நமது பண்பாடும் கலாசாரமும் சீரழியக் காரணமாக இருக்கின்றன' என்று பாரதி ராஜா சொல்வது சரிதானா?

! சரிதாங்க! அந்த சாடிலைட் டீவி. நிகழ்ச்சிகள்ல 90 சதவிகிதம் சினிமா சார்ந்த நிகழ்ச்சிகள்தான் என்கிறதை அவர் மறந்திருக்க மாட்டார்னும் நம்பறேன்!

● புளியரை கணேசன், சென்னை - 30.

? 'தமிழ்நாட்டில் மின்சார நிலைமை திருப்திகரமாக உள்ளது; எந்த இடத்திலும் மின்வெட்டு இல்லை' என்று கண்ணப்பன் கூறியிருக்கிறாரே?

! 'மின்வெட்டு' என்பதற்கு 'மின் தடங்கல்' என்று பெயர் மாற்றம் செய்து விட்டால் மக்களின் அவதி குறைந்து விடப் போவதில்லை. கோடையில் நிஜ மின்வெட்டு அமுலுக்கு வராமல் இருக்கப் போவதுமில்லை.

● எஸ். பரமசிவம், சீர்காழி.

? 7.1.96 அன்று சன் டீ.வி.யில் வைரமுத்துவின் தெருக்கு தேர் கண்டீரா?

! சென்னை முழுவதும் நிலவிய மின்தடை அதைக் காண முடியாமல் தடை செய்து விட்டது!

● ஜோ.ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.

? 'ஐயாயிரம் ஏழைகளுக்கு முதல்வர் ஒரே இடத்தில் திருமணம் செய்து வைப்பது ஒரு கின்னஸ் சாதனையாகும்' என்று அமைச்சர்கள் எஸ்.டி.எஸ்., ரகுபதி ஆகியோர் கூறியுள்ளனரே?

! அம்மையாரின் சாதனைகளுக்கென்றே தனியாக ஒரு 'ஜெ'ன்னஸ் சாதனைப் புத்தகம் வெளியிட வேண்டியிருக்கும்!

● வி. சத்தியப்பிரியன், சென்னை - 15.

? 'நல்லாட்சி அமைக்க தேசிய முன்னணிக்கு வாருங்கள்' என்று ஜனதா தளம் ரஜினிக்கு அழைப்பு விடுத்துள்ளதே?

! மோசமான சொல்லாட்சி! ரஜினி வந்து சேர்ந்தால்தான் ஜனதா தளத்தினால் நல்லாட்சி வழங்க முடியும் என்பது போல் தொனிக்கிறது!

● கு. கருணாநிதி, சோழன்மாளிகை.



• நல்ல முடிவு!



• ரஜினிக்கு டானிக்!

? 'எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் ஊழல் பேர்வழிகளுக்கு சீட் கிடையாது' என்று அத்வானி கூறியிருப்பது குறித்து...?

! நல்ல முடிவு! அப்படியே, மத உணர்வுகளைத் தூண்டும்விதமாகப் பேசுவோருக்கும் 'சீட்' கிடையாது என்று அறிவிக்கட்டும் - இன்னும் அதிகமாகப் பாராட்டலாம் - அதுவும் சமீபத்திய ஜீ டீ.வி. நிகழ்ச்சியில் உமா பாரதி பொறுப்பற்ற முறையில் பேசியதைப் பார்த்த பிறகு இதை எவ்வளவு வலியுறுத்தினாலும் போதாது!

● வி. மோகன், நெல்லிக்குப்பம்.

? 'அடுத்த தேர்தலைப் பத்தி சிந்திக்காமல்



• தனியாக ஒரு கின்னஸ்!



• துரும்பும் உதவும்!

அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கும்படி எங்களை வழிநடத்திச் சென்ற தலைவர்கள் கூறியுள்ளார்கள்...' என ஜெயலலிதா பேசியிருக்கிறாரே?

! ஓகோ! அதற்காகத்தான் வளர்ப்பு மகனை தத்து எடுத்துக் கொண்டாராக்கும்... அது தானே பார்த்தேன்!

● ஆர். திலகவதி, சென்னை – 38.

? ஒரு பத்திரிகைக்கு, தரம், தர்மம், விற்பனை – இந்த மூன்றில் எது மிக முக்கியம்?

! மூளையா? மூச்சா?

• வார்த்தை விளையாட்டு!





• கலாசார கவலை!



• வேறு வழியின்றி...

ரத்தமா?... உடலுக்கு எது முக்கியம்? என்பது போலிருக்கு இக் கேள்வி. மூன்றும் சம அளவு அந்தஸ்து உள்ளவை.

● ஆர். பாஸ்கரன், பவித்ரமாணிக்கம். ❑

? பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட அமுலாக்கப் பிரிவினரின் நடவடிக்கைகள் அமுங்கிப் போக என்ன காரணம்?

! 'அரசியல் காரணங்களுக்காக அமுங்கிப் போக விடக்கூடாது' என்று உச்சநீதி மன்றத்தில் யாராவது வழக்குப் போட்டு, உச்சநீதி மன்றம் சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கப் பிரிவை முடுக்கி விட்டால்தான் காரியம் நடக்கும் போலிருக்கிறது. ஜெயின் ஹவாலா மோசடி வழக்கில் இப்படித்தானே நடந்திருக்கிறது.

● ஆர். சுப்பராவ், சென்னை – 61.

? ஊழல் குற்றச்சாட்டு எழுந்ததும் ஜப்பான் பிரதமர் ராஜினாமா செய்து விட்டாரே... ஐயோ பாவம்! நரசிம்மராவை நாடியிருக்கலாமே?

! ஒப்புநோக்க முடியாது. ஜப்பானிய நிலவரம் முற்றிலும் வேறானது. அங்கு நிலவுவது கூட்டணி ஆட்சி. மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களின் ஆதரவு தமக்கு இல்லை என்றதும் ராஜினாமா தவிர பிரதமருக்கு வேறுவழியில்லை.

● கே. அனிதா, கோவைப்புதூர்.

? பதவிக்கு வரும் முன் மக்களை நம்புகின்ற அரசியல் தலைவர்கள், பதவியில் இருக்கும் போது ஜோதிடர்களை நம்புவது ஏன்?

! ரொம்ப சிம்பிள்! மக்களுக்கு அவர்கள் பேரில் நம்பிக்கை போய் விட்ட பிறகு வேறென்ன செய்ய முடியும்?!

● வி. என். ராமமூர்த்தி, வேலூர் – 4.

? 'கிணற்றிலோ ஆற்றிலோ விழுந்து தத்தளிப்பவர்கள் கரை சேர ஏதாவது சிறு புல் பூண்டாவது கிடைக்காதா...? என்று ஏங்கித் தேடுவது போல் தமிழக மக்கள் என்னைப் பார்க்கின்றனர்...' என கருணாநிதி கூறியிருப்பது பற்றி...?

! அவர் தம்மைப் புல் என்றோ, துரும்பு என்றோ உணர்த்துவது கிடக்கட்டும்.. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதை வாக்காளர்கள் மறவாமல் இருந்தால் சரி.

● எம். திருஞானம், சீர்காழி.

? வரும் தேர்தலுக்கு அம்மாவின் ஆயத்தங்கள் 'அண்ட்' ஆயுதங்கள் என்னென்ன?

! ஆயத்தங்கள் பர்கூர் விஜயம், திருச்சி மாநாடு, திடீர் சலுகைகள், இலவசங்கள் இத்தியாதி... ஆயுதங்கள்... பணம், பணம், பணம். மேலும் பணம்!

● க.க.வே. சித்திரவேலு, கருப்பம்புலம்.

? நீதிபதிகள் பற்றாக்குறையால் லட்சம் வழக்குகள் தேக்கத்தில் இருக்கின்றன என்கிறாரே உயர்நீதி மன்ற நீதிபதி லட்சுமணன்?

! இப்போது புதிதாக பல நீதிபதிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களே! அதனால் நிலைமை முன்னேறி விடப் போகிறதா...! வாய்தாவிலேயே காலம் தள்ளாமல், வழக்கை சுருக்கமாகவும் சுருக்கமாகவும் நடத்த வழக்கறிஞர்கள் ஒத்துழைப்பும் தேவை.

● எஸ். அருள்மொழி, காட்டூர்.

? 'ஆண்டவனையே தாங்கள்தான் காப்பாற்ற வேண்டியுள்ளது' என்கிறாரே நாவலர் நெடுஞ்செழியன்?

! மீண்டும் ஜெ. ஆட்சி ஏற்பட்டால் தமிழகத்தை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது என்ற ரஜினியின் அறிக்கைக்கு வலிமை சேர்க்கிறார்.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஆர். பாஸ்கரன்,
பவித்ரமாணிக்கம்,
திருவாரூர் - 610 051.


Photo : RAJU



காரசாரமான சாப்பாட்டின் கடைசி ஐயிட்டமாக ஒரு ஸ்வீட்! ஆம். இந்த வாரம் போலீஸ் கேஸ்களிலிருந்து மாறுபட்டு, இலக்கியத்தோடு இணைந்த ஓர் அமைப்பைப் பற்றிச் சொல்லப் போகிறேன். தலைநகரில், ஐம்பது வருடங்களாகச் சிறப்பாக இயங்கி வரும் ஒரு தமிழ் அமைப்பு - தில்லித் தமிழ்ச் சங்கம்.

1967 இல் * கோலி என்னை சி.பி.ஐ.யில் டி.ஐ.ஜி.யாக தில்லிக்கு அழைத்துக் கொண்ட போது, சில தில்லி வாழ் தமிழ் நண்பர்களின் பரிச்சயத்தால், தில்லித் தமிழ்ச் சங்கம் எனக்கு அறிமுகமானது.

1946 இல் தொடங்கப்பட்ட அமைப்பு இது. அதுவும் எப்படி? கனாட்பிளேஸில் ஒரு ஹோட்டல் அறையில் வசித்து வந்த எம். பாலசுப்ரமணியன் என்கிற தமிழர் (அரசு ஊழியர்) ஒரு சிறிய அலமாரியில், மிகச் சில தமிழ்ப் புத்தகங்களை வைத்துக் கொண்டிருந்தார். அவரது சொந்தப் புத்தகங்கள். அந்தப் புத்தகங்களைப் பிறருக்கும் படிக்கத் தரலாமே என்கிற நல்லெண்ணத்தில் அவர் தொடங்கிய 'அலமாரி நூலகம்'தான் சில தமிழ் நண்பர்களின் உதவியோடு தமிழ்ச் சங்கமாக உருவானது.



• புலவர் கீரன்



• கி.வா.ஜ.

இன்றைக்கு ராமகிருஷ்ணாபுரத்தில் மிகப் பெரிய கட்டடமும் எட்டாயிரம் புத்தகங்களுக்கு மேல் உள்ள சிறந்த நூலகமும் கொண்டு - அந்தச் சாலையே 'தமிழ்ச் சங்கம் சாலை' என்று அழைக்கப்படும் விதமாக வளர்ந்து இருக்கிறது, தில்லித் தமிழ்ச் சங்கம்!

நான் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராகி, அதன் நடவடிக்கைகளில் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் பங்கு கொள்ளத் தொடங்கினேன்.

1971 இல் வெள்ளிவிழா - சங்கத்துக்கு. அமைப்பாளர்கள் ஒன்று சேர்ந்து என்னைத் தலைவராக்கி விட்டார்கள்.

புதிய தலைவர் - வெள்ளிவிழா - நிறைய எதிர்பார்ப்புகள். சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று நான் முனைய ஆரம்பித்த சமயம், ஓர் எதிர்பாராத சிக்கல் வந்தது. இதனால், சங்கம் இயங்கி வந்த கட்டடமும், இடமும் பறிபோய்விடுமோ என்ற நிலை ஏற்பட்டது. விஷயம் இதுதான்.

தமிழ்ச் சங்கத்துக்கென ஒரு கட்டடம் கட்ட, அரசு முன்பே நிலம் ஒதுக்கித் தந்திருந்தது. ஒரே ஒரு கண்டிஷன். 'கட்டப்படும் கட்டடம், முற்றிலும் கலை, இலக்கியப் பணி நடவடிக்கைகளுக்கு மட்டுமே உபயோகமாக வேண்டுமே தவிர, வணிக நோக்கிலான எந்த ஒரு செயலும் அங்கு நடைபெறக் கூடாது' என்று அக்ரீமெண்ட்.

ஒப்புக் கொண்டுதான், 1968 இல் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டது. ஆனால் கட்டடம் கட்டப் பணம் வேண்டுமே?

இந்த நிலையில் சிண்டிகேட் வங்கி, கடன் தர முன் வந்தது. ஆனால், தன் பங்குக்கு அதுவும் ஒரு கண்டிஷன் போட்டது. கட்டடம் கட்டி முடிந்ததும், அதன் கீழ்த்தளத்தை சிண்டிகேட் வங்கியின் ஒரு கிளை இயங்க

தமிழுக்குத்

வாடகைக்கு விட்டுவிட வேண்டும்.

தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகிகள் ஒப்புக் கொண்டார்கள். அதன்படியே வங்கிக் கடனுடன் கட்டடம் கட்டப்பட்டு, கீழ்த்தளத்தில் சிண்டிகேட் வங்கி 'குடித்தனம்' வந்தது.

அப்பொழுதுதான் சிக்கல். முழுக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதற்கான ஒரு சர்ட்டிஃபிகேட்டைத் தரவேண்டிய தில்லி கார்ப்பரேஷன் முரண்டு பிடித்தது.

'சிண்டிகேட் வங்கிக்குக் கீழ்த் தளத்தை வாடகைக்கு விட்டது, ஒப்பந்த விரோதமான செயல்; தமிழ்ச்சங்கம் ஒப்பந்தத்தை மீறி, இதன் மூலம் பணம் பண்ணப் பார்க்கிறது; கட்டடம் இயங்க அனுமதி தர முடியாது' என்று சொல்லி விட்டார்கள்.

இத்தனை சிரமப்பட்டு, வருடக்கணக்காகக் காத்திருந்து, பார்த்துப் பார்த்துக் கட்டிய கட்டடத்தில் செயல்பட முடியாமல் போகிற வருத்தம் ஒருபுறம்; வெள்ளிவிழா ஆண்டில் இதென்ன விபரீதம் என்ற கலக்கம் மறுபுறம்.

சட்டத்தின் காவலன்; தோழன்!

சி. வி. நரசிம்மன்

தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பு ஏற்றவுடன் இச்சிக்கலுக்கு ஒரு வழி செய்தாக வேண்டிய கட்டாயத்தில் இருந்தேன்.

நேரே தில்லி முனிசிபல் கமிஷனரைப் பார்க்கக் கிளம்பினேன். மணிக்கணக்கில் பேசி, விளக்கியும் மனிதர் மசிவதாயில்லை. 'ஒப்பந்தத்தை மீறி இருக்கிறீர்கள்' என்ற ஒரு குற்றச்சாட்டே அவரது ஆயுதமாக இருந்தது.

சட்டென்று எனக்கோர் எண்ணம் உதித்தது. வணிக நோக்கில் செயல்படக் கூடாது என்பதுதான் ஒப்பந்தம். சிண்டிகேட் வங்கி, தனக்கு ஓர் இடம் வாடகைக்குத் தரவேண்டும் என்கிற கண்டிஷனுடன் கடன் தந்தது 1968 காலகட்டத்தில்.

ஆனால் கட்டடம் உருவாகி, சிண்டிகேட் வங்கி குடிபுகுந்தது 1970 இல்தான்.

நான் முனிசிபல் கமிஷனரிடம் இப்படிக் கேட்டேன்: "நீங்கள் சொல்வது வாஸ்தவம் தான். தமிழ்ச் சங்கம் தன் கட்டடத்தில் ஏதாவது ஒரு தனியார் நிறுவனத்துக்கு இடம் விட்டிருந்தால் அது தவறுதான். ஆனால் 1969 இல் வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டு விட்டனவே.


எங்களுக்குக் கடன் கொடுத்தபோது தனியார் நிறுவனமாயிருந்த சிண்டிகேட் வங்கி, பிறகு தேசிய மயமாக்கப்பட்டு இப்பொழுது எங்கள் கட்டடத்தில் இயங்குவது, மத்திய அரசின் ஓர் அலுவலகம் இயங்குகிற மாதிரி தானே. மத்திய அரசுக்குச் சொந்தமான இடத்தில், அந்த அரசின் உதவியோடு எழுப்பிய கட்டடத்தில் அந்த அரசின் கிளை அலுவலகம் நடைபெறுவதை முறையற்றது, விதிகள் அதற்கு இடம் கொடுக்காது என்றெல்லாம் எவ்வாறு சொல்லலாம்? அரசின் வேலை பாதிக்காவண்ணம் இருப்பதற்கு விதிகளில் ஏதாவது clause இருக்கலாம். பாருங்கள்" என்றேன்.

அவர் மவுனமாகிவிட்டார்! என்ன பேசுவது? வாதம் சரியானதுதான் என்பதால் மறு பேச்சுப் பேசாமல் முறைப்படி உத்தரவு தந்து விட்டார்.

இந்த வெற்றி, தில்லித் தமிழர்களிடையே மிகப் பெரும் உற்சாகம் ஏற்படுத்திவிட்டது. பல நாள் தீர்க்க முடியாதிருந்த ஒரு பிரச்னை, சுலபமாக, சுமுகமாக முடிந்துவிட, கொண்டாடிவிட்டார்கள்!

அந்தக் கொண்டாட்டத்தின் உற்சாகம் எள்ளளவும் குறையாமல் வெள்ளிவிழா நிகழ்ச்சிகளிலும் பிரதிபலித்தது.

மூன்று நாட்கள் விழா. தமிழ் நாட்டிலிருந்து கி.வா.ஜ., கி.ஆ.பெ. விஸ்வநாதன், புலவர் கீரன் மூவரையும் அழைத்திருந்தேன். கி.வா.ஜ. அவர்களும் கி.ஆ.பெ. அவர்களும் எனக்கு முன்பே பரிச்சயம். புலவர் கீரன் பற்றிக் கேள்விப் பட்டிருந்ததோடு சரி. அப்போதுதான் நேரில் சந்தித்தேன்.



• கி.ஆ.பெ.

இவர்கள் ஒவ்வொருவரையும் ஒரு நாளுக்குத் தலைமை தாங்கச் செய்து மூன்று நாட்கள் விழாவாகக் கொண்டாடினோம். இந்த வெள்ளி விழாவை ஒட்டித்தான் தமிழ்ச் சங்கம் அமைந்திருந்த சாலைக்கு 'தமிழ்ச் சங்கம் சாலை' என்றே பெயர் தரப்பட்டது. வெறும் எண் மட்டுமே தரப்பட்டிருந்த அச்சாலைக்கு தமிழ்ச்சங்கம் சாலை என்று பெயர் வைக்கலாமே என்று நான் கேட்டவுடனே ஒப்புக் கொண்டார் அன்றைய தில்லி மாநகரத் தலைமை கவுன்ஸிலர் மல்ஹோத்ரா.

விழா முடிந்து, சென்னை புறப்பட்ட கி.வா.ஜ. அவர்களை ரயில் நிலையத்தில் வழியனுப்பச் சென்றிருந்த போது நடந்த ஒரு சம்பவம் இன்னும் எனக்கு நினைவிருக்கிறது.

கி.வா.ஜ. ரயில் ஏறவிருந்த சமயம். சம்பிரதாயமாக நான் அவரிடம், "நிகழ்ச்சி ஏற்பாடுகளில் ஏதாவது குற்றம், குறை இருந்தால் மன்னிக்க வேண்டும்" என்றேன்.

உடனே அவர், "குறையா? குற்றம்தான் குறை!" என்றாரே பார்க்கலாம்! அவரது டைமிங் நகைச்சுவைக்கும் 'pun' பண்ணுகிற

திறமைக்கும் ஈடே கிடையாது!

தமிழ்ச் சங்கம் மூலம் எனக்குக் கிடைத்த பல அறிஞர்களின் தொடர்பு மறக்க முடியாதவை. அவர்களுள், புரொபசர் கே. சுவாமிநாதன் ஒருவர்.

சுவாமிநாதனின் காந்தி நூல் வரிசைகள் மிகப் பிரபலம். ஆழ்ந்த இலக்கிய, தத்துவ அறிவும் பரந்த உலக ஞானமும் பெற்றவர். ஒரு தந்தை போல் எனக்கு அவர் சொல்லித் தந்த விஷயங்கள் ஏராளம்.

என் வீட்டிலிருந்து தமிழ்ச் சங்கம் போகிற வழியில்தான் அவர் வீடு இருந்தது. பெரும்பாலும் நான் வழியில் இறங்கி, அவரைக் கூட்டிக் கொண்டுதான் நிகழ்ச்சிகளுக்குச் செல்வேன்.

தில்லியில் 'ரமண கேந்திரா' என்ற அமைப்பை நிறுவி, ரமணரின், தத்துவங்களைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த அவர், தமிழ்ச்சங்கத்தில் தொடங்கப்பட்ட 'சிந்தனைக் குழு'வின் கூட்டங்களுக்கும் தலைமை தாங்கினார்.

மாதம் ஒரிரு முறை கூடிய அச்சபையில் ஏதாவது ஒரு முக்கியமான விஷயத்தை எடுத்துக் கொண்டு தீவிரமாக அலசி ஆராய்ந்து விவாதங்கள் நடத்தப்பட்டன. மிக உபயோகமான அக்கருத்துக்கள் பின்னால் எழுத்து வடிவமும் பெற்றன.

வ.வே.சு. ஐயரின் ஆங்கில கம்பராமாயண விளக்கக் கட்டுரைகளின் தொகுப்பும் வெள்ளி விழா இலக்கிய மலரும் தமிழ்ச்சங்க வெளியீடுகளில் சாதனைக்குரிய விஷயங்கள். பல அறிஞர்களின் ஆழ்ந்த விஷயச் செறிவு மிக்க கட்டுரைகளைக் கொண்ட வெள்ளிவிழா மலர், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் ஒரு ரெஃபரன்ஸ் நூலாகவே வைக்கப்பட்டிருப்பதாகப் பின்னால் தெரியவந்த போது ரொம்ப சந்தோஷமாக இருந்தது எனக்கு.

1971 லிருந்து, நான் தில்லியை விட்டு சென்னைக்கு மாற்றலாகிவந்த 1980 வரை - ஒன்பது வருடங்கள் நான் தில்லி தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்தேன். மறக்க முடியாத பல அனுபவங்களை எனக்கு அளித்த காலகட்டம் அது!

வெள்ளி விழாவுக்கு வந்து போன கி.ஆ.பெ. விஸ்வநாதன், மீண்டும் 1972 ஆம் வருடம் எங்கள் அழைப்பை ஏற்று தில்லி வந்தார். அப்பொழுது தமிழ்நாட்டில் அவர் நிறுவி, நடத்திக் கொண்டிருந்த 'புலவர் குழு'வைச் சேர்ந்த சுமார் 40 பேருடன் வந்தார்!

இரண்டு, மூன்று நாட்கள் தில்லியில் தங்கி, அவர்களுடன் தமிழ்க் கூட்டங்களில் கலந்து கொண்டது ஓர் இனிய அனுபவம்.

பிரசித்தி பெற்ற தில்லி பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் ஸ்வரூப் சிங்குடன் பேசி, 'பல்கலைக்கழக அறிஞர் - பேராசிரியர்கள், வந்திருந்த தமிழ் அறிஞர்களைச் சந்தித்துப் பேச ஒரு கெட்-டு-கெதர் ஏற்பாடு செய்ய முடியுமா' என்று கேட்டேன்.

உடனே ஒப்புக் கொண்டு, கி.ஆ.பெ. தலைமையிலான அத்தமிழ் அறிஞர் குழுவுக்கு ஒரு பிரமாதமான 'வரவேற்பு'ம் ஏற்பாடு செய்தார்.

ஆங்கில மொழியுடனும் பண்பாட்டுடனும் இலக்கிய பாரம்பரியத்துடனும் இணைந்து வளர்ந்த தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களோடு, தமிழ் அறிஞர்கள் அனைவரும் ஒரே மேடையில் அமர்ந்து பேசி அளவளாவியது கண்கொள்ளாக் காட்சியாகத் தான் இருந்தது.

ஓய்வில்லாத காவல் துறைப் பணிகளுக்கிடையே இம்மாதிரி இலக்கியச் சந்திப்புகளுக்கும், ஈடுபாடுகளுக்கும் அவ்வப்போது நேரம் கிடைத்தது என் அதிர்ஷ்டம்.

மாஜி மனைவியின் அதிர்ஷ்டம்!


பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை சென்ற ஆண்டு ராபர்ட் ஈ லூகாஸ் என்பவர் தம்முடைய 'தியரி ஆஃப் ரேஷனல் எக்ஸ்பெக்டேஷன்ஸ்' என்ற நூலுக்காக வென்றுள்ளார். பரிசுத் தொகையான ஒரு மில்லியன் அமெரிக்க டாலரில் சரி பாதியைத் தம்முடைய மாஜி மனைவியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை லூகாஸுக்கு. ஏழு வருடங்களுக்கு முன் விவாகரத்து ஆனபோது இத்தம்பதியரின் சொத்து பிரித்தல் சம்பந்தமான விஷயத்தில், 'கணவருக்கு நோபல் பரிசு கிடைக்கும் பட்சத்தில் மனைவிக்கு அதில் 50% பங்கு' என்ற நிபந்தனை வைக்கப்பட்டது. வரப்போவதை முன்கூட்டியே அறியும் திறனைவிட திருமதி ரீடா லூகாஸுக்கு அதிர்ஷ்டமும் அதிகம். சொத்து பங்கீடு பற்றிய இந்தத் தீர்ப்பு அக்டோபர் 31, 1995 வரையே செல்லுபடியாகும். லூகாஸ் இந்தத் தேதிக்குப் பின் பரிசை வென்றிருந்தால் மொத்த பணமும் அவருக்கே போயிருக்கும். ஆனால் அக்டோபர் 10, 1995 இல் லூகாஸுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுவிட்டதால் பரிசை மாஜி மனைவியுடன் பாதியாகப் பகிர்ந்து கொள்ள வேண்டிய நிலை!

ஆதாரம்: ஹிந்து; தகவல் : என்.கே. பாலசுப்ரமணியன்

காதல் என்பது...

சௌம்யாவைச் சந்தித்து இன்றோடு மூன்று மாதங்கள் ஆகி விட்டிருந்தது. இந்த நாட்கள் 'ரணகளமாய்க்' கழிந்தது ஞாபகம் வந்தது. ஆனால் மூலகாரணம் நான்தானே தவிர, சௌம்யா அல்ல.

அன்றைய தினம் மனதில் இன்னமும் பதிந்திருக்கிறது.



"ஹரி, நம்ம காதலோட முழுப் பரிமாணம் என்னன்னு புரியணும். அதுக்கு இதான் சரியான பாதை. இன்னும் மூணு மாசம், நமக்குள்ளே எந்தவிதச் சந்திப்பும் இடையாது. லெட்டர்லயோ, போன்லயோ கூடத் தொடர்பு கூடாது."

"என்ன உளர்றே சௌம்யா? பஸ்ஸில, ரோட்டில யதேச்சையா சந்திச்சாக் கூட மூஞ்சியைத் திருப்பி வைச்சுக்கணும்ன்றியா?"

"அவசியமிருக்காது. ஏன்னா, நான்

கோயமுத்தூர் போறேன், டெபுடேஷன்ல. அங்க ஒரு ஆபரேட்டர் மூணு மாசம் லீவு. அதுக்குப் பதில் நான் போறேன். போக லைன்னா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. ஆனா, நான் விரும்பிக் கேட்டுப் போறேன்."

"கோயமுத்தூர் என்ன உலகத்தோட அந்தக் கோடியிலயா இருக்கு. இதோ திருச்சில ராத்திரி ஏறினா, விடியக்காலம் வந்து நின்னுரலாம்."

"எனக்கும் தெரியும், ஆனா, உங்க மேல நம்பிக்கை இருக்கு. நான் சொன்னதையும் மீறி நீங்க வர மாட்டீங்கன்னு நினைக்கிறேன். நேற்றைய சம்பவத்தை 'விதிவிலக்கா' வச்சுக்கலாம்."

அதனை சௌம்யா இயல்பாகத்தான் சொன்னாள். எனினும் எனக்கு எங்கேயோ வலித்தது.

நேற்று நான் கொஞ்சம் நிதானமாய் இருந்திருக்க வேண்டும். அவசரப்பட்டு விட்டேன். இனிமையான 'ஞாயிறு' தினம். வீட்டில் யாரும் இல்லை. அப்பா, அம்மா எல்லோரும் ஊருக்குப் போயிருந்த சமயம். 'சும்மா வீட்டைப் பார்க்க வாயேன்' என்றுதான் சௌம்யாவை அழைத்து இருந்தேன்.

ஆனால், இயல்பாய்ப் பேசிச் சிரித்த அந்த நெருக்கமும், யாருமற்ற தனிமையும், அன்றைக்கென்று சற்று பிரயத்தனம் செய்து, செய்து கொண்ட அவளது அலங்காரமும் என்னை வலுவாய்த் தாக்கி விட்டதென்னவோ வாஸ்தவம்தான். ஆனால், நான் அவள் கையைப் பிடிக்க முயன்றபோதே சௌம்யா முன் எச்சரிக்கையாய், விலகி விட்டாள். 'இணைத்துத் தண்ணியை ஆத்து வெள்ளமா கொண்டு போயிரும்' என்று பழமொழி சொன்னாள்.

ஆனால்,

அடுத்த நாளே இப்படி ஒரு இடியை என் தலையில் இறக்குவாள் என்று நினைத்திருக்கவில்லை நான். 'காதல் என்பது வெறும் உடம்பா, மனசில்லையா' என்றாள். 'விலகலே காதலை உறுதிப்படுத்தும்' என்றாள்.

ஒன்றும் பேச முடியவில்லை; நான் பேச முயலவும் இல்லை.

ஆயிற்று. எப்படியோ, மூன்று மாதமும் கழிந்து விட்டது. இதோ, இன்னும் சில மணித் துளிகளில் நான் சௌம்யாவைச் சந்திக்கப் போகிறேன்.

அறைக் கதவு திறந்தது.

சௌம்யாதான்.

"என்னாச்சு குணா?" என்றவளுக்குக் கண்ணில் நீர்ப்படலம் தோன்றியிருந்தது.

"இவ்ளோ நாள் கழிச்சுச் சந்திக்கிறோம். எதுக்கு துக்கப்படுறே? நான் என்ன நிரந்தரமாவா இந்த ஆஸ்பத்திரில தங்கிடப் போறேன். இன்னும் மூணு நாள்ல டிஸ்சார்ஜ் ஆயி வந்துருவேன். 'அப்பெண்டிக்ஸ்' ஆபரேஷன் தானே சௌம்யா."

ஆனாலும் சௌம்யா சமாதானமாகவில்லை என்று புரிந்தது. அருகில் அமர்ந்து ஏறிட்டவளைப் பார்த்து நான் சொன்னேன்.

"காதல்ங்கிறது உடம்பா, இல்லியே... மனசுதானே. நீ காதலிச்ச என்னோட மனசு அப்படியேதானே இருக்கு. உடம்புக்கு நேருகிற அவஸ்தைக்குக் கலங்கலாமா?"


சௌம்யா தலைகுனிந்து கொண்டாள்.

"சாரி சௌம்யா. உன்னைக் காயப்படுத்தணும்ங்கற நோக்கத்தில நான் சொல்லலை."

பதிலே பேசவில்லை அவள்.

நாதாங்கி போடாததாலோ என்னவோ, காற்றில் அங்குமிங்கும் ஆடிக் கொண்டிருந்தது ஜன்னல் கதவு, என் மாதிரி.

சௌம்யா எழுந்து போய் முழுதுமாய் ஜன்னலைத் திறந்து வைத்து, நாதாங்கி போட்டு விட்டு, மறுபடி என்னருகில் அமர்ந்து என் விரல்களுடன் கைகோத்துக் கொண்ட போது, ஜன்னல் வழியே சூரிய வெளிச்சம் அறைக்குள் வந்து விழுந்தது அழகாக.



பாம்புக்கும் காட்டிய பரிவு!

பிரபல காந்தியவாதியும் சமூக ஊழியருமான பாபா ஆம்தே சமீபத்தில் நர்மதா அணைத் திட்டத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த சில ஏழைகளுடன் ஒரு கூடாரத்தில் தங்கியிருந்தார். அவருடைய படுக்கைக் கம்பளியின் அடியில் ஒரு விஷப் பாம்பு ஒளிந்திருந்தது கண்டு பதறி, மற்றவர்கள் அடிக்க முற்பட்டார்கள். ஆனால் ஆம்தே, "நாமெல்லாம் அணைவெள்ளத்தால் வீடு வாசலை இழந்து இடம் தேடி அலைவதைப் போல்தான் அதுவும் புகலிடம் தேடி வந்திருக்கிறது. அதை விட்டு விடுங்கள். அதுவாவது பிழைத்துப் போகட்டும்" என்றார்.

— அ. ஷண்முகசுந்தரம்.



நீங்கள் வீடு கட்டுவதற்கான கடன் வசதி பெற எவ்வளவு காலம் பொறுத்திருப்பீர்கள்?

(7 நாட்கள் முடியுமா?)

இப்பொழுது நீங்கள் அலைந்து, திரிந்து வீடு கட்டும் கடன் வசதி பெறத் தேவையில்லை. எங்கள் அலுவலகத்திற்கு வந்ததிலிருந்து, துரிதகதியில் உங்கள் விண்ணப்பத்தை பரிசீலனை செய்து ஏழே நாட்களில் கடனுதவி சாங்ஷன் செய்யப்படும். அது மட்டுமல்லாமல், கடன் பெறும் வீடு மற்றும் நிலத்திற்கான சட்ட ஆலோசனைகளும் வழங்கப்படும்.

Home is where your heart is.

HAPPY HOME PROFIN LTD.

HOUSING FINANCE MADE EASY

Corp. Office:
Vasanth Apartments, Suite A1, 75 Sir. C.P. Ramaswamy Road,
Abhiramapuram, Madras 600 018. Ph: 4990761, 4994005. Fax: 4997297..

Bangalore:
304 "A" Wing, Mittal towers, 47/6 (New No.21) M.G.Road,
Bangalore 560 001. Ph: 5580941

Coimbatore:
Gowtham Centre, Ground Floor, No.1055, Avinashi Road, Coimbatore - 641 018.

Gateway

டெப்பாசிட்டுகள் பெற்றுக்கொள்ளப்படும்.



அந்தச் சிறுகதை அந்த வாரமே பிரசுரமாகிவிட்டது. இரண்டாண்டுகளில் இருபத்தெட்டுக் கதைகள் பிரசுரமாகியிருந்தாலும் விஜயனுக்கு இந்தக் கதை பிரசுரமாக வேண்டுமே என்று தவித்துக் கொண்டிருந்தான்.

அந்தத் தவிப்புக்குக் காரணம் கவிதா. விஜயனின் மனதை அபகரித்து, அவன் தன் பலமெல்லாம் கவிதாவின் அங்கீகரிப்பில்தான் என எண்ண வைத்தவள்.

அவன் வேலை செய்யும் அதே செக்ஷனில் ஆறு மேஜைகள் தள்ளி அமர்ந்திருக்கிறாள். ஒரு மாதமாய் விஜய் காட்டும் பிரியத்தையும் காதல் வயப்பட்டவர்களுக்கே உண்டான விஷேச நடவடிக்கைகளையும் தெரிந்து கொண்டதாகவே காட்டாதவள். அதன் மூலம் ராட்சசி, அழுத்தக்காரி, அலட்டிக் கொள்கிறாள் கர்வி... என்றெல்லாம் விஜயால் மனதிற்குள் திட்டப்படுபவள்.

"விஜய், உங்களுக்கு போன்...."

பாதி அலுவலகம் நிமிர்ந்து பார்த்தது. பார்க்காத பாதியில் கவிதா இருப்பாள் என்று சொல்லவும் வேண்டுமா?

"ஹலோ... விஜய் பேசுறேன்...."

"கங்ராட்ஸ்... உங்க கதை இன்னைக்கு 'சூரியன்'ல வந்திருக்கு.. ரொம்ப உணர்ச்சிகரமாயிருக்கு..."

"தாங்ஸ்... மதியம் பார்க்கலாம்."

விஜய் தன்னையே கதாநாயகனாக்கி, கவிதாவிடமிருந்து பதில் இல்லாததைக் கோபித்து, வருந்தி, தன் காதல் தீ தகிப்பை எழுதியிருந்த கதை இன்று இரண்டு லட்சம் பிரதிகள் பிரசுரமாகி கடைகடையாய்த் தொங்கும்.

'அத்தனை லட்சமும் படிக்கட்டும், படிக்காமல் போகட்டும்! ஏய்.... சின்னப் பேரழகியே... பேசா மடந்தையே... டிரையல் பாலன்ஸ் புலியே... இதைப்படி... என்னைப் புரிந்து கொள். காதல் ஒன்றும் பாவம் அல்ல. நான் உன்னை விரும்புகிறேன் என்று கோடிகாட்டுவது கேவலமும் அல்ல. சொல்லித் தொலையேன் நீயும் என்னை விரும்புகிறாய் என்று. உன் கௌரவமா குறைந்து விடும்!"

விஜய்க்கு வேலை ஓடவில்லை. மணி எப்பொழுது பன்னிரண்டாகும்? எப்பொழுது சாப்பாடு முடிந்து நண்பர்கள் கூடுவோம் என்ற தவிப்பு இருந்தது.

அவனை மானேஜர் அழைக்க, அவர்கள் இன்டர்னல் ஆடிட்டர் அறைக்குச் சென்றார்கள். திரும்புகையில் மணி 12.10. தன் சீட்டிற்கு ஓடினான். அவன் மேஜையருகில் நண்பர்கள் ராஜேஷ், மோகன், புவனா, ஒரு டேபிள் தள்ளி கவிதா.

"என்ன விஜய் சாப்பிட்டுட்டு வந்துர்றியா?"

"இல்லப்பா பசிக்கல...."

சொல்லிவிட்டு மிக ஜாக்கிரதையாய் கவிதா பக்கம் பார்த்தான். காதில் விழாமலா இருக்கும்? இராட்சசி. நிமிர வேண்டுமே... ம்ஹூம்.

"ஹலோ... வயித்தக் காயப் போடாதப்பா... சாப்பிட்டுட்டு வந்திரு."

கட்டாயமாக மறுத்தான். கவிதா இன்பார்மலாக அமர்ந்து பேசும் இந்த முப்பது நிமிடங்களைக் கேவலம் வயிற்றை நிரப்புவதில் இழக்க அவன் தயாரில்லை.

"கதை சூப்பரா வந்திருக்குப்பா...."

"படிச்சீங்களா?"

"நான் முடிச்சாச்சு. புவனா பாத்திட்டாங்க... புக் எங்க?"

சுற்று முற்றும் பார்த்துவிட்டு, "கவிதாகிட்ட இருக்கா?" என்றான் ராஜேஷ்.

விஜய் நேரடியாக கவிதாவைப் பார்த்தான். அவனுடைய மறைமுகக்

சோம. வள்ளியப்பன்



என் சின்னப் பேரழகியே, ராட்சசியே...

காதல் கடிதம் சிறுகதையாக - பகிரங்கமாக அவள் கையில்.. படி... படி... உனக்குப் புரியாமலா போய்விடும்!''

'தங்கம்' என்று அவள் அண்ணன் மார்கள் அவளைச் செல்லமாக அழைப்பார்களாம். ஒரு முறை மறதியாக அவளுக்கு வந்த போனில் அவள் சின்ன அண்ணன் அழைக்க, போனை எடுத்த விஜய் 'தங்கமின்னு இங்க யாரும் இல்லையே' எனச் சொல்ல, 'சாரி... அவங்க பேரு கவிதா.. வீட்ல தங்கம்' என்று கூப்பிடுவோம் எனச் சொன்னான்.

சரியாகத்தான் அழைக்கிறார்கள் அண்ணன்கள்.... என்ன ஒரு நிறம்! அந்த விரல்கள் பக்கங்களைப் புரட்டுவதையே பார்த்தவனை ராஜேஷ் குரல் திருப்பியது.

பேச்சு சிறுகதைப் போட்டிகள் பற்றியும், பின் அலுவலக டிரான்ஸ்பர்கள் பற்றியும் இருந்தது. விஜய் மனமோ கவிதா படிக்கப் படிக்க அவள் மனத்தில் என்ன ஓடும்? ரியாக்ஷன் என்ன எனப் பார்க்கத் துடித்தது.

அவள் முடித்ததும் அந்தப் புத்தகத்தைச் சிறிது கருட்டினாற் போல் கையில் வைத்திருந்தாள்... பின்பு மேஜை மேல் வைத்துவிட்டு எழுந்தாள்.

நேரமாகிவிட அனைவரும் சொல்லிக் கொண்டு கிளம்ப, விஜய் பரிதாபமாக கவிதா பக்கம் சென்றான்.

''என்னங்க... கதை படிச்சிங்களா?''

''ம்....''

''எப்படியிருக்கு?...'' நெஞ்சு படபடத்தது. அவள் முகத்தில்.. ஒன்றும் தெரியவில்லை. பெரிய ஞானி போல சீ.....

''ம்.... ம்...''

''என்ன, ம்... ம்...ன்னா நல்லாயிருக்கா, இல்லையா?''

ஒரு வெற்றுப் பார்வை பார்த்துவிட்டு தன் சீட்டிற்கு சென்று விட்டான்.

மற்றவர்களும் வந்துவிட விஜய் வேறு வழியின்றி சீட்டிற்கு வந்தான்.

தான் மிகவும் அற்பமாகி விட்டது போலவும், மிகவும் தாழ்ந்து போய் நிராகரிக்கப்பட்டு விட்டது போலவும் தோன்றியது விஜய்க்கு.

தன் இறுதி முயற்சியும் தோல்வி... இதைவிட எப்படி பட்டவர்த்தனமாகச் சொல்ல முடியும். அவள் தகுதிக்கு 'ஐ லவ் யூ' என்றெல்லாம் விடலை மாதிரி சொல்லிக் கொண்டிருக்க முடியாது என்று பட்டுத்தான் சிறுகதையாக்கி அது பிரசுரமுமாகி, படித்தும் விட்டாள். இனி



"என்ன இவரு 'கதை, திரைக்கதை, வசனம் தவிர கதைச்சுருக்கம்னும் டைட்டில்ல போட்டுக்கிட்டிருக்காரே?"

"அந்தப் படத்்தோட பாட்டுப் புத்தகத்துல வர்ற கதைச் சுருக்கத்தையும் அவரே எழுதினாராம், அதான்!"

- ராஜாராம்

என்ன? எல்லாம் அவுட்.

அன்று அவன் அரைநாள் லீவு. அடுத்த நாள் வந்த பொழுது டீ நேரத்தில் ஒரு சாதாரண ஆபீஸ் விஷயத்தைக் கேட்க வந்த கவிதாவிடம் பேசாமலேயே இருந்தான்.

படட்டும்... அவனுக்கும் அவமானம், உதாசீனப் படுத்தப்படுதல் என்றால் என்ன என்று புரி யட்டும்... மண்டைக்கனம் பிடித்தவள்.....

அடுத்த வாரம்.. சூரியன் பத்திரிகை வரும் அதே நாள் மீண்டும் போன்.

"ஹலோ... விஜய் ஹியர்..."

"விஜய்... உன் கதைக்கு ஏகப்பட்ட பாராட் டுகள்...."

"என்ன? சொல்லு ராஜேஷ்..."

"மொத்தம் மூணு லெட்டர்ஸ்... வாசகர் கடிதத்துல வந்திருக்குடா... அதுல ஒரு லெட்டர் தங்கம்னு யாரோ எழுதியிருக் காங்க..."

விஜய் படபடப்புடன் திரும்பிப் பார்த் தான். கவிதா சீட்டில் இல்லை. இன்று லீவாம்.

"புக் உங்கிட்ட இருக்காடா?... சீட்லயே இரு... நான் இப்ப வர்றேன்...."

விஜய் ஓடினான். புத்தகத்தை வாங்கினான், பக்கங்கள் கதறின.

ஒன்று, இரண்டு... ஆ.... இதோ....

"'எனக்கொரு பதில் சொல்வாயோ,' கதை மிகச் சிறப்பாக இருந்தது. அந்தப் பெண் சம் மதம் சொல்ல மாட்டாளா? 'சொல்ல வேண் டும்' என நினைக்க வைத்து விட்டார் ஆசிரியர். அத்தகையவரைக் காதலிக்க அவளுக் குக் கொடுத்தல்லவா வைத்திருக்க வேண்டும்.

தங்கம், சென்னை - 4."

இளைஞர்கள் விழிப்படைய ஒரு தொடர் கதை.....

• கி. ராஜேந்திரன் அசத்திவிட்டார். இருபத்தி நாலு வாரங்கள் வந்த 'இருட்டு அரண்மனைகள்' தொடர் எங்கள் நெஞ்சத்தைக் கொள்ளை கொண்டது.

மொரட்டுப்பாளையம், கு.நா. இராஜேஸ்வரன்.

• சூர்யாகவாமி, நாகநந்தியை விட கொடியவராக இருக்கலாம். ஆனால் அவரது கைங்கர்யத்தால்(?) அல்லவோ சாயாவுடன் வாசகர்களாகிய நாங்களும் கிட்டத்தட்ட ஐரோப்பா முழுவதையுமே 'இலவசமாகச் சுற்றிப் பார்க்க முடிந்தது. ஆசிரியரின் அற்புதமான வர்ணனைகளைப் புகழ வார்த்தைகள் கிடைக்க வில்லை. அரஸ் கைவண்ணமும் அற்புதம்.

கீழ்நத்தம், தி.க.சங்கரநாராயணன்.



• 'இருட்டு அரண்மனை கள்' மிகவும் அருமை. "சமூக விரோதச் செயல் கள்" புரிவோர் பற்றி விளக்கமாகப் புரியும்படி எழுதியுள்ளீர்கள். இது மாதிரி தொடர்கதை மூலம் இளைஞர்களை விழிப்படையச் செய்ய எண்ணும் உங்கள் முயற்சியைப் பாராட்டுகிறேன்.

இராஜன் நகர், எம். சுதா.

• சமீபத்தில் தமிழில் எழுதப்பட்ட எந்தத் தொடர் கதையுமே சமுதாய நடப்புகளை இருட்டு அரண் மனைகள் அளவுக்கு உள்வாங்கி இருக்கவில்லை. கிரைம் தொடர்கதை என்பது வாசகர்களிடையே வெறும் திகிலை ஏற்படுத்தினால் போதும் என்ற நினைப்புடன், கதாசிரியரின் க்ரைம் சம்பந்தமான புத்திசாலித்தனத்தை வெளிச்சம் போட்டுக்காட்டும் ஒரு படைப்பு என்ற இன்றைய மோசமான இலக் கணத்தை கி.ரா உடைத்து சாதனை புரிந்திருக்கிறார். அதிலும், உலக நாடுகளின் கண்டனத்தைப் புறக் கணித்து, பசிபிக் கடல் பகுதியில் அணுகுண்டுச் சோதனை நடத்தும் பிரெஞ்ச் அரசாங்கத்திற்கு, அதன் உள்நாட்டில் ஒரு மனித அணுகுண்டை கற்பனையில் தம் கதையில் வெடிக்க வைத்துப் பாடம் புகட்டியிருப் பது பிரெஞ்ச் அரசின் அணுக் கொள்கையை எதிர்க் கும் அத்தனை பேருடைய ஆதங்கமாகவும் கி.ரா. மூலமாக வெளிப்பட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

திருநெல்லிக்காவல், ஆர். காமராஜ்.

நடராஜ் சிட்ஸ் (தமிழ்நாடு) பிரைவேட் லிமிடெட்

நடராஜ் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்,
நடராஜ் எஸ்டேட்ஸ் - (பண்ணை நிலம்).

"சாந்தி காம்ப்ளெக்ஸ்", 3வது மாடி, 26, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-600 017.

வட்டி 24% P.A. பரிசு 4% + 1% பென்ஷனர்

கிளைகள் : "இதயம் காம்ப்ளெக்ஸ்", 51- தெற்கு வீதி, (மாடி), திருவாரூர் - 610 002.
2-B - செல்வம் நகர், மெடிகல் காலேஜ் சாலை, தஞ்சாவூர் - 613 007.
1-B - காமராஜர் சாலை, (மாடி), காஞ்சிபுரம் - 631 501.

Phone : 434 20 98, 484 01 50



" சிறிய தொழில் ஒன்று ஆரம்பிக்க படாத பாடுபட்டேன். வங்கிகளில் எல்லாம் முயற்சித்துப் பார்த்தேன். ஆனால் நடராஜ் சிட்ஸ் நிறுவனத்தில் சந்தாதாரராகி, சீட்டு எடுத்து தற்பொழுது தொழில் முனைவராக ஆகி உள்ளேன்".

—கீதா கிருஷ்ணாநந்தன்


நடராஜ் சிட்ஸ்
அளிக்கும்
மிகப்பெரிய பரிசு திட்டம் 1996
விரைவில் எதிர்பாருங்கள்

" சிட் பண்ட் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ரூ. 5,000, ரூ. 10,000, ரூ. 15,000, ரூ. 25,000 சீட்டு குரூப்புகள் நடைமுறையில் உள்ளன. மேலும் புதிய பெரிய குரூப்புகள் ஆரம்பமாக இருக்கின்றன".

சீட்டில் சேர்கிறவர்களுக்கும்
அறிமுகப்படுத்துகிறவர்களுக்கும் பரிசு பொருட்கள்
காத்திருக்கின்றன.

☐ உங்கள் வாராந்திர விடுமுறை நாட்களை, மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் கழிப்பதற்கு அமைதியான, அழகான சூழ்நிலை

☐ சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலையில் காஞ்சீபுரத்துக்கு அருகே - பஸ்ரூட்டில் தயாராகிறது ஏமாற்றத்தை தவிர்க்க இன்றே முன்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளுங்கள்.





சிறுகதைத் தேர்வுக் கூப்பன்

கடந்த 7.1.96 கல்கி இதழ் தொடங்கி இந்த (28.1.96) இதழ் வரை வெளியான சிறுகதைகளில் எந்தச் சிறுகதையை நீங்கள் சிறந்ததாகக் கருதுகிறீர்கள்? சிறுகதையின் தலைப்பு, ஆசிரியர் பெயர் மற்றும் நீங்கள் அதைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தையும் சுருக்கமாக இரண்டே வரிகளில் எழுதியனுப்புங்கள்.

ஒவ்வொரு மாதமும் இப்படி நீங்கள் தேர்ந்தெடுக்கும் சிறுகதையை எழுதிய ஆசிரியருக்கும் சிறப்புப் பரிசு; அதற்கான காரணத்தை இரண்டே வரிகளில் எழுதினாலும் கச்சிதமாக எழுதும் ஒரு வாசகருக்கும் சிறப்புப் பரிசு!

இம்மாதக் கூப்பன் அனுப்பக் கடைசி தேதி : 8.2.96

ஜனவரி மாத சிறுகதைத் தேர்வுக் கூப்பன்

சிறந்த சிறுகதை : ....

....

கதாசிரியர் பெயர் : ....

தேர்ந்தெடுக்கக் காரணம் : ....

....

....

....

என் பெயர் : ....

முகவரி : ....

....

....

அலுவலகத்துக்கு நேரடியாக போகும் பஸ் வரச் சில நிமிடங்களே உள்ளன. அதை விட்டால் எல்லாமே தலைகீழ்.

நாராயணன் வேகமாய்ப் போகப் போகப் பை தொடையில் இடித்துக் கொண்டே வந்தது. அதன் பட்டை தோள் எலும்பைக் குத்தியது. வியர்வை கண்ணுக்குள் இறங்கிக் கரித்தது.

"அய்யா.. சாரு" நாராயணனின் வேகத்திற்கு ஏற்ப ஒரு குரல் துரத்தி வந்தது. அனிச்சையாய் நின்றான்.

அந்த மனிதன் கிராமத்தானின் தோற்றத்தில் இருந்தான். ஒரு பழைய போர்வையைக் கழுத்தில் தொங்கவிட்டிருந்தான். போர்வையில் உள்ள நிறம் அதனை நெய்த போது உள்ள நிறமாக இருந்திருக்க முடியாது.

நாராயணன் நின்றது அவனுக்குத் தெம்பைக் கொடுத்திருக்க வேண்டும். அசட்டுத்தனமாய்ச் சிரித்தான். ஏதாவது தரச் சொல்லும் பாவனையில் தலையால் அபிநயித்தான்.

நேரம் ஆகிவிட்டது...

துழாவியதில் ஏதோ ஒரு நாணய வில்லை அகப்பட்டது. என்ன என்று கூடப் பார்க்கவில்லை.. அவனை நோக்கி வீசிவிட்டு மீண்டும் வேகமாக நடந்தான்.

பஸ்ஸில் டிக்கட்டிற்குக் காசு எடுக்கப் போகும் போது ஒரு ரூபாய் நாணயம் பையில் இல்லாமல் போனது தெரிந்தது. அதையா அவனுக்குப் போட்டோம். நாராயணனின் பையில் இதர தக்கையான வில்லைகளும் இருந்தன. அவை சட்டைப் பையின் இதர காகிதங்களுக்குள் சிக்கிக் கொண்டதால் அகப்பட்டது ஒரு ரூபாய் நாணயம்தான்.

நாராயணனுக்கு அது மிகையான தருமத் தொகையாகப் பட்டது. பஸ் புறப்பட்டு வேகம் எடுத்ததில் நாராயணன் அனைத்தும் மறந்தவனானான்.

அடுத்த நாள்.....

பஸ் ஸ்டாண்டில் இன்னும் பஸ்ஸைக் காணோம். "சாமீ... நான் பண்ருட்டிங்க.. ராத்திரி கும்மோணத்துலேந்து இங்க வந்து இறங்கறப்போ பைய எவனோ அடிச்சுட்டுப்,

போயிட்டான். ஊருக்குப் போவணும்."

அவனேதான்... அவனுடைய முகம் மறந்து போயிருந்தாலும் அவன் போர்த்தியிருந்த பிரசித்தி பெற்ற போர்வை மறக்கக் கூடியதா? நேற்று காலை என்னிடம் காசு வாங்கி விட்டு இன்றைக்கு விடிகாலை வந்ததாகப் புளுகு வதைப் பார்.

"நேத்திக்கு நா குடுத்த ஒரு ரூபாய என்ன பண்ணே...?" நாராயணன் அவனை ஸ்தம்பிக்க வைப்பதற்காகக் கேட்டான். ஆயிரம் பேரிடம் ஒருவன் பிச்சை எடுக்கலாம். ஆயிரம் பேரில் ஒரு ரூபாய் போட்டவனை நிச்சயம் நினைவு படுத்திக் கொள்ள முடியும்.

அவன் நாராயணனின் கேள்விக்காக அலட்டிக் கொள்ளவில்லை. தன்னை ஒருவன் மடக்கி விட்டானே என்னும் குற்ற உணர்ச்சி அவன் முகத்தில் ஏற்படவில்லை.

"ஆமா, ஒரு ரூபாய மாசம் பூராவுமா வச்சிருப்பாங்க. நேத்தியே காலி. பசிக்குது சாமி. மயக்கமா இருக்கு ராஜா..." அவனுடைய காதில் கறுத்துப் போன முனையுடன் பாதிப் பீடி ஏவுகணை போலச் சாய்வாக அமர்ந்திருந்தது.

அவன் சிரித்தான். அதே அசட்டுச் சிரிப்பு.

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்



நாராயணன் பையைத் துழாவுவதை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். இன்னும் ஒரு ரூபாயா.

"பசிங்கறே... பீடி புடிக்கறே?" பேசிக் கொண்டே துழாவிய நாராயணனின் கைகளுக்கு நாணயம் அகப்படவில்லை. அவசரமாய் நாராயணன் கையை எடுத்து விட்டு நகர்ந்தான். அவனுடைய பஸ் வந்து விட்டது...

"சாமீ.. சாமீ.." என்று உடன் ஓடி வந்தவன் ஈடுகொடுக்க முடியாமல் நின்று போனது, தேய்ந்த ஒலியின் மூலம் தெரிந்தது. "தத்" என்று அவன் துப்பியது மட்டும் கேட்டது.

அந்த அவசரத்திலும் நாராயணனுக்கு அவமானமாய் இருந்தது. நேற்று ஒரு ரூபாய் போட்ட நன்றி கூட இல்லாமல் 'தத்' நாராயணனைப் பார்த்துத்தான் துப்பினான் என்பது யாரும் அறியாமல் இருக்கலாம்.

ஆனாலும் பஸ்ஸில் அமர இடம் கிடைத்தும்கூட அவனால் அதற்கான சுகத்தை அனுபவிக்கும் நிலைக்கு மனதைக் கொண்டு வர முடிய வில்லை.

மரியாதை அற்ற பயல். சாயங்காலம் வரட்டும்..'

அன்று மாலை பஸ் ஸ்டாண்ட் முழுதும் தேடினான். இல்லை. சாயங்காலங்களில் வேறு ஏதேனும் உபரியாய்த் தொழில் வைத்திருக்கிறானா. வேறு ஏரியாவா?

தொலைகிறான்.

அடுத்து இரண்டு நாட்கள் அவன் பிச்சை கேட்ட போது நாராயணன் அவனைப் புறக்கணித்து விட்டுப் போனான். நாராயணன் இப்போது நெஞ்சில் பாரம் அற்றவனாக ஆனான்.

திங்கட் கிழமை.. மாமூலாய் வரும் டிரைவர் கண்டக்டர்கள் இன்று வர மாட்டார்கள். ஆஃப் ட்யூட்டி ஆட்கள்தான். அவர்கள் சரியாக வண்டியை எடுத்து விடுவார்கள். ஆபீசிலும் பங்சுவாலிடி இன்ஸ்பெக்ஷன் என்ற பெயரில் ஒரு குழு புறப்பட்டிருக்கிறது. பாண்டிச்சேரியில் தாமதமாய் வந்த பெண்ணிற்கு ஸ்தலத்திலேயே சஸ்பென்ஷன் ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். போன வாரம் தான்.

நாராயணன் நடையை எட்டிப் போட்டான்.

"சாமீ.." யார்? அட இவன் வேறு.. நாராயணன் நடந்தான்.

"அய்யா.. தொரை..." தொரையா... நாசமாப் போச்சு.

"அய்யா... ஒன்னத்தான..."

"..............."

"யோவ்... ஜோல்னாப் பை.. மனுசன் கத்தறானில்ல... யோவ்..."

நாராயணனுக்கு ஒரு நிமிடம் வெலவெலத்துப் போனது. சஸ்பென்ஷன், பங்சுவாலிடி அனைத்தும் மறந்து போனது. 'யோவ்... ஜோல்னாப் பை!'

'ராஸ்கல்... உன்னை...'

'ம்ஹூம்.. டயமாச்சு' என்று உள்ளே கூவிய குரலால் உந்தப்பட்டு பஸ் ஸ்டாண்டை நோக்கி ஓடினான்.

பஸ் லேட்டாகவே வந்தது. இடமும் போராடாமல் கிடைத்தது. மூடிய கண்ணிற்குள் 'யோவ் ஜோல்னாப் பை' என்று கூவியபடி அவன் நடனம் ஆடினான். பல்லை நெறித்த நாராயணனின் நெற்றி நரம்பு துடித்தது.

அன்றைக்கே அவனைத் துவட்டியிருக்க வேண்டும்.. விட்டதில் துளிர்த்துப் போய் விட்டது. என் முகமும், தோற்றமும், என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்ற தைரியத்தைத் தருகிறதா? ஒருநாள் காசு போட்டது தப்பாய்ப் போயிற்று. இன்றைய உலகத்தில் காசு போடாதவன் நல்லவன்.

அவனை மன்னிக்கவோ, மறப்பதோ நடவாத காரியம். காலம் பூராவும் நாராயணன் என்றால் அவன் மிரள வேண்டும். யாராவது தெரிந்தவர்கள் இன்று காலை பார்த்திருப்பார்களா?

இன்றைக்கு அதிர்ஷ்டம் நாராயணனின் பக்கம் இருந்தது. பாடலி காண்டீன் வாசலில் அவன் யாரையோ யாசித்துக் கொண்டிருந்தான்.



காதலி : இன்னிலேர்ந்து இப்படி திரும்பி உட்கார் வோம்ன்னு எதுக்கு சொல்றீங்க ரமேஷ்...?

காதலன் : இன்னும் எவ்வளவு நாளைக்குத்தான் இந்தக் கடலையே பார்த்துக்கிட்டு இருக்கப் போறோம்ன்னு நீதானே சொன்னே நேத்து...?

— நெய்வேலி ஜீவீ

வெறியோடு அவனை நோக்கிப் போன நாராய ணனின் மூளைக்குள் மின்னல் அடித்தது. அவன் கண்ணில் படும் வகையில் சுவாதீனமாய் நாராயணன் நடந்து போனான். நாராயணனின் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை.

"சாமீய்..." நெருங்கி வந்தான்... 'வா மகனே..'

"என்னண்ணே... பண்ருட்டிக்குப் போகத் துட்டு வேணுமா?"

"அய்ய... ஆமாம் சாமீ... ஏதோ ஓம்பேரச் சொல்லிட்டு ரெண்டு இட்லி புட்டுப் போட் டுப்பேன்."

"ரெண்டே ரெண்டு இட்லியா... போதுமா?"

"பத்துமோ பத்தாதோ... அதுக்கு மேல கேட் டாலும் நீ வாங்கியா குடுக்கப் போறே?"

நாராயணனுக்குச் சந்தோஷமானது. அள வெடுத்தாற் போல எல்லாம் நடக்கும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை...

"சரி உள்ளாற வா... எம் பின்னாடியே..."

ஓட்டலில் யாருமே இல்லை... ரொம்ப சௌகரியமாய்ப் போயிற்று. நாராயணன் அமர்ந்த பின் எதிரில் அவன் அமர்ந்தான்.

"என்ன சார் வேணும்?" சர்வர் அவனை ஒரு மாதிரி பார்த்தபடி நாராயணனைக் கேட் டான்.

"என்ன ஒண்ணும் கேக்க வேணாம்... அண்ணனுக்கு என்ன வேணுமோ குடுங்க... நா பணம் தர்றேன்."

"நீங்க நல்லா இருக்கணும் சாமீ... ஏம்பா சூடா என்ன இருக்கு?" என்றான் கம்பீரமாய்...

சர்வர் பிடிப்பு இல்லாமல் கடமைக்கு ஒப்பு வித்தான்.

"சரி... ஆறு இட்லி மொதல்ல கொண்டா..."

ஆறு இட்லிக்குப் பின் தயக்கமாய் நாராய ணனைப் பார்த்தான். சும்மா சாப்பிடு என்பது போல் நாராயணன் ஊக்குவித்தான்...

பூரி வந்தது, மசால்வடை ஒன்று, மெது வடை ஒன்று, வெங்காய தோசை..."

எழப் போனவனை நிறுத்தினான் நாரா யணன்...

"இருங்கண்ணே... போண்டாவே சாப் பிடலியே... சர்வர் ஒரு செட் போண்டா குடுங்க..."

ஒன்றரைப் போண்டா தின்ற பின் திணற ஆரம்பித்தான். நாராயணனைப் பார்த்துச் சிரித் தான். இயலாமை தெரிந்தது.

"இருங்க.. இன்னும் கதம்ப பஜ்ஜி இருக்கு..."

"போறும் சாமீ... நா செஞ்ச புண்ணியம்... ரொம்ப நாளைக்கப்புறம் வயிறாரச் சாப்புட் டேன்..." கும்பிட்டான்.


"அப்படி சொன்னா ஆச்சா... கதம்ப பஜ்ஜி ஒண்ணு."

"ஐயோ சாமீ... தெம்பில்லேங்க... பொழச்சுக் கெடந்தா நாளைக்குப் பாத்துப்போம்..."

மாநாடும் மக்கள் கஷ்டங்களும்!

திருச்சி நகரில் தி.மு.க., அ.தி.மு.க. மாநில மாநாடுகள் நடைபெற உள்ளன. இதை விளம் பரப்படுத்தும் விதமாக இரு கட்சியினரும் போட்டி போட்டுக் கொண்டு சுவர் விளம்பரம் செய்துள்ளனர். நகரிலும் சுற்றியுள்ள பகுதி களிலும் உள்ள எல்லாப் பாலங்களுக்கும் கறுப்பு, சிவப்பு ஆயில் பெயின்ட் அடித்துள்ளனர். பாலங்களின் கைப்பிடிச் சுவர்களில் வெள்ளை நிறமே தெரியவில்லை. பாலங்களின் ஓரப்பகுதிகள் இரவு நேரங்களில் வாகன ஓட்டிகளுக்கு நன்கு புலனாவதற்காகவே பாலங்களின் கைப்பிடி கிரில் சுவர்களுக்கு வெள்ளை வர்ணம் அடிக்கிறார்கள். இதைப் புரிந்து கொள்ளாமல் அவற்றில் கறுப்பு சிவப்பு வர்ணம் பூசுவது எவ்வளவு அறிவீனம். இவர்கள் ஆட்சிக்கு வந்து மக்களுக்கு என்ன நன்மை செய்ய முடியும்? மேலும் மாநகராட்சியும் இதைக் கண்டு கொள்ளாதது மக்களுடைய பெரிய துரதிருஷ்டம்.

–சரவணபவன்



"பொழச்சுக் கெடக்கறதா... அயோக்கிய படுவா... இந்தப் பசியாலதான, இந்த வயித்துக் காகத்தான, மனுஷன் தராதரம் தெரியாம காலம்பற, 'யோவ் ஜோல்னாப் பை'யின்னே.. சாப்புடறா ராஸ்கல்..." நாராயணனின் குரலில் காரம் ஏறியது.

"அய்யோ... நா ஒங்களச் சொல்வனா..."

"சொல்லாமயா கேக்கறன்... சாப்புடு மரியா தையா... முடியாதுன்னே கொன்னுட்டேன்..."

பிரண்டுப் போய்ச் சாப்பிட்டவன் கண் ணீர் நீர் மல்க, நாராயணனின் கால்களில் தடா லென்று விழுந்தான்

"தப்புத்தான் சாமீ..."

ஹோட்டலில் கூட்டம் கூடியது... என்ன வென்று கேட்டவரை லட்சியம் செய்யாமல், கூட்டத்தை விலக்கிக் கொண்டு, காசைக் கொடுத்துவிட்டு நடந்தான் நாராயணன். அவன் மனம் நிறைந்திருந்தது. இருந்த ஒரே யொரு ஒரு எதிரியையும் விரட்டிய திருப்தி...

அடுத்த நாள் காலை...

பஸ்ஸை நினைத்து ஓடிய நாராயணனை இழுத்தது அந்தக் குரல்... "சாமீ.. ஓட்டல் சாமீ.."

நாராயணனுக்கு மயக்கமாய் வந்தது...

மெய்சிலிர்த்த அனுபவம்:



ஊர் மறந்தேன்; பேர் மறந்தேன்!

'**வா**ழ்வனைத்தும் யோகம்' என உலக அரங்கிற்குப் பல பேருண்மைகளைக் கூறிய ஸ்ரீ அரவிந்தர்-ஸ்ரீ அன்னை பற்றி என் கணவர் சொல்லி அறிந்திருந்தேன். சில புத்தகங்கள் படித்தும் தெரிந்து கொண்டேன். ஆனால் பாண்டிச்சேரி அரவிந்தர் ஆசிரமத்துக்கு நேரில் போனதில்லை.

முதல் முறையாக அங்கு செல்லும் வாய்ப்பு 1993 பிப்ரவரியில் கிடைத்தது. அங்கு செல்லும் அன்று ஸ்ரீ அன்னையின் பிறந்த தின விழா. அதிகாலை மூன்று மணிக்கே தயாராகி ஆசிரம வாசலை அடைந்தோம். சரியாக நான்கு மணிக்கு விளக்குகள் ஒளிர தரிசனம் ஆரம்பமானது. எல்லோருக்கும் வாய்ப்புத் தரும் வகையில் தரிசன நேரம் குறித்து 'நுழைவு அட்டை' கொடுத்து விட்டார்கள். நிறைய கூட்டமானாலும் அமைதியும் கட்டுப்பாடும் நிலவியது.

பூரண அமைதி தவழ்ந்த ஆசிரம சூழலில் எனக்குள்ளே ஓர் இனிய மாற்றம் ஆரம்பமாவதை உணர்ந்தேன். கைகளிலிருந்த ஸ்ரீ அன்னையின் நூலைப் புரட்டினேன்:

'எப்போதும் அன்பு காட்டு; காரசாரமான கைப்பான விமர்சனங்களை விடு; எதிலும் தீமையைப் பார்க்கும் பழக்கத்தைத் தவிர். எங்கும் இறைவனது அருளின் பிரசன்னத்தையே பார்ப்பது என்று உறுதி செய்துகொள். அப்போது ஓர் அற்புதம் நிகழ்வதைக் காண்பாய்- உன்னுள்ளே மட்டுமில்லாமல் உன்னைச் சுற்றிலும் அமைதி, மகிழ்ச்சி நம்பிக்கை- இவை கொண்ட ஒரு சூழல் உருவாகும். உன் உள்ளத்திலும் அமைதியும் மகிழ்ச்சியும் நிரம்பும்.'

- இந்த வார்த்தைகள் கண்ணில் பட்டு, மனத்தை ஊடுருவின.


ஆசிரமத்துக்குள் கால் பரவியபோது 'மெத்மெத்' தென்ற பஞ்சு மேகங்களிடையே இறங்குவது போல் உணர்வு. நம் இதயங்களில் தூய தெய்வீக அன்பை வெள்ளமாகப் பாய்ச்சி, நம்மை ஆன்மீகத்தின் சிகரங்களுக்கும் ஆழங்களுக்கும் விசாலங்களுக்கும் இட்டுச் சென்ற மகான்கள் வாழ்ந்த அறையருகே வந்தபோது... நான் என் ஊர் மறந்தேன்; பேர் மறந்தேன். கண்களில் ஆனந்தம் வழிந்தது. கண்கூசும் திவ்ய ஒளி என்மீது கவியும் உணர்வு... லிஸ்ட் போட்டு வைத்திருந்த லௌகீக ஆசைகள் கழன்று கொள்ள, மனம் நல்லன-வேண்டும் என்று உறுதியாக இறைஞ்சியது.

அங்கிருந்த சாதகர் ஒருவர் என் கையில் அன்னையின் ஆசி அட்டையும் மலர்களும் தந்த போது மனங்குளிர பெற்றுக் கொண்டேன். அழகும் ஆனந்தமும் மிக்க அந்த ஆசிரம தரிசனத்துக்குப் பின் என் நிறை வாழ்வுக்குத் தெளிவான பாதை அமைந்தது.

-எஸ். மாலதி, முசிறி.

(அனுபவங்கள் தொடரும்)

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி; பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.



உண்மை ★ உறுதி ★ உயர்வு ★
எங்கள் புன்னகை மன்னரின்
நினைவுகளோடும்
நேர்மையோடும்
உண்மையோடும்
உறுதியோடும்
உயரங்களை நோக்கி
எங்கள் பயணம் தொடர்கிறது
CANVAS / BJ / 4034 / 95-96
வணங்குகிறோம் உங்களை
வாழ்த்துங்கள் எங்களை
Balu Ayyappan
Proprietor, Balu Jewellers
Chairman, Pamban Oil Mills P. Ltd.
P. Purushothamasundaram
Executive Director
Pamban Oil Mills P. Ltd.
K.G. Bhaskaran
Managing Director
Pamban Oil Mills P. Ltd.
Balu Jewellers
POM
Pamban Oil Mills P. Ltd.
Balu Finance

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

